# நிழல்கள் சுடுவதில்லை



இந்துமதி

O3-3N M3
CONNEMARA PUBLIC LIBRARY MADRAS
7 AUG 1981

1

மூன்று மணி அடித்ததும் வகுப்பை விட்டு வெளியில் வந்தாள் ஹரிணி. அடுத்த வகுப்பு மிஸ்ஸ் மானுவலினுடையது. அவள் அன்றைக்கு எமர்ஸனின் 'தி அமெரிக்கன் ஸ்காலர்' நடத்தப் போவதாகச் சொல்லியிருந்தாள்.

ஹரிணி முன்பே ஒரு முறை அவரின் அந்தச் சொற்பொழிவைப் படித்திருக்கிறாள். அருமையான ஒன்று. அதை மிஸ்ஸ் மான்யுவல் நடத்திக் கேட்க வேண்டும்.

அவள் நடத்துகின்ற ஒவ்வொன்றிற்கும் ஒரு தனி அழகு வரும். அதுவும் எமர்ஸனை நடத்தினால் நாள் முழுவதும் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் போலத் தோன்றும்.

மான்யுவலுக்கு எமர்ஸனையும், எமிலி டிக்கின்ஸனையும் மிகவும் பிடிக்கும் என்பது அவள் நடத்துவதிலிருந்தே புரிகிறது. எமிலி டிக்கின்ஸனின் ஐந்நூறு கவிதைகளையுமே படித்திருப்பாள் போலிருக்கிறது.

தினமும் புதுப்புது கவிதைகளாகச் சொல்லுவாள். நடத்துகின்ற எல்லாவற்றிலும் எமிலி டிக்கின்ஸனின் ஏதாவது ஒரு கவிதை புகுந்துவிடும்.

அந்தக் கவிதைகளுக்கு அவள் தரும் விளக்கங்களைக் கேட்டே ஹரிணிக்கும் அந்தக் கவிதைகளில் ஆர்வம் வந்துவிட்டது. எமிலி டிக்கின்ஸனைத் தேடித் தேடிப் படிக்க வைத்தது.

அவற்றைப் படிக்கப் படிக்க அந்தக் கவிதைகள் மிஸ்ஸ் மான்யுவலைக் கவர்ந்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை என்று

தோன்றிற்று. மிஸஸ் மான்யுவலின் மூலமாகவே ஹரிணி நிறையப் படிக்க ஆரம்பித்து விட்டாள்.

பாடங்களைத் தவிர ஹென்றி ஜேம்ஸ், ஜாக் லண்டன், ஸ்டீபன் க்ரேன், மெல்வில், நாத்தானியல் ஹாத்தார்ன் என்று எதையாவது படித்துவிட்டு ராத்திரி ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் படுத்துக் கொள்வது வழக்கமாகிவிட்டது.

முந்தின நாள் இரவுகூட எட்கர் ஆலன் போவின் சிறுகதை ஒன்றைப் படித்துப் புரியாமல் மூடி வைத்திருக்கிறாள். அன்று ராத்திரி அதை மறுபடியும் ஒரு முறை படித்துவிட்டும் புரியாமல் போகவே மிஸஸ் மான்யுவலிடம் கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டே கெமிஸ்ட்ரி டிபார்ட்மெண்டிற்கு வந்தாள் ஹரிணி.

ராதிகா இவளைப் பார்த்துவிட்டு வகுப்பிலிருந்து எழுந்து வந்தாள்.

"என்ன ஹரிணி, க்ளாஸ் இல்லையா?" என்று கேட்டாள்.

"நான் போகவில்லை. மிஸஸ் மான்யுவலின் க்ளாஸை மிஸ் பண்ணிவிட்டு வந்திருக்கிறேன்."

"அவங்களோட க்ளாஸை மிஸ் பண்ணிவிட்டு வரும்படி என்ன முக்கியமான வேலை ஹரிணி?"

"கொஞ்சம் வெளியில் போக வேண்டும் ராதிகா. கூட வர்றியான்னு கேட்கலாம்னு வந்தேன்."

"காலேஜ் விட்டுமே போகலாம். எனக்கு இப்போது ரெகார்ட் சப்மிட் பண்ண வேண்டுமே..."

"இன்றைக்கு அப்பாவின் ஐம்பதாவது பிறந்த நாள் ராதிகா. முன்பே தெரிந்திருந்தால் ஏதாவது வாங்கி வைத்திருந்திருப்பேன். இன்று காலையில்தான் சொல்கிறார். ரெடியாக இரு. ஐந்து மணிக்கு வெளியில போக வேண்டும் என்று வேறு சொல்லியிருக்கிறார். காலேஜ் விட்டதும் போனால் லேட்டாகி விடுமே."

"பத்து நிமிஷம் இரேன். ரெகார்ட் மட்டும் சப்மிட் பண்ணிவிட்டு வந்து விடுகிறேன்."



"சரி. இங்கேயே இருக்கேன். சீக்கிரம் வா."

அவள் போவதையே பார்த்துக் கொண்டு எதிரில் புல்வெளியில் உட்கார்ந்து கொண்டாள் ஹரிணி. அவளால் பத்து நிமிடத்தில் வர முடியாது என்று தெரியும். அரை மணி நேரமாவது ஆகிவிடும். ஒழுங்காக மிஸஸ் மான்யுவலின் வகுப்பிற்கே போயிருந்திருக்கலாம் என்று தோன்றிற்று. ஐந்து மணிக்குப் பின் அப்பாவையே அழைத்துக் கொண்டு போய் அவருக்குப் பிடித்தமான நிறத்தில் பாண்ட்டையும் ஷர்ட்டையும் வாங்கித் தந்திருக்கலாம்.

இதுவரை அவளுக்கு ஷர்ட்டும் பாண்ட்டும் வாங்கிப் பழக்கமில்லை. அப்பாவிற்கு எவ்வளவு துணி வாங்க வேண்டும் என்பதுகூடத் தெரியாது. அப்பா தொளதொளவென்றுதான் ஷர்ட் போட்டுக் கொள்கிறார். அதுவும் வெளிர் மஞ்சளும் பிரவுனுமாகத்தான் இருக்கும்.

அவர் போட்டுக் கொள்ளும் எந்த ஷர்ட்டுமே அவளுக்குப் பிடித்ததில்லை. அப்பாவின் உயரத்திற்கு, அந்த நிறத்திற்கு, கறுப்பில ஆழ்ந்த நீலத்தில் உடுத்திக் கொண்டால் எத்தனை அழகாக இருக்கும் என்று தோன்றிற்று. பார்க்கப் போனால் அப்பாவிற்குப் பரிசாக இதுவரை எதையுமே தந்ததில்லை.

அப்பா வாங்கித் தருகிற சின்னச் சின்னப் பொருள்களில் தனக்கு மனம் மகிழ்வதுபோல அப்பாவிற்கும் ஏதாவது வாங்கித் தந்தால் அவர் மனமும் மகிழ்ச்சி அடையுமே என்பது இத்தனை நாள் வரையில் தனக்குத் தோன்றாமல் போயிற்றே... அப்பாவிற்குச் செய்ய யார் இருக்கிறார்கள்?

அவள் பிறந்ததிலிருந்தே அம்மாவின் முகத்தைப் பார்த்ததில்லை. அம்மாவின் பாசமும் குடும்ப வாழ்க்கையும் அவளுக்குத் தெரியாத ஒன்று. அவளின் ஐந்து வயதுவரை அம்மாவின் தங்கையின் வீட்டில்தான் இருந்திருக்கிறாள். பின்பு ஸ்கூல் ஹாஸ்டல் வாசம்.

அப்பா சனிக்கிழமைகளிலோ, ஞாயிற்றுக் கிழமைகளிலோ அவளை வந்து பார்ப்பது உண்டு. ஞாயிற்றுக் கிழமை

கனில்தான் அதிகம் வந்திருக்கிறார். காலையில் எட்டுமணிக்கே வந்து விடுவார்.

அவள் குளித்துவிட்டு அவருக்காகக் காத்திருப்பாள். அவர் வருவதற்கு நேரமானால் ஹிண்டு பேப்பரைத் திருப்பி சினிமாக் 'காலத்'தைத் தேடி அன்றைக்கு எந்தத் தியேட்டருக்குப் போகலாம் என்று பார்த்துவைத்துக் கொள்வாள்.

சின்ன வயதில் தியேட்டருக்குப் போவதும் சினிமா பார்த்துவிட்டு ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு பீச்சிற்குப் போவதும் சந்தோஷமான விஷயமாகத்தான் இருந்தது. அன்றைக்கு முழுவதும் படிக்க வேண்டாம்.

வேலை எதுவும் செய்யாமல் நிம்மதியாக அப்பாவின்கூட இருக்கலாம் என்பதே சந்தோஷமாக இருக்கும். அதுகூட சில சனிக்கிழமைகளில் நின்று போய்விடும்.

அப்பா ஹாஸ்டலுக்கு வந்து அந்த வாரம் வர முடியாது என்பதைத் தெரிவித்துவிட்டுப் போய்விடுவார். அவர் ஊருக்குப் போனால் ஒரு வாரத்தில் திரும்ப முடியாது. இரண்டு வாரமாகிவிடும். அவர் திரும்பி வரும்போது தனக்காக என்ன வாங்கிக் கொண்டு வரப் போகிறார் என்கிற நினைப்பில் கழியும்.

அப்பாவிற்குச் செல்கிற ஊர்களில் வெளியில் போகக்கூட நேரம் கிடைக்காது என்பதும் பொருள்களைச் சென்னைக்கு வந்து பின்பே வாங்கி வந்து தந்ததும்கூட அவளுக்கு அவர் பின்னால் சொல்லித் தெரியும்.

அந்தப் பொருள்களில் ஆர்வம் இருந்ததெல்லாம் சிறிய வயதில்தான். ஒவ்வொரு வருஷமாக வயது ஏறும்போது நண்பர்கள் எல்லோரும் டிபன் பாக்ஸில் வகைவகையாக உணவு வைத்துச் சாப்பிடும்போது, வித்தியாசமாகத் தலைமுடியை அலங்கரித்தும் பின்னல் போட்டுக் கொண்டு வரும்போது, விதவிதமாகப் பாவாடையில் பூக்கள் தைத்துப் போட்டுக் கொண்டு வரும்போது அப்பா வாங்கித் தரும் பொருள்களில் ஆர்வம் குறைய ஆரம்பித்தது.



அம்மாவிற்காக மனது ஏங்க ஆரம்பித்தது.

''நீ எம்ப்பா கல்யாணம் பண்ணிக்கலே?'' என்று ஒருநாள் அப்பா அவளைப் பார்க்க வந்தபோது கேட்டாள்.

''எதுக்கு கேக்கறேம்மா''? என்று கேட்டார் அவர்.

''நீ முதல்லே பதில் சொல்லு.''

''அதுக்கு அவசியம் இல்லேன்னு தோணித்து. பண்ணிக்கலே.''

''நீ பண்ணிண்டு இருந்தால் எனக்கு ஒரு அம்மா கிடைச்சிருப்பா இல்லே...''

''இருக்கிறதும் போயிருந்திருக்கலாம், இல்லியாம்மா...''

அதன் அர்த்தம் வெகு நாட்கள் வரை புரியவில்லை. அப்போது அவளுக்குத் தேவையாக இருந்ததெல்லாம் அம்மா. அழகான அன்பான அம்மா மட்டும்தான். காலையில் காபி போட்டு எழுப்ப, பாடங்களைச் சொல்லித் தர, தலை பின்னி ஸ்கூலுக்கு அனுப்ப ஒரு அம்மா...

அவளுக்கு ஹாஸ்டல் வெறுத்துப் போயிற்று. அந்த இடத்தின் இரைச்சலும், அமைதியின்மையும், ஒட்டுதல் இல்லாமல் அமைந்து போன வாழ்க்கையும் வெறுத்துப் போய் அப்பாவை நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள். அப்பாவுடன் கோபித்துக் கொண்டு அவர் அவளைப் பார்க்க வரும் நாட்களில் எங்காவது நண்பர்கள் வீடு என்று கிளம்பிப் போய் அவரை ஆறு மணிவரை காத்திருக்கச் செய்ததும் அப்பா புரிந்து கொள்ள ஆரம்பித்தார்.

''கொஞ்சம் பொறுத்துக்கோ ஹரிணி. நான் மட்டும் என்ன பண்ணுவேன் என்று சொல்லு. ஒரு வீட்டைப் பார்த்து உன்னையும் அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்று எனக்கும் ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனால் எப்படிப் போக முடியும்? இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்கோ. எனக்குப் ப்ரமோஷன் கிடைக்கும். அப்புறம் பர்மெனண்ட் மெட்ராஸ்தான். ஊரே போக வேண்டாம்.

அப்போ நிச்சயமாக வீடு பாக்கறேன். உன்னைக் கொண்டு போய் அங்கே வைத்துக் கொள்வேன். உன்னை ஹாஸ்டலில் விட்டுவிட்டு நான் மட்டும் சந்தோஷமாவா இருக்கேன்மா?

"என் ரூம்லே எனக்கு நிம்மதியாவா இருக்க முடியும்? உனக்காவது கூட பேச சிரிக்க பிரெண்ட்ஸ் இருக்காங்க. எனக்கு இந்த வயசுலே பேசி சிரிக்கக்கூட முடியலைம்மா. உன்னைத் தனியா விட்டுட்டு எனக்கு மட்டும் சிரிக்கவா முடியும்... இன்னும் கொஞ்சநாள் பொறும்மா..."

அந்தக் கொஞ்ச நாட்கள் நாலு வருஷமாகிவிட்டது. அவள் கல்லூரியில் சேர ஆரம்பித்தபோது அப்பாவே மயிலாப்பூரில் இடம் பார்த்தார். கெஸ்ட் ஹவுஸ் மாதிரி ஒரு இடம். ஒரு பெரிய பங்களாவின் பின்னால் இருந்த சின்ன இடத்திற்கு அப்பா அவளை அழைத்துக் கொண்டுவந்து காண்பித்தார். அவளுக்கு அந்த இடம் பிடித்துப் போயிற்று.

ஒரு படுக்கை அறை, ஒரு சின்னச் சமையலறை, அவ்வளவுதான். அப்பா தன் ரூமைக் காலி பண்ணிக் கொண்டு வந்தார். அவருடன் கூடவே ஒரு கட்டிலும், மேஜையும், ஒரு மர பீரோவும் வந்தது.

ஹரிணியை அழைத்துக் கொண்டுபோய் நான்கு கூடை நாற்காலிகளை வாங்கிப் போட்டார். சின்னச் சின்ன விஷயங்களாக — வீட்டிற்குத் தேவையானவைகளாக — பார்க்கும் போதெல்லாம் வாங்கிக் கொண்டு வந்தார். "லஸ் திரும்பினதும் பிளாட்ஃபாம் ஓரத்திலே நிறைய ஷெல்ஃப் போட்டு வித்துண்டு இருந்தான். நேற்றுக்கூட பாத்ரூமிலே ஷெல்ஃப் இல்லைன்னு சொன்னியே. அதைப் பார்த்ததும் வாங்கணும்னு ஞாபகம் வந்து வாங்கிட்டேன். உனக்குப் பிடிச்சிருக்கா?" என்று கேட்டுக் கொண்டே காண்பித்தார்.

"நன்றாக இருக்குப்பா. இதுக்கு வெள்ளைப் பெயிண்ட் அடிச்சா இன்னும் நன்னு இருக்கும்."

"வெள்ளை பெயிண்ட் அடிச்சு விக்கலையேம்மா?"



"நாம அடிச்சுகிட்டா போச்சு."

அடுத்த நாள் அவர் வரும்போது கூடவே வெள்ளை நிற பெயிண்டும் ஒரு பிரஷ்ஷும் வந்து சேர்ந்தது. அவள் காபி கலந்து தந்ததுமே மர ஷெல்ஃபை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். அப்போது அவரைப் பார்க்கையில் குழந்தை ஒன்று கையில் பிரஷ்ஷுடன் பேப்பரில் வரைந்து கொண்டிருப்பது போலப் பட்டது.

"குடுங்கப்பா. நான் பண்ணறேன். நீங்க போய் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கோங்க."

"உனக்கு ஏன்மா வீணா கஷ்டமெல்லாம். கையெல்லாம் கறை ஆயிடும்."

அப்பா அவளை எந்த வேலையும் செய்ய விடமாட்டார் என்பது தெரியும். அருகிலேயே உட்கார்ந்து அவர் முடிக்கும் வரை பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நீ வேறே எதுக்கும்மா கூடவே உட்கார்ந்துண்டு இருக்கே. போய் காலேஜ் ஒர்க் எதுவாவது பாரேன்."

"வேலை எதுவும் இல்லேப்பா."

"அப்ப படியேன்."

"படிக்கவும் எதுவும் இல்லைப்பா."

அவர் பிரஷ்ஷினால் வெள்ளைக் கோடுகளை இழுத்துக் கொண்டே இவளைப் பார்த்தார்.

"என்னப்பா அப்படிப் பாக்கறீங்க?"

"ஒவ்வொரு சமயம் உன்னைப் பார்த்தா எனக்குக் கஷ்டமா இருக்கும்மா."

"என்ன கஷ்டம்? நான் சந்தோஷமாத்தானே இருக்கேன்."

"என்னவோ தெரியலை. கொஞ்ச நாளா உனக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைக்கணும்னு தோணிக்கிட்டிருக்கு. நான் பார்த்தால் உனக்குப் பிடிக்கணுமே. நீ லவ் மேரேஜ் பண்ணிக்கோம்மா. உனக்குப் பிடிச்ச மனுஷனை நீயே தேர்ந்

தெடுத்துக்கோ. நான் எதுவும் சொல்ல மாட்டேன். அவன் யாராக இருந்தாலும் பரவாயில்லை. எந்த ஜாதியா இருந்தாலும் பரவாயில்லை. உன் மனசுக்குப் பிடிச்சிருந்தா அதுவே போதும். கொஞ்சம் படிச்சவனு உன்னை வெச்சுக் காப்பாத்தறவனு இருந்தால் போதும்.''

''என்னப்பா இதையெல்லாம் சொல்றீங்க? என் கல்யாணத்துக்கு என்ன அவசரம் இப்போ?''

''உண்மையாத்தான் சொல்றேன். யாரையாவது லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிக்கோங்கறேன். மனசுக்குப் பிடிச்சவங்களோட ஒரு நாள் வாழ்ந்தால்கூடப் போதும்மா, ஜென்மம் முழுசும் அசைபோடக் கூடிய நினைவுகளோட ஒரு நாள் வாழ்ந்தால்கூடப் போதும்.''

''அம்மா ஞாபகம் வந்திருச்சாப்பா...''

''ஞாபகமா? அவ என் கூடத்தானே இருக்கா.''

''என்னப்பா சொல்றீங்க?''

''ஆமாம்மா. இப்ப நீ வந்ததுக்கு அப்புறம்தான் அவளோட நான் பேசறதில்லை. முன்னாடி எல்லாம் மானசீகமா அவகிட்டேதான் பேசுவேன். உடம்பாலேதான் அவ என்னை விட்டுப் போயிட்டா. சாவு என்பதே ஒரு தற்காலிகமான பிரிவுதான்னு எனக்குப் படறது. இன்னும் கொஞ்ச நாள்தான். உனக்கு ஒரு வழி பண்ணிட்டேன்னு நான் அவகிட்டே போயிடுவேன்''.

''அப்படியெல்லாம் பேசினால் நான் அழுவேன்.'' அவளின் பயம் கலந்த பார்வை அவரின் மனத்தை என்னவோ செய்ய அவர் மெல்லக் குனிந்து அவளின் தோளைத் தொட்டு, ''சீ போடி பைத்தியம். சொல்றதெல்லாம் நடக்கப் போறதா? இல்லை, நடக்கறதைத்தான் சொல்றோமா? அப்படி ஏதாவது நடந்துட்டால் தைரியமா இருக்க உனக்குத் தெரியணும்னு சொன்னேன். அழுதுட்டு நிக்கக் கூடாது. எதையும் எதிர்த்துப் போராடத் தெரியணும். தனியா நிற்கவும் தெரியணும். தைரியமா இருக்கத் தெரியணும். பயப்படக் கூடாது''.



''அதெல்லாம் எனக்குத் தெரிய வேணும். பெயிண்ட் பண்ணினது போதும். சாப்பிட வாங்க.'' அவர் எழுந்து வந்தார். அவளைக் கலகலப்பாக்க ஏதேதோ பேசினார். அப்போதுதான் அடுத்த நாள் அவரது ஐம்பதாவது பிறந்த நாள் என்பதைச் சொன்னார். அவர் சொன்னதைக் கேட்கும் போது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''ஐம்பது வயசா...!''

''ஆமாம்மா. ஐம்பது வயசுதான்.''

''இந்த வயசுலே எவ்வளவு நன்னா இருக்கீங்கப்பா நீங்க!''

''என்ன நன்னாயிருக்கேன்?''

''வெள்ளையா ஜம்முன்னு இருக்கீங்க. ஐம்பது வயசுக்கு தலை கொஞ்சம்கூட நரைக்கலையேப்பா... யாரும் நாற்பது நாற்பத்து இரண்டுக்கு மேல சொல்லமாட்டா.''

''நான் என்னம்மா அழகு? உங்கம்மாவை நீ பார்த்திருந்தால் இப்படிச் சொல்லவே மாட்டே...''

''அம்மா அவ்வளவு அழகா இருப்பாளா?''

''ஆமாம், வெள்ளை வெளேர்னு மாவுப் பொம்மை மாதிரி இருப்பா. கண் இரண்டும் எத்தனை பெரிசு தெரியுமா? மூக்கு தீர்மையா இருக்கும். செதுக்கி வெச்ச மாதிரி இருப்பா. இப்போ எதுக்கும்மா அவளை நினைச்சுக்கணும்? நீ சாப்பிடு. நாளைக்குக் காலைல மட்டும் ஏதாவது சமைச் சாப்பிட்டுக்கலாம். சாயங்காலம் காலேஜிலிருந்து சீக்கிரமா வந்திடு. என்னோட ஐம்பதாவது பிறந்த நாளைக் கொண்டாட வேண்டாமா?''

''சரிப்பா.'' அவள் சொன்னபோதே அடுத்த நாள் அப்பாவிற்கு ஏதாவது வாங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். என்ன வாங்குவது என்று யோசித்தபோது அப்பா வெகு நாட்களாகக் கண்ணாடி ஃப்ரேமை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பது நினைவிற்கு வந்தது. கூடவே அதை எப்படியும் அப்பா வாங்கி

கொண்டுவிடுவார் என்றும் தோன்ற ஆழ்ந்த நீலத்தில் ஒரு பாண்ட்டும் ஷர்ட்டும் வாங்கத் தீர்மானித்து அன்றைக்குக் கல்லூரிக்கு வந்தாள் அவள்.

ஆனால் அப்போது ராதிகாவிற்காகக் காத்துக் கொண்டிருக்கும் நேரத்தில் கிளாஸையாவது கட் பண்ணாமல் இருந்திருக்கலாமே என்று நினைத்துக் கொண்டே நிமிர்ந்தபோது தூரத்தில் ராதிகா வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

## 2

அவர்கள் இரண்டு பேரும் ஆட்டோ பிடித்து லஸ்ஸிற்கு வந்தபோது நாலரை மணியாகி விட்டது. ராதிகா தனக்குப் பரிச்சயமான ஒரு கடைக்கு அவளை அழைத்துக் கொண்டு போனாள். அந்தக் கடைக்குச் சொந்தக்காரன் போலத் தோன்றியவன் ராதிகாவைப் பார்த்ததும் சிரித்துக் கொண்டே தன் இருக்கையைவிட்டு எழுந்து வந்தான்.

அவளருகில் வந்து 'ஹலோ' என்றான். ராதிகா பதிலுக்கு ஹலோ சொன்னாள்.

ஹரிணியை அறிமுகப் படுத்தினாள் ராதிகா. அவன் ஹரிணியைப் பார்த்துப் புன்னகை செய்து பின், "உங்களைக் கடைப் பக்கமே காணோமே!" என்று ராதிகாவிடம் கேட்டான்.

"வாங்க வேண்டிய அவசியம் இருந்தால் உங்க கடைக்கு வராமல் வேறு எந்தக் கடைக்கும் நான் போவதில்லையே!" என்று பதிலளித்தாள் அவள்.

"அம்மா அப்பா எல்லோரும் எப்படி இருக்கிறார்கள்?"

"நன்றாக இருக்கிறார்கள்."

"என்ன வாங்கப் போகிறீர்கள்?"

"ஷர்ட் பீஸ் வேணும்."



"நிறையப் புதிதாக வந்திருக்கிறது. பாண்ட் பிட்ஸ்கூட காட்டுகிறேன்..." என்று அவன் ஒவ்வொன்றாக எடுத்துக் காண்பித்தான்- ஹரிணிக்கு எதை எடுப்பது என்று தெரியவில்லை. அப்பா போட்டுக் கொள்கிற, அவருக்குப் பிடித்த வர்ணங்களில், நிறைய எடுத்துக் காண்பித்தான். அவனும் கூட லைட் ப்ரவுனில்தான் ஷர்ட் போட்டுக் கொண்டிருந்தான். நன்றாகவே இருந்தது.

அப்பாவுக்கு மட்டும் ஏன் நன்றாக இருப்பதில்லை என்று நினைத்துக் கொண்டே அவள் ஆழ்ந்த நீலத்தில் வேண்டும் என்று கேட்க அவன் அந்த ஷெல்ஃபில் இருந்த அத்தனை ஷர்ட்டையும் எடுத்துப் போட்டான். அவள் நினைத்துக் கொண்டிருந்த நீலத்தில் ஷர்ட் கிடைக்கவில்லை.

அவன் நீலத்தில் வெள்ளைக் கோடுகள் போட்ட ஒன்றை எடுத்துக் காட்ட ராதிகா அது நன்றாக இருக்கிறது என்றாள். அங்கு ஏதாவது ஒன்றை வாங்காமல் போனால் நன்றாக இருக்காது என்று நினைத்து, "சரி, எடுத்துக் கொள்ளலாம்!" என்றாள்.

"எவ்வளவு துணி வேண்டும்?"

"எவ்வளவு வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை."

"இந்த ஷர்ட்டைப் போட்டுக் கொள்ளப் போகிற நபர் எப்படி இருப்பார்? என்னை மாதிரி இருப்பாரா?"

"உங்களை விட உயரம். உங்களைவிடக் குண்டாக இருப்பார்."

அவன் அந்தத் துணியில் அவளின் அப்பாவிற்குத் தேவையான அளவு என்று ஒரு துண்டைக் கிழித்துத் தந்தான். அவள் பணத்தைத் தந்துவிட்டு துணியை வாங்கிக் கொண்டு வெளியில் வந்ததுமே, ராதிகா, "இதைக் கொஞ்ச நாட்களுக்கு முன்பாகவே வாங்கி இருப்பதற்கு என்ன? அப்படி வாங்கியிருந்தால் இதைத் தைத்திருந்திருக்கலாமே?" என்று கேட்டாள்.

''அப்பாவிற்கு இன்றைக்குப் பிறந்தநாள் என்று எனக்குத் தெரியாதே. சரி. நீயும் வாயேன் எங்களுடன். ஐந்து மணிக்கு ஓட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டதும் உன்னை வீட்டில் கொண்டு விடுகிறேன்.''

''நான் அம்மாவிடம் சொல்லவில்லையே!''

''இப்போது போய்ச் சொல்லிவிட்டுப் போகலாம்.''

''உனக்கு நேரமாகிவிடும்.''

''பரவாயில்லை. ஒரு ஆட்டோ பிடித்து நேராக உன் வீட்டிற்குப் போய்ச் சொல்லிவிட்டுப் போய்விடலாம்.''

''அரை மணிக்கு மேலாகிவிடும்.''

''சரி—'' என்றான் ஹரிணி.

ராதிகா வீட்டிற்குப் போனதும் அவளின் அம்மா காபி கொடுத்தாள். ராதிகா அம்மாவிடம் சொல்லிவிட்டுப் புடவை மாற்றிக்கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனவள் இருபது நிமிடம் கழித்து வந்தாள். அவள் அழகு என்று நினைத்துச் செய்து கொண்டிருந்த அலங்காரங்கள் ஹரிணிக்குப் பிடிக்கவில்லை. ஜரிகை வேலைப்பாடமைந்த ஒரு புடவையும் மேட்சான ஜாகெட்டும் வெள்ளி நகைகளும் தலையில் கிளிப்புகளும் அதே வெள்ளிநிறச் செருப்பும் போட்டுக் கொண்டு அவள் இருபது நிமிடத்தில் வந்து விட்டாலும் அந்த அலங்காரங்கள் அதிகம். அவள் சாதாரண ஒரு கைத்தறிப் புடவையில் இருந்தால் அழகாக இருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டாள் ஹரிணி.

அவர்கள் வீட்டிற்கு வந்தபோது அப்பா வந்திருக்கவில்லை. ராதிகாவை உட்காரச் சொல்லி அந்த வாரப் பத்திரிகை ஒன்றைத் தந்துவிட்டு உள்ளே வந்தாள் ஹரிணி. முகம் கழுவி ரோஜா நிற ஆர்கண்டி புடவையை மாற்றிக் கொண்டு வந்தபோது வாசலில் சத்தம் கேட்க அப்பாதான் வந்துவிட்டாரோ என்று எட்டிப் பார்த்தாள்.

''வெங்கட்ராமன் வீடு இதுதானே?'' என்று கேட்டுக் கொண்டே இரண்டு பேர் வந்தார்கள்.



அவள் ஆமாம் என்று தலையசைத்தாள்.

''ஹரிணிங்கறது நீங்களா?''

''ஆமாம்.''

''நாங்க உங்க அப்பா ஆபீஸிலிருந்து வரோம்.''

''உள்ளே வாங்க,'' என்று அழைத்தாள் அவள்.

''உங்க அப்பாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை. இன்றைக்கு ஆபீஸில் மார்வலி என்று சொன்னார். நாங்கள் ஆஸ்பிடலில் அட்மிட் பண்ணியிருக்கிறோம்.''

அவர்கள் சொன்னபோதே அவளுக்கு தொண்டை அடைத்தது. கண்கள் கலங்கின. ''எந்த ஹாஸ்பிடல்?'' என்று கேட்டாள்.

அவர்கள் ஹாஸ்பிடல் பெயரைச் சொன்னதும், ''டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள்?'' என்று அவசரமாகக் கேட்டாள்.

''இன்னும் இருபத்துநாலு மணி நேரத்திற்குப் பின்புதான் சொல்ல முடியும் என்று சொல்லிவிட்டார்கள்.''

''உண்மையாகச் சொல்லுங்கள். அப்பா உயிரோடு இருக்கிறாரா?''

அவர்கள் மௌனமாக நின்று கொண்டிருக்க, ''சொல்லுங்களேன். அப்பா உயிரோடுதானா இருக்கிறார் என்று சொல்லுங்களேன்...'' அவளுக்கு அடி வயிற்றிலிருந்து துக்கம் புரண்டு தொண்டையை அடைத்தது. அவர்களின் மௌனம் அப்பா இறந்து போனதைப் புரிய வைத்தது. இதையெல்லாம் அருகிலேயே நின்று கவனித்துக் கொண்டிருந்த ராதிகா உள்ளே சென்று கதவுகளையெல்லாம் மூடிக் கொண்டு வந்தாள்.

வழி முழுவதும் டாக்ஸியில் ஹரிணி அழுது கொண்டே வந்தாள். ஆசையுடன் அப்பாவிற்கு முதல் முதலாக ஷர்ட்டையும் பாண்ட்டையும் வாங்கிக் கொண்டு வந்ததை, முந்தின நாள் அப்பா தன்னுடன் பேசினதை, அதற்கு எல்லாம் நிறைய

அர்த்தங்கள் இருந்ததை யெல்லாம் சொல்லி அழுது கொண்டே வந்தாள்.

''அவருக்கு மார்வலி வந்து துடிச்சுகிட்டிருக்கிற போது கூட ஹரிணி ஹரிணின்னுதான் அழுதாருங்க. எப்பவுமே ஆபீஸ்லே உங்களைப் பத்தித்தான் பேசுவாரு. நேத்துகூட ஏதோ மாதிரி இருந்தாரு. பகல்லே சாப்பிடறபோது என் பொண்ணைத் தனியா விட்டுட்டுப் போயிடுவேனோன்னு பயமா இருக்குன்னு கூடச் சொல்லிக்கிட்டிருந்தாரு. அவரோட பேசினால் அந்தப் பேச்சு உங்களைப் பற்றித்தான் வந்து முடியும் [illegible] எல்லாம் நாங்க சொல்லுவோம்: ''இப்படிப் பேசறீங்களே, ஒரு வீட்டைப் பார்த்துப் பொண்ணோட இருங்களேன்!''னு. செய்யலாம் செய்யலாம்னு சொல்லிக்கிட்டிருப்பாரு. அப்புறம் வீடு பார்த்து எங்களையெல்லாம் கூப்பிட்டுகிட்டே இருந்தாரு. எங்களுக்கு வர முடியலை. ஏதோ வேலை வந்து முடியாமல் போயிடுச்சு. கடைசில இந்தச் சேதியோட வரணும்னு ஆயிடுச்சு பாருங்க''—

ஹரிணி எதுவும் சொல்லவில்லை டாக்ஸியின் வெளியில் பார்த்துக் கொண்டே வந்தாள்.

''உங்களுக்கு உறவுன்னு சொல்லிக்கக்கூட யாருமில்லைன்னு எங்களுக்குத் தெரியும். கடைசி நிமிஷத்திலேயும் தான செத்துட்டா தந்தியோ போனோ பண்ணிச் சொல்லக்கூட யாருமில்லை. நான் என்ன செய்வேன். என்னோட பொண்ணைப் பாத்துக்கோங்க. அவளுக்கு யாருமில்லை. அவளை உங்க பாதுகாப்புலேதான் விட்டுட்டுப் போறேன்னு சொல்லி விட்டுப் போயிட்டாருங்க அவரு.''

அப்பாவின் நண்பர் எதிர் காலத்தையும் தன்னுடைய நிலைமையையும் எடுத்துச் சொன்னபோது அப்பாவின் மரணத்தைவிடத் தனியாக விடப்பட்டுவிட்ட வேதனையில் ஹரிணி ராதிகாவின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

ஆஸ்பத்திரியில் அப்பா தூங்குகிற மாதிரிதான் இருந்தார். கண்களை மூடி மூக்குத் துவாரத்தைப் பஞ்சால் அடைத்



திருக்க வாய் மட்டும் இலேசாகத் திறந்திருந்தது. அவரைப் பார்க்க முடியாமல் அவரிருந்த அறையை விட்டு வெளியில வந்தாள். அப்பாவின் ஆபீஸைச் சேர்ந்த மூன்று பேர் அங்கிருந்தார்கள்.

வீட்டிற்கு வந்து விஷயத்தைச் சொன்ன சுந்தர் என்பவர், ''பாடியை இன்னும் அரை மணியில் தந்துவிடுவார்களாம்!'' என்றார்.

ஹரிணி மௌனமாகக் கேட்டுக் கொண்டிருக்க அவர், ''நீங்க இரண்டு பேரும் வீட்டிற்குப் போங்கம்மா. நீங்க இருந்து என்ன செய்யப் போறீங்க? எனக்கு உங்க வீட்டிலேயே வர வேண்டாம்னு சொல்லத் தோணிச்சு. நாங்க பத்திரமா பார்த்து எடுத்துகிட்டு வரோம். நாங்க எல்லா ஏற்பாடுகளையும் பண்ணி விட்டோம். தந்தி அடிக்கவும் கூட எனக்கு மனுஷங்க கிடையாதுன்னு அவரே சொல்லியிருக்காரு. வேற யாருக்காவது சொல்லணும்னால் சொல்லுங்க. சொல்லிட்டு வரோம்.''

''எனக்கு இந்த ராதிகாவை விட்டால் யாரும் நெருங்கினவங்க கிடையாது.''

''அப்ப நீங்க இரண்டு பேரும் போங்கம்மா. உங்களுக்கு ஒரு ஆட்டோ பிடிச்சுத் தரேன். வாங்க,'' என்று ராதிகாவின் பக்கம் திரும்பி, ''இவங்களைத் தனியா விட்டுட்டுப் போயிடாதீங்க!'' என்றார்.

'சரி' என்று தலையசைத்தாள் ராதிகா.

அவர்கள் வெளியில் வந்ததும் சுந்தர் ஒரு ஆட்டோ பிடித்துக் கொண்டு வந்தார். போக வேண்டிய இடத்தைச் சொல்லி ராதிகாவிடம் பத்து ரூபாயை நீட்டினார். அவள் வாங்கிக் கொண்டபோது மறுபடியும் ஒருமுறை, ''ஹரிணியைப் பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்றார் அவர்.

# 3

வழி முழுவதும் ஹரிணி ஒன்றும் பேசவில்லை. அவளின் மௌனம் ராதிகாவிற்குக் கஷ்டமாக இருந்தது. மனதில் இருப்பதை யெல்லாம் வார்த்தைகளில் வெளிப்படுத்த மாட்டாளா என்று தோன்றிற்று.

அந்த மௌனத்தைக் கலைக்க ராதிகா மட்டும் ஏதேதோ பேசிக் கொண்டு வந்தாள். ஹரிணியின் காதுகளுக்கு அவை எதுவும் எட்டாத மாதிரி வெளியில் பார்த்துக் கொண்டு வந்தாள். வீடு வந்ததும் உள்ளே போய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

"நான் வீட்டிற்குப் போன் பண்ணிவிட்டு வருகிறேன் ஹரிணி!" என்றாள் ராதிகா.

சரியென்று ஹரிணி தலையசைத்ததும், "இங்கே டெலிபோன் எங்கே கிடைக்கும்?" என்று கேட்டாள்.

"முன்னாடி வீட்டுக்காரங்க வீட்டிலே இருக்கு. கேட்டுப் பாரு. அப்படியே அவங்ககிட்டே அப்பா இல்லேன்னு சொல்லிடு."

ராதிகா சரி என்று சொல்லி முன் வீட்டிற்குப் போனாள். நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் உட்கார்ந்து எக்ஸ்பிரஸ் படித்துக் கொண்டிருந்தார். காலடிச் சத்தம் கேட்டுப் பேப்பரைத் தாழ்த்திப் புருவங்களை உயர்த்தி நீ யார் என்பது போல அவளைப் பார்த்தார்.

"நான் ஹரிணியோட ஃபிரெண்டு. இன்றைக்கு நாலு மணிக்கு அவளோட அப்பா ஹார்ட் அட்டாக்கில் இறந்து போய் விட்டார்."

"அப்படியா...! காலையில் நன்றாக இருந்தாரே!"

"ஆபீஸிலேயே மார்வலி வந்து ஹாஸ்பிடலில் இறந்து போயிருக்கிறார்."

"ஹரிணி எங்கிருக்கிறாள்?"



"வீட்டில்தான் இருக்கிறாள்."

"அவளுக்குத் தெரியுமா?"

"ம்."

"ஹாஸ்பிடலுக்குப் போனாளா?"

"ம். இறந்து போன பின்புதான் எங்களுக்குத் தெரியப் படுத்தினார்கள். இருவரும் போய்ப் பார்த்தோம். பாடியைத் தருவதற்குக் கொஞ்சம் நேரமாகும் என்று சொன்னார்கள். அங்கே நின்று கொண்டிருக்க வேண்டாம் என்று ஹரிணியின் அப்பாவின் நண்பர்கள் எங்களை அனுப்பி விட்டார்கள். அவர்களே அருகிலிருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்."

"ஹரிணி இப்போது எப்படி இருக்கிறாள்?"

"நியூஸ் தெரிந்ததும் அழுது கொண்டே ஹாஸ்பிடலுக்கு வந்தாள். இப்போது அந்த அழுகை கூட நின்று போய் விட்டது."

"அவளைத் தனியாக விட்டுவிட்டா வந்தீர்கள்?"

"என் அப்பாவிற்குப் போன் பண்ணி விஷயத்தைச் சொல்ல வேண்டும்."

"எங்க போன் காலையிலிருந்தே அவுட் ஆப் ஆர்டர். நீங்க பக்கத்து வீட்டிற்குப் போய் ட்ரை பண்ணிப் பாருங்க. நான் போய் ஹரிணியைப் பார்த்துவிட்டுவரேன்."

ராதிகாவிடம் சொல்லிவிட்டு ஹரிணி வீட்டிற்கு வந்தான் கிரிதரன்.

கதவு சாத்தியிருந்தது. ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஹரிணி தற்கொலைக்கு முயற்சி செய்து கொண்டிருந்தாள். ஒரு முக்காலியின் மீது நின்று கொண்டு ஒரு கயிற்றை மாட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்து "ஹரிணி" என்று உரத்த குரலில் கத்தினான்.

அவள் இவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"டோண்ட் ரை டு ஸேவ் மி."

"இது கோழைத்தனம் ஹரிணி."

"நீங்கள் என்ன சொன்னாலும் என்னை மாற்ற முடியாது. ஐ வாண்ட் டு டை. என்னால் இதைத் தாங்க முடியலை. ஐ கேன் நாட் லிவ் வித் அவுட் மை பாதர். நீங்க கதவைத் திறந்து உள்ளே வர முடியாதபடி தாழ்ப்பாள் போட்டு வெச்சிருக்கேன்."

அவள் சொல்லிக் கொண்டே ஸ்டூலின் மீது ஏறி நின்று கொண்டாள். கிரிதரன் கலியா கலியா என்று தோட்டக்காரனை அழைத்துக்கொண்டேப் கதவைப் பலமாக எட்டி உதைத்தான். கலியனும் ஓடிவர இரண்டு பேரும் சேர்ந்து தட்டி உதைத்ததில் கதவு திறந்து கொண்டது.

கிரிதரன் ஓடிப்போய்க் கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த ஹரிணியைப் பிடித்துக் கொண்டான். கலியன் ஸ்டூலின் மீது ஏறிக் கயிற்றைப் பிரிக்க ஹரிணி கிரிதரனின் தோள் மீது துவண்டு விழுந்தாள். இருவரும் சேர்ந்து அவளைத் தரையில் படுக்க வைத்தார்கள்.

முகத்தில் தண்ணீர் தெளித்த போது ராதிகா உள்ளே நுழைந்தாள். ஹரிணியையும் கிரிதரனையும் மாறி மாறிப் பார்த்ததில் அங்கு நடந்ததும் தன் தவறும் புரிய அவள் ஹரிணியின் அருகில் ஓடி வந்தாள்.

கிரிதரன் கலியனை அனுப்பி தெருக் கோடியில் இருக்கும் டாக்டரை அவசரமாகக்கூப்பிட்டுக் கொண்டு வரச்சொன்னான். பின் ராதிகாவின் பக்கம் திரும்பி, "நான் சிறிது தாமதமாக வந்திருந்தாலும் ஹரிணியை உயிருடன் பார்த்திருக்க முடியாது!" என்றான்.

ராதிகாவிற்கு அவளைத் தனியாக விட்டுவிட்டுப்போய்விட வேண்டாம் என்று ஹாஸ்பிடலில் அவள் அப்பாவின் நண்பர்கள் வற்புறுத்திச் சொன்னதன் அர்த்தம் புரிய கண்கள் இரண்டும் நிரம்பிப் போய் ஹரிணியைத் தொட்டுப் பார்த்தாள். 'ஹரிணி' என்று இரண்டு முறை அழைத்துப் பார்த்தாள்.



"ஹரிணி பிழைத்து விடுவாளா?" என்று அழுகையினூடே அவனிடம் கேட்டாள்.

"எனக்குத் தெரியலை. நீங்கள் சொன்னதும் வந்து பார்த்தேன். தூக்குக் கயிற்றை மாட்டிக் கொண்டிருந்தாள். கதவை நன்றாகத் தாழ் போட்டிருந்தாள். கலியனும் நானும் தட்டித் தாழ்ப்பாளை உடைத்து உள்ளே வருவதற்குள் தன்னை முடித்துக் கொள்ளத் தயாராகியிருந்தாள். நல்ல வேளை. இலேசாக மூச்சு வருகிறது. பிழைத்துக் கொள்வாள் என்றுதான் நினைக்கிறேன். இவளை இறக்கிக் கீழே படுக்க வைக்கத்தான் தோன்றிற்று. மேலே என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை."

"அருகில் டாக்டர் யாராவது இருக்கிறார்களா?"

"தெருக் கோடியில் ஒரு ஹவுஸ் ஸர்ஜன் இருக்கிறார். அவரை அழைத்துக் கொண்டு வரச் சொல்லி அனுப்பியிருக்கிறேன். அவர் வீட்டில் இருக்க வேண்டும்."

"ஹரிணி, ஹரிணி..." என்று ராதிகா அவளை உலுக்கினாள். முகத்தில் மறுபடியும் தண்ணீரைத் தெளித்தாள்.

"எனக்கு இப்படிச் செய்துகொள்வாள் என்று தெரியாது. தெரிந்திருந்தால் இவளைத் தனியாக விட்டுவிட்டுப் போயிருந்திருக்க மாட்டேன்," என்று சொன்ன போது கிரிதரனுக் கோபம் வந்தது.

"என்னங்க நீங்க, கொஞ்சம் கூட காமன்ஸென்ஸ் இல்லாமல் நடந்துகிட்டிருக்கீங்க. ஹரிணி நிலையிலே நீங்க இருந்தாலோ இல்லை நான் இருந்திருந்தாலோ இதைத்தான் செய்திருப்போம். அம்மாவும் இல்லை. கூடப் பிறந்தவங்க யாரும் இல்லை. உறவுக்காரங்ககூடக் கிடையாது. அப்படி இருக்கிறபோது எதிர்காலத்தைப் பற்றின பயம் வராது? அப்பா இல்லாமல் தனியாக எப்படி வாழ முடியும்னு தோணாது? தைரியமான எந்த மனுஷனும் இந்த நிலையிலே தன்னோட தைரியத்தையும் இழந்துட்டுதான் இருப்பான். அவள் ஸ்டூடண்ட்தானே."

"ஐயம் ஸாரி...ஐயம் ரியலி ஸாரி...ஐ நெவர் எக்ஸ்பெக்டட் திஸ். ஹரிணிக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது. ஓகாட்... ப்ளீஸ் ஹெல்ப் மி... ஹரிணியைப் பிழைக்க வெச்சிரு!" என்று என்ன செய்வது என்று தெரியாமல் மறுபடியும் ஹரிணியின் முகத்தில் நீரை இறைத்து அவளைத் தட்டி எழுப்ப முயற்சி செய்தாள்.

பின் மூக்கின் அருகில் கையை வைத்துப் பார்த்தாள். மூச்சு லேசாக வந்து கொண்டிருந்தது.

"மூச்சு லேசாகத்தான் வருகிறது. என்ன செய்யறது இப்போ?" என்று திரும்பி கிரிதரனைப் பார்த்தாள்.

"முன்பை விட இப்போது பரவாயில்லை. கவலைப்படாதீர்கள். பிழைத்துக் கொள்வாள். மறுபடியும் இந்த முயற்சியில் இவள் இறங்காமல் இருக்க வேண்டுமே..."

"ஐயய்யோ... வேண்டாம்...இப்போ பிழைச்சிட்டால் அவ மனசை என்னால மாத்திட முடியும். முடியணும்..." சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஹரிணியின் முகத்தில் சிணுக்கம் தெரிய ராதிகா அருகில் போய் ஹரிணி என்று கூப்பிட்டாள்.

மறுபடியும் நீரைக் கண்களின்மீது தெளித்தாள். தனக்குத் தெரிந்த கடவுளின் பெயர்களையெல்லாம் உதவிக்கு அழைத்தாள். அவர்கள் அனைவரும் ராதிகாவின் குரலுக்கு ஓடிவந்து உதவியது போல ஹரிணியின் முகத்தில் சிணுக்கம் அதிகமாகி கண்களை மெதுவாகத் திறந்து கொண்டிருந்தாள்...எதிரில் ராதிகாவின் உருவமும் கிரிதரனின் உருவமும் நிழலாகத் தெரிய மறுபடியும் கண்களை மூடிப்பின் தலையை ஒரு முறை உலுப்பி எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

அவளை ராதிகா அப்படியே கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்தாள். ஹரிணிக்கு நடந்த அனைத்தையும் நினைவிற்குக் கொண்டு வர கொஞ்ச நேரம் பிடித்தது.

பின், "என்னை ஏன் காப்பாத்தினிங்க...ஐ ரியலி டோண்ட் வாண்ட் டு லிவ்... ப்ளீஸ் லீவ் மி அலோன். என்னைத் தனியாக விட்டு விடுங்கள். எனக்கு உயிருடன் இருக்கப்



பிடிக்கவில்லை. என்னால் இருக்கவும் முடியாது... அப்பா இல்லாமல் தனியாக நிச்சயமாக இருக்க முடியாது...என்னைக் காப்பாற்றினதன் மூலம் எனக்கு நீங்கள் நல்லது செய்யவில்லை."

"டோண்ட் பீ ஸ்டுப்பிட் ஹரிணி...நீ பிழைப்பாயா என்று பயமாகி விட்டது எனக்கு. நாங்க எல்லோரும் இல்லையா உனக்கு?"

"நோ...நோ... எனக்கு இனிமேல் யாரும் கிடையாது. நான் அனாதைதான். ப்ளீஸ் என்னைத் தனியாக விட்டு விடுங்கள்."

"என்ன ஹரிணி இது? நீ படிச்சவதானே...கோழை மாதிரி எதுக்கு நடக்கணும்."

"நான் கோழைதான். அதனாலதான் இப்படி நடந்துக்கறேன். எனக்குக் கடவுளைப் பாக்கணும். அவர்கிட்டே எனக்கு மட்டும் இத்தனை கஷ்டங்களை ஏன் கொடுத்தாய்னு கேக்கணும்..."

"உன்னைவிடக் கஷ்டங்களை அனுபவிச்சிகிட்டு எத்தனை பேர் இல்லை?"

"இருக்கலாம். ஆனால் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அப்பா இல்லைங்கிறதை என்னால் நம்பவும் முடியலை. எனக்கு அப்பா திரும்பி வேணும். எங்கப்பாவை நான் பாக்கணும். அவரில்லாமல் என்னால் இருக்க முடியாது. எதிர்காலத்தைப் பற்றின பயம் வரலை. எனக்கு அப்பாவின் பிரிவைத் தாங்கிக்க முடியலை...ப்ளீஸ் என்னைத் தனியாக விட்டு விடுங்கள்..."

"என்ன ஹரிணி இது, குழந்தை மாதிரி அழுதுகிட்டு?"

"அவங்க பேசட்டும் விடுங்க!" என்றான் கிரிதரன்.

"இப்போ வேணுமானால் என்னைத் தடுத்து நீங்க காப்பாத்திட்டதா நினைச்சுக்கலாம். இன்னும் கொஞ்ச நாள் கழிச்சு இதைத்தான் பண்ணப் போறேன். நான் செத்துப் போற வரை முயற்சி செய்துகிட்டுதான் இருப்பேன்."

"இப்படி நினைக்கிறதை விட்டு வாழ்க்கையோடு கொஞ்சம் போராடிப் பார்த்தால்தான் என்ன என்று என் தோன்றமாட்டேன் என்கிறது. உனக்கு?"

"செத்துப் போகணும்ங்கற நினைப்பை விட்டு வேறு எந்த நினைவும் எனக்கு இல்லை."

"இப்படி ஒரு நிலையிலேதான் நீ தைரியமாக இருக்கணும். வாழ்க்கைலே எதிர்நீச்சல் போட்டு வரத் தெரியணும். நம்ம பார்வையிலே, கண்ணோட்டத்திலேதான் எல்லாமே இருக்கு. மனுஷங்க நல்லவங்கன்னு நினைச்சால் நல்லவங்க. கெட்டவங்கன்னு நினைச்சால் கெட்டவங்க. பிறந்ததுலருந்து அனாதையாக எத்தனை குழந்தைகள் இல்லை. நொண்டியாக, முடமாக, பேச முடியாமல் ஊமையாக, கண்ணில்லாமல் எத்தனை பேர் இல்லை. அவங்க எல்லோரும் வாழாமலா போயிடறாங்க. நாம நமக்குதான் கஷ்டம் அதிகம்னு நினைச்சுக்கறோம். வெளியிலே போய்ப்பாரு தெரியும். சிரிச்சுக்கிட்டே பேசுவாங்க. அவங்களைப் பார்த்தால் சந்தோஷமாக இருக்கிறதாகத்தான் தெரியும். மனுஷனோட மனசிலே புகுந்து பார்த்தால்தான் தெரியும். உள்ளே எத்தனை புதைஞ்சு கிடக்குதுன்னு. நமக்காக வாழறதைவிட மத்தவங்களுக்காக வாழத் தெரிஞ்சுக்கணும்."

"இனிமேல எனக்கு யார் இருக்காங்க. யாருக்காக இருக்கணும் நான்?"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நான் சொல்லலை. நாம பார்க்கிற பார்வையிலும் கண்ணோட்டத்திலும்தான் எல்லாமே இருக்குன்னு. உன்னோட உதவியும் நட்பும் எத்தனை பேருக்கு அவசியம் என்பது போகப் போகப் புரியும். காலம் நிறைய விஷயங்களுக்குப் பதில் சொல்லும்."

"இந்தப் பேச்சுக்களும் அறிவுரைகளும் என்னுள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது."

"நான் மறுபடியும் இந்த முடிவைத்தான் எடுத்துக் கொள்வேன்னு சொன்னால் யார் அதை மாற்ற முடியும்?



தாராளமாக அதே முடிவை எடுத்துக்கோ. உலகத்துல எல்லாத்துக்கும் ஒரு காரணம் இருக்கு."

"இந்த முடிவை உங்க அம்மா இறந்து போனதுமே உங்க அப்பா எடுத்துக்கிட்டு இருந்திருக்கலாமே. ஆனால் செய்யலையே உனக்காக வாழணும்னு அவருக்குத் தோணலை? ம்! உன்னை முன்னுக்குக் கொண்டு வரணும். பெயருடன் புகழுடன் வாழ வைக்கணும்னுதானே அவர் இருந்தார்? இந்த மாதிரி கோழையாக ஒரு பெண்ணை வளர்த்தோம்னு தெரிஞ்சால் அவருக்கு உன் மேல வெறுப்புதான் வரும். தற்கொலை பண்ணிக்கணும்னால் பண்ணிக்கோ. ஆனால் அதற்கு முன்னாடி கொஞ்சம் யோசிச்சுப் பாரு.

"இந்த முயற்சியை ஒரு மாசம் தள்ளிப்போடு. அதற்குள் எந்த முடிவுக்கும் நீ வர வேண்டாம். இந்த ஒரு மாதத்தில் நிறைய விஷயங்களைப் புரிஞ்சிக்க முடியும். நீயே நிச்சயம் மாறி விடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. எனக்கு ஒரு சத்தியம் பண்ணித் தா — ஒரு மாசம் வரை இந்த மாதிரி இறங்கறதில்லைன்னு!" ஹரிணி மௌனமாக இருந்தாள்.

"இந்த மௌனத்தை நான் சம்மதமாக நீ சத்தியம் பண்ணினதாக எடுத்துக் கொள்கிறேன்." கிரிதரன் பேசி முடித்தபோது கலியன் ஓடி வந்தான்.

"அந்த டாக்டரு இல்லைங்க. எங்கேயோ வெளியிலே போயிட்டாரு..." என்று ஹரிணியைப் பார்த்தான்.

"அம்மா நீங்க பொழச்சிட்டிங்களா! எதுக்கும்மா இந்த வயசுல போய்... எனக்கு உடம்பெல்லாம் ஆடிப் போயிருச்சு. தெருக் கோடிக்கு ஓடிப்போய் டாக்டரைக் கூப்பிடக் கூட முடியாமல் போயிருச்சு. அங்க போனால் வார்த்தை வர மாட்டேங்கறது. விஷயத்தைச் சொல்ல முடியலை. அந்த டாக்டரு வேற இல்லை. சரி என்னவாவது நடக்கட்டும்னு கடவுள்கிட்டே வேண்டிக்கிட்டே ஓடி வந்தேன்.

"இப்ப உங்களை இப்படிப் பார்த்ததும்தான் மூச்சே வருது எனக்கு. என்னம்மா இப்படி செஞ்சுட்டிங்க. ஐயா பாக்காம இருந்திருந்தால் உங்களைத் திருப்பி நாங்க பார்த்திருக்க

முடியுமா. அப்பா போய்ட்டாருன்னு என்ன? நாங்க எல்லோரும் மனுஷங்க இல்லையா? நாங்க செய்ய மாட் டோமா உங்களுக்கு. என் ஆட்டுக்கு வாம்மா.

"நான் உன்னை வெச்சுக் காப்பாத்தி சோறு போட்டுப் படிக்க வெக்கறேன். நீ ஒண்ணும் எனக்கு அதிகமாயிட மாட்டே. நாலோட ஒண்ணு கூடப் பொறந்துச்சுனு நினைச்சுச் செய்யறேன்.

"உனக்கு முடியும்னால் வந்து என் குடிசைல தங்கிக்க. உன்னைப் படிக்க வெக்கற தெம்பு எனக்கு இருக்கும்மா. எத்தனை வேணும்னாலும் படி. நான் தரேன். இதுக்குப் போயி இப்படி மனசு உடைஞ்சு செத்துடம்னு தோணிருச்சே உனக்கு.

"உன்னை மாதிரி எல்லா மனுஷங்களும் நினைச்சிட்டால் இப்ப இருக்கிறவங்கள்ல பாதிப் பேர்கூட உயிரோடு இருக்க மாட்டாங்கம்மா. பணம், காரு, பங்களா, அப்பா, அம்மான்னு சொகுசா வாழறதுல என்னம்மா கஷ்டம்? இப்படி யாரும் இல்லாமல் வாழறதுலதான்மா பெருமையே இருக்கு. இன்னும்மா பயம்? அப்படி நினைச்சுக்கிட்டிருந்தா இவரும் கவிதைகூடப் பாம்புன்னு நினைச்சுக்க வேண்டியது தான்!"

கவியன் பேசி முடித்ததும் அர்த்தம் பொதிந்த புன்னகை யுடன் கிரிதரன் ஹரிணியைப் பார்த்தான். ஹரிணிக்கு வெட்க மாக இருந்தது.

தன் செய்கையின் மேலும், தன் மேலும் கோபம் வர, "சத்தியமாக இனிமேல் இப்படி ஒரு காரியத்தில் இறங்க மாட்டேன்!" என்றாள்.

ராதிகா அவளை இறுக அணைத்துக் கொண்டு, "நான் ரொம்பவும் பயந்து விட்டேன் ஹரிணி," என்று அழுகையி னூடே சொன்னாள். அந்த அணைப்பில் அவர்களுக்கிடையே இருந்த நட்பு தெரிந்தது.

அப்பாவின் நண்பர்கள் பாடியைக் கொண்டு வரும்போது மணி ஏழரை மணிக்கு மேலாகி விட்டது. கிரிதரன் அவர்கள்



வீட்டிலிருந்து ஒரு பெஞ்சைக் கொண்டு வந்து போட்டான். அதன் மீது அப்பாவைக் கிடத்தியபோது ஹரிணிக்குத் துக்கம் பொங்கி வந்தது.

அருகில் போய் அந்த உடம்பைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"என்னை ஏம்ப்பா விட்டு விட்டுப் போயிட்டீங்க? நான் தனியா இருக்கேனேப்பா. அது தெரியலையாப்பா? என்னால் முடியலைப்பா. இதைத் தாங்கிக்க முடியலையப்பா... என்னை யாருப்பா இனிமே ஹரிஸ் என்று உங்களை மாதிரி கூப்பிடப் போறா? எத்தனை ஆசையுடன் இன்னிக்கு உங்களுக்கு பாண்ட்டும் நீல ஷர்ட்டும் வாங்கிண்டு வந்தேம்பா... இது வரைக்கும் நான் எதுவுமே வாங்கித் தந்ததில்லையே. முதல் முறையா வாங்கிண்டு வந்தேனே... அதை வாங்கிக்காம போயிட்டீங்களேப்பா... ஹரிணி ஹரிணின்னு கூப்பிடுங் களேன்ப்பா..."

கிரிதரன் ஹரிணியை அழைத்து காம் டௌன் என்றான். குளிர்ச்சியான பானத்தைத் தம்ளரில் ஊற்றி அவள் கையில் திணித்தான். அவள் சாப்பிடவில்லை. அவள் வேண்டாம் என்று சொன்னபோது வற்புறுத்தி அவளிடம் தந்தான் அவன். ஹரிணி அதைக் கையில் வைத்துக்கொண்டே கிரிதரனிடம் சொன்னாள்.

"நேற்று சம்பந்தமில்லாமல் அப்பா நிறையப் பேசினார். ஏதேதோ சொன்னார். தனியா இருக்கத் தெரியணும். பிரச்சினைகளைச் சமாளிக்கத் தெரியணும். எதிர்நீச்சல் போட்டு முன்னுக்கு வரத் தெரியணும்னு எல்லாம் சொன்னார். அவருக்குப் புரிஞ்சு போயிருக்கணும். அதனால்தான் அப்படி எல்லாம் பேசியிருக்கிறார். நான் இல்லேன்னாலும் உனக்கு வாழத் தெரியணும்னு சொன்னாரே. அப்போ எனக்குப் புரிய லையே!" என்று தலையில் அடித்துக் கொண்டாள்.

கிரிதரன் அந்த இடத்தை விட்டு எழுந்து வெளியில் வந்தான். சுந்தரிடம், "இப்போதே, பாடியை எடுத்துவிட லாமா?" என்று கேட்டான்.

"ம். எடுத்து விடலாம். நாளைக்குக் காலையில்வரை எதற்கு வைக்க வேண்டும்?"

"ஹரிணியைக் கேட்க வேண்டும் — யாருக்கு எல்லாம் சொல்லி அனுப்ப வேண்டும் என்று."

"அவர்களுக்கு உறவினர்கள் என்று யாருமே கிடையாது. ஹரிணியின் அம்மாவுடன் பிறந்த சகோதரி மட்டும்தான் இருக்கிறார்கள். அவர்களுடனும் அதிகப் பழக்கம் இல்லை போலிருக்கிறது. மேலும் அவர்கள் பரோடாவிலிருந்து வருகிறவரை வைத்திருக்க முடியாது."

"ஹரிணியிடம் கேட்டு விடலாமே."

சுந்தர் போய்க் கேட்டதும், "ராதிகாவின் அம்மாவும் அப்பாவும் வரட்டும். வேறு யாரும் வருவதற்கு இல்லை. எங்க சித்தி இப்போ எங்க இருக்காங்கன்னுகூடத் தெரியாது!" என்றாள்.

ஒன்பது மணியளவில் எல்லாம் முடிந்து கிரிதரனும் மற்ற இரண்டு சக ஊழியர்களும் தோள் கொடுக்க சுந்தர் நெருப்புச் சட்டியை எடுத்துக்கொண்டு முன்னால் போக, அவரின் உடல் அந்த வீட்டைவிட்டுக் கிளம்பினபோது ஹரிணி அந்த உடலை விடுவதற்கு மனமில்லாமல் கட்டிக் கொண்டாள்.

அந்த ராத்திரியின் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு அவள் குரல் அலறிற்று. ராதிகாவும் அவள் அப்பாவும் அவளை இழுத்துக் கொண்டு உள்ளே வந்தார்கள். ராதிகாவின் அம்மா அந்த வீட்டைக் கழுவித் தள்ளினாள். ஹரிணியைக் குளித்து விட்டு வரச் சொன்னாள். பின்பு ஒவ்வொருவராகக் குளித்து விட்டு வந்தார்கள். சமையலறையை அலம்பி மேடையைக் கழுவி விட்டாள்.

கிரிதரன் வீட்டிலிருந்து உப்புமா வந்தது. மயானத்திற்குச் சென்றவர்கள் திரும்பி வரும்வரை எல்லோரும் காத்திருந்தார்கள். சுந்தரும் கிரிதரனும் மற்ற நண்பர்களும் குளித்து விட்டு வந்ததும் உப்புமாவைப் பரிமாறினபோது ஹரிணி சிரித்தாள்.



"சாப்பாடு மட்டும்தான் நமக்குப் பெரிய விஷயமாகப் போய்விட்டது!" என்றாள்.

"நமக்கு மட்டும் இல்லேம்மா, உலகமே இதில்தான் உழன்று கொண்டிருக்கிறதும்மா. பசிதான் பெரிசு. அது மட்டும் இல்லையென்றால் யார் யாருக்குக் கட்டுப்படப் போகிறார்கள்.

பசி இல்லாமல் இருந்தால் அம்மா அப்பா பிள்ளைகள் எல்லோரும் ஏன் ஒன்றாக இருக்கப் போகிறார்கள்? முன்னேற்றம் என்கிற ஒன்றே அவசியமில்லாமல் போய்விடுமே ஹரிணி. அடுத்த நாளைப் பற்றியோ எதிர்காலத்தைப் பற்றியோ யார் கவலைப்படப் போகிறார்கள்? படிப்பு எதற்கு? ஏன் வேலை செய்ய வேண்டும்? பசிதான்மா எல்லாவற்றிற்குமே ஆதாரம். அதுமட்டும் இல்லைன்னால் மனுஷன் மனுஷனாக இருக்க மாட்டான். இப்ப சாப்பிடலை என்றால் நாளைக்குச் சாப்பிட்டுத் தானே ஆகணும். யாருக்காக நாம் எதை நிறுத்த முடியும்? வாழ்க்கை என்கிறதே ரயில் பயணம் மாதிரி.

நாம் போய்க்கிட்டே இருக்கணும். நம்ம கடமையைச் செய்துகிட்டே இருக்கணும். கடமையைத் தவிர எதையும் நினைக்கக் கூடாது. அது ஒன்றுதான் இனிமேல உனக்கு முக்கியம். கடவுள் இப்படி நம்மைச் செஞ்சுட்டாரேன்னு உனக்குத் தோணத்தோண ஒரு வெறி மாதிரி வரணும்.

எல்லாரையும் தாண்டி முன்னாடி நிக்கத் தெரியணும். யாரும் எனக்கு இல்லாதபடி நீ செஞ்சால் என்ன, எனக்குக் கஷ்டமா? முன்னாடி வர்றேனா இல்லையா பாருன்னு காட்டணும். அப்பா சொன்னாரே எதிர் நீச்சல் போட்டு வரணும்னு. அது இனிமேல உன் காதுல ஒலிச்சுகிட்டே இருக்கணும் ஹரிணி.

உனக்கு மட்டும் வரலை இந்தக் கஷ்டம். உன் மாதிரி நிறையப் பேர் இந்த உலகத்துல இருக்காங்க. அவங்க பசியையும் சாப்பாட்டையும் மட்டும் நினைக்கலை. பசி முக்கியமான விஷயம்தான். சாப்பிட்டால்தான் வேலையில் இறங்க முடியும். ஒவ்வொரு வேளைச் சாப்பாட்டையும் நானே சம்பா

நித்துச் சாப்பிடுகிறேன் என்றிருந்தால் அது எவ்வளவு நிம்மதியைத் தரும் தெரியுமா?

இன்னும் கொஞ்ச நாள்தான். அதிகம் போனல் ஒரு வருஷம். அப்புறம் உனக்கு வேலை கிடைக்கும். அந்த வேலையை முக்கியமா நினைச்சுக்கணும். சாலை விசாலமா இருக்கும்போது அதுல நடக்கிறதுல என்னம்மா பெருமை இருக்க முடியும்? அதை நாமே போட்டு நடந்தால் அது தனியானதும்மா.

அதில் இருக்கிற சந்தோஷமும் நிம்மதியுமே வேற. நான் இப்ப சொன்னல் உனக்குப் புரியாது. இந்த சந்தோஷத்தை ஒரு நாள் அனுபவிப்பே இல்லையா, அப்போ புரிஞ்சப்பே நான் சொன்னது எத்தனை உண்மை என்று. கஷ்டம் வரவரத்தான்மா மனுஷன் மனுஷனு இருப்பான். கஷ்டம் இல்லாத வாழ்க்கையில் சுகமும்கூடக் கிடையாது ஹரிணி. சில சமயம் அந்தக் கஷ்டங்களே சுகமாகக்கூட இருக்கும். கஷ்டமில்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையான்னு தோனும்."

அப்பாவின் நண்பர் அவர் வயதையொத்த வேணு கோபாலன் பேசப் பேச அவளுக்கு அப்படியே கேட்டுக் கொண்டு உட்கார வேண்டும் போலிருந்தது. அவர் சொல்கிற அனைத்திலும் உண்மை இருப்பதாகப் பட்டது. மனசு கூட சற்று இலேசானதுபோல இருந்தது.

(வாழ வேண்டும் என்ற ஆசை, முன்னேற வேண்டும் என்ற வெறி, சுய சம்பாத்தியத்தில் இருக்க வேண்டும் என்கிற எண்ணங்களையெல்லாம் அவரின் பேச்சு தூண்டிவிட்டது. அன்று முழுவதும் அவர் நிறையப் பேசினர். அவர் பேசப் பேச அவள் கேட்டுக் கொண்டே வந்தாள்.)

அதில் அப்பாவின் பிரிவும் தனியாக அனதையாக விடப்பட்ட கஷ்டமும் மறந்துதான் போயிற்று ஹரிணிக்கு.



# 4

அப்பா இறந்து போய்க் கிட்டத்தட்ட இருபத்தெட்டு நாட்களாகி விட்டது. அத்தனை நாட்கள் ஆனது போலத் தெரியவில்லை. முந்தின நாள்தான் எல்லாம் நடந்து முடிந்தது போல இருக்கிறது. அப்பா காலையில் எழுந்ததும் தனது ஐம்பதாவது பிறந்த நாள் என்று சொன்னது, அவளும் ராதிகாவும் சென்று துணிகள் வாங்கிக் கொண்டு வந்தது. ஆபீஸிலிருந்து அப்பாவின் நண்பர்கள் வந்து சொன்னது, இவள் போய்ப் பார்த்தது. தற்கொலைக்கு முயற்சித்தது, கிரிதரன் வந்து காப்பாற்றியது எல்லாம் நிழற்படங்களாகத் தெரிந்தது. அப்பாவின் இழப்பைத் தாங்க முடியாமல் அதற்கு இவள் பிரதிபலித்த விதத்தை நினைக்கும்போது அவமானமாக இருந்தது.

எதற்காக அந்த முயற்சியில் ஈடுபட்டோம் என்று எண்ணிப் பார்த்தாள். அப்பாவின் மீதிருந்த அன்பா? தனியாக விடப்பட்டுவிட்டதாலா? எதிர் காலத்தைப் பற்றின பயத்தினலா? இன்னும் புரியவில்லை. அதைப் பற்றி நினைக்கவே அவள் இப்போதெல்லாம் விரும்புவது கிடையாது. இந்த இருபத்தெட்டு நாட்கள் எப்படிக் கழிந்தனவோ அப்படியே மற்ற நாட்களும் கழிந்துவிடும்.

இந்த உலகத்தில் தெரிந்து கொள்ள வேண்டியதெல்லாம் மனிதர்களை அளக்கவும், ஒத்துப் போகவும்தான். புத்திசாலித்தனம் கொஞ்சம் வேண்டும். அவை போதும் என்று பட்டது.

அப்பா இறந்ததிலிருந்து ராதிகாவின் வீட்டில்தான் இருக்கிருள் ஹரிணி. அங்கிருப்பது அவளுக்குக் கஷ்டமாக இல்லை. ஆனல் அவர்களுக்குக் கஷ்டம்தான். இருப்பது இரண்டு பெட் ரூம்கள். ஒன்றை அவளின் பெற்ருேர்களும் மற்ருென்றை ராதிகாவும் அவளுடைய தம்பி குமாரும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள். ஹரிணி வந்ததிலிருந்து குமாருக்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

ஒவ்வொரு சமயம் அவனுக்குக் கோபம் வருகிறது. சிடு சிடுவென்று விழத் தோன்றுகிறது. இதையெல்லாம் ராதிகா

மறைக்கிருள். அவனின் கோபங்களுக்குப் புதுக் காரணங்களைக் காட்டுகிருன். ஹரிணிக்குப் புரியாமல் இல்லை. வேறு வழியில்லை. ஹாஸ்டலில் ரூம் கிடைக்கவில்லை. இந்த வருடம் முடிகிறவரை அனுசரித்தே போயாக வேண்டும். அதில் அவளுக்குக் கஷ்டம் இல்லை.

பாதி நேரம் வீட்டை விட்டு வெளியிலேயே கழித்து விடுகிருள். கல்லூரியிலிருந்தே ஆறு மணிக்கு மேல்தான் வீட்டிற்கு வருகிருள். முதலில் வருகிற பஸ்ஸைத் தவறவிட்டுப் பின்னல் வரும் பஸ்ஸைப் பிடித்து வரும் நேரத்தில் வீட்டில் குமார் இருப்பதில்லை. தன் வேலைகளையெல்லாம் முடித்து விட்டு அவள் வருவதற்குள் வெளியில் போய்விடுகிருன். அவன் நடந்து கொள்ளும் விதம் இது என் வீடு என்பதை இவளுக்குத் தெரியப் படுத்துகிற மாதிரி இருக்கும்.

இப்போதெல்லாம் அவளுக்கு இரவில் தூக்கம் கூட வருவதில்லை. மிகுந்த சங்கடங்களில் இருக்கும் நேரங்களில் அவளால் தூங்க முடிவதில்லை. ராத்திரி பத்து மணியிலிருந்து ஐந்து மணி வரை உள்ள நேரத்தைக் கடப்பது கஷ்டமாக இருக்கிறது. மனசு ஏதேதோ நினைக்கிறது. மனசு போகிற போக்கைப் பார்த்தால் சில சமயம் இவளுக்குப் பயமாகக்கூட இருக்கிறது.

அந்த நேரங்களில் இவள் எழுந்து ஏதாவது ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு படிக்க முற்படுகிருள். கண்கள் ஒவ்வொரு வரியாகப் பார்த்துக் கொண்டு வருகிறதே தவிர மனம் அதில் செல்ல மறுக்கிறது. செய்ய நினைப்பது எதையும் செய்ய முடியாமல் போகிறது. அப்போதெல்லாம் கூட ஒரு தம்பியோ தங்கையோ இருந்திருந்தால் எத்தனை நன்ருக இருந்திருக்கும் என்று எண்ணிக் கனவு காண்கிருள்.

ஒரு தம்பி அவளுக்கு இருக்கிற மாதிரி— அவனைத் தினமும் ஸ்கூலுக்குக் கொண்டு விட்ட பின்பு இவள் கல்லூரிக்கு வருகிற மாதிரி எல்லாம் கனவு காண்கிருள். அந்தத் தம்பி மிக முரட்டுத்தனத்துடன் இருக்கிருன். குமார் மாதிரி இல்லை. அந்தத் தம்பிக்கு மனுஷத்தனம் இருக்கிறது. மனிதர்களை நிக்கத் தெரிகிறது. ஆனாலும் ஒரு முரட்டுத்தனம், கோபம் அவனிடம் உண்டு. அவனின் கோபங்கள் நியாயமானதாக இருக்கின்றன. இந்தச் சமுதாயத்தின் மீது கோபம், சுயநலத்தின் மீது கோபம், புறக்கணிப்புகளின் மீது கோபம். யோசிக்க யோசிக்கத் தன் குணம்தான் அப்படி ஒரு தம்பியாகக் கனவுகளில் உருவெடுத்து வருகிறதோ என்றும் தோன்றுகிறது.

இந்த இருபது நாட்களில் அவள் மூன்று புத்தகங்களை படித்து விட்டாள். படித்தது குறைவுதான். நேரத்திற்கும் மனிதனுக்கும் போட்டி இருக்க வேண்டியதுதான். மனிதன் எப்போதும் நேரத்தின் முன்பு தோற்றுத்தான் போகிருன். நேரத்தைப் போல் சுறுசுறுப்பாக மனிதனால் நடக்க முடியவில்லை. அதனைப் போல் செயலில் இறங்க முடியவில்லை. அது தனியாக யாருக்கும் காத்திராமல் நகர்ந்து கொண்டே இருக்கிறது. இவள் பின்தங்கியே நிற்கிருள்.

இப்போது இவளுக்குக் கவனம் எல்லாம் குறைந்து விட்டது. முன்பு போல படிக்க முடிவதில்லை. பாதி படித்து முடித்ததைத் தொடரத் தோன்றுவது இல்லை. தூக்கம் வராத இரவுகளில் உத்திரத்தை வெறித்துக் கொண்டு கனவுகளில் கற்பனைகளில் மிதக்கத் தோன்றுகிறது. இந்தக் கனவுகளின் மூலமே அவள் இரண்டு கவிதைகள் எழுதியிருக்கிருள். கல்லூரியில் அதைத் தோழிகளிடம் காட்டியபோது ஒவ்வொரு கையாக மாறி மிஸஸ் மாதவன் வரை சென்றுவிட்டது.

அற்புதமான கவிதைகள் என்று பாராட்டினுள். அவற்றைக் கல்லூரி மாகஸினில் பிரசுரிக்க வேண்டும் என்றும் சொல்லி வாங்கிக் கொண்டு விட்டாள். இவளை எழுத எழுத என்று உற்சாகப்படுத்துகிருள். கஷ்டத்தினிடையில் பிறக்கும் எழுத்துக்களுக்கு வலிமை அதிகம். வறுமையிலும் கஷ்டங்களின் இடையிலும்தான் எழுத்துக்கள் பிரசவிக்கும் என்கிருள். அவள் எழுதிய இரண்டு கவிதைகளுமே துக்கம் மனதை வியாபித்த நேரங்களில் பிறந்தவைதான்.

மனசுக்குள்ளேயே பேசிக் கொண்டவார்த்தைகளிலிருந் பிறந்தவை. முதலில் அந்த வார்த்தைகளுக்கு வடிவ தந்து எழுதியது புது அனுபவமாக இருந்தது. ஒரு மகிழ்ச் வெள்ளத்தில் மூழ்கித் திணறுவது போலிருந்தது. துக்க மனத்தை வியாபித்த நேரத்திற்கும் அதில் தோன்றிய வார் தைகள் வடிவம் பெற்றுக் கொண்டதில் ஏற்பட்ட மகிழ்ச்சி கும் இடைப்பட்ட நேரம் ஐந்து நிமிடமாக இருந்தாலும் எ தனே பெரிய மாறுதல் என்று நினைத்துக் கொண்டாள்.

மனசு ஐந்து நிமிடத்திற்கு நிலையாக இருக்க மாட்டே என்கிறது. இன்பமும் துன்பமும் துக்கமும் வேதனையும் மா மாறி வர இவளுக்கு அதிகம் எழுதத் தோன்றுகிறது. அ போதும் கூட அவள் எழுதிய போது எட்டு வரியில் கவிதை சிறியதாக அமைந்தது.

அதை மிஸஸ் மான்யுவலிடம் காண்பிக்க வேண்டு என்று எடுத்து வைத்துக் கொண்டதும் ராதிகா உள்ளே நுழைந்தாள். நாற்காலி மீது உட்கார்ந்து இவள் எழுதி கொண்டிருந்ததைப் பார்த்து, "என்ன, கவிதை எழுத ஆரம் பித்து விட்டாயா?" என்று கேட்டுக் கொண்டே இவளருகி வந்தாள். "வாவ்!" என்று அதை எடுத்து சுத்திப் படித்தாள் அவள் படிக்கும் விதம் இவளைச் சங்கடப் படுத்த மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தாள். ராதிகா படித்து அதைக் கீழே வைத்துவிட்டு,

"உனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது!" என்றாள்.

"யாரிடமிருந்து...?"

"கண்டுபிடியேன் யாரிடமிருந்து என்று."

"எனக்கு எழுத யார் இருக்கிறார்கள்?"

"கிரிதரன்."

"அப்படியா...?" என்று ஆச்சரியத்துடன் கைகளை நீட்டினாள்.

"முகத்துல பாரேன் சந்தோஷத்தை. இத்தனையையு மனசுக்குள்ளே வெச்சிக்கிட்டு எனக்குச் சொல்லாமல் இருக்கே இல்லே..."



"என்ன வெச்சுகிட்டிருந்தேன்? எதைச் சொல்லாமல் மறைக்கிறேன்?"

"இனிமேலும் சொல்ல மாட்டாய்தானே...இருக்கட்டும். நான் கவனித்துக் கொள்கிறேன்..."

"என்ன உளறுகிறாய்...?"

"நான் உளறலே. உண்மை உனக்கு உளறலாகப் படுகிறது."

"நிச்சயமாக நீ உளறுகிறாய். எனக்கும் கிரிதரனுக்கும் இருக்கும் உறவை நீ கொச்சைப் படுத்துகிறாய். நீ நினைப்பது மாதிரி எல்லாம் எதுவும் இல்லே. அவர் என் நண்பன். அவ்வளவுதான்."

"நட்பில்தான் எல்லாமே ஆரம்பிக்கும்."

"மற்ற எல்லாம் இந்த உலகத்தில் கிடைத்துவிடும் ராதிகா. ஒரு நல்ல நண்பன் மட்டும்தான் கிடைக்க மாட்டான். எனக்கு நட்புதான் அவசியம். நீ அனாவசியமாகக் கற்பனை செய்து கொள்ளாதே. அந்தக் கடிதத்தைக் கொடேன்..."

ராதிகா லல்லலா... என்று பாடிக் கொண்டே ஒரு சிறு குழந்தையை ஏமாற்றுவது போல நீட்டி எடுத்துக் கொண்டாள். அவளின் இந்தச் செய்கை ஹரிணிக்குக் கோபத்தை ஏற்படுத்தியது.

"சரி, தர வேண்டாம்."

"கோவமா...இந்தா..." என்று கடிதத்தை அவள் நீட்ட ஹரிணி வாங்கிப் பிரித்தாள்.

'பிரியமுள்ள ஹரிணிக்கு' என்று ஆரம்பித்திருந்தான். என் முந்தின கடிதத்திற்குப் பதிலில்லை. ஏன்? ஒரு மாதம் ஆகிவிட்டது. உன்னைப் பார்க்க வேண்டும் போல இருக்கிறது. இந்தச் சனிக்கிழமை விடுமுறைதானே. சனி ஞாயிறு நாட்களில் இங்கு தங்கும்படி வாயேன். ராதிகா எப்படி இருக்கிறாள். அவளையும் அழைத்துக் கொண்டுவா. திங்கட்கிழமை இருவரும் இங்கிருந்தே கல்லூரிக்குப் போய்விடலாம்.

இப்படிக்கு பிரியத்துடன் கிரிதரன் என்று கையெழுத்திட்டிருந்தான். ஹரிணி படித்து முடித்ததும் கடிதத்தை ராதிகாவிடம் நீட்டினுள். அவள் படித்ததும் போகப் போகிருயா என்று கேட்டான்.

"போகலாமா?" என்று ஹரிணி திருப்பி ராதிகாவிடமே கேட்டாள்.

"எனக்கு ரெகார்ட் ஒர்க் இருக்கும். எப்படி வர முடியும்!

"அங்கே வந்து பண்ணு."

"சந்தோஷமாக இருக்கத்தான் அங்கே போகனும், இதுல ரெகார்டை வேறு எடுத்துக் கொண்டு வரணுமா? நான் வரலே. நீ போய்விட்டு வா. இன்றைக்கு வெள்ளிக் கிழமை!" என்று ஞாபகப்படுத்தினுள்.

"எப்போதுதான் உனக்கு ரெகார்ட் ஒர்க் இல்லே? சீக்கிரம் இன்றைக்கே முடித்து வைத்துவிடு. வேண்டுமானுல் நானும் போட்டுத் தருகிறேன்."

"ஒழுங்காக ஒரு ப்யூரட் வரைய வராது உனக்கு, எனக்கு ரெகார்ட் போட்டுத் தரப் போகிருயா? வேண்டவே வேண்டாம். உன்னிடம் ரெகார்ட் ஒர்க்கைத் தந்துவிட்டு முழுவதும் ரெட் இங்கால் திருத்தின பேப்பரையா நான் வாங்கிக் கொள்ள வேண்டும்?"

"ப்ளீஸ் ராதி. லைஃப்பை இப்போது அனுபவிக்காமல் எப்போது அனுபவிக்கப் போகிருேம்! ராத்திரி முழுவதும் உட்கார்ந்து முடித்துவிடு. வேண்டுமானுல் நானும் விழித்துக் கொண்டு புத்தகம் படிக்கிறேன். எனக்கும் ஏதாவது படிக்க வேண்டும் போல இருக்கிறது. நான் புத்தகத்தைத் தொட்டு அதிக நாட்கள் ஆகிவிட்டது."

"நீ இப்படித்தான் சொல்லுவாய். பத்து மணி ஆன பின்பு ராதிகா தூங்கலாமா என்று துணைத்தேடுப்பாய். நிஜமாகவே நீ விழித்துக் கொண்டிருந்தால்—நானும் இன்றைக்குள் என் வேலையை முடித்துவிட்டால்—வருவேன்."

"நீ முடிக்கிருய். நானும் புத்தகம் படிக்கப் போகிறேன். நாளைக்கு இரண்டு பேரும் கிளம்பிக் கிரிதரன் வீட்டிற்குப் போகப் போகிருேம்."



"சரி. ஒரு நாளுக்கு வேண்டிய துணிகளை எடுத்து வை. நான் வருகிறேன்." ராதிகா சொல்லிவிட்டு எதிரில் உள்ள மேஜையின் மீதிருந்த ஃபைலைப் புரட்ட ஆரம்பித்தாள்.

# 5

நுழையும் போதே அந்த வீட்டில் ஏற்பட்ட மாற்றங்களைக் கவனித்துக் கொண்டே வந்தாள் ஹரிணி. நேபாள கூர்க்கா மாறியிருந்தான். பழைய நேபாளிக்குச் சிரித்த முகம். யாரைப் பார்த்தாலும் சிரிக்கத் தெரிந்த முகம்.

'துமாரா நாம் க்யாஹை' என்று அந்தத் தெரு வழியாகப் போகும் பள்ளிச் சிறுமிகள் தங்களுக்குத் தெரிந்த ஒரே ஹிந்தி வாக்கியத்தில் கேட்கும் போது தென்பஹதூர் என்று பதில் சொல்லுவான்.

'துமாரா நாம் க்யாஹை?" என்று இவனும் திருப்பிக் கேட்பான். கமலா, சீதா, சியாமளா என்று பதில் ஒவ்வொன்ருக வரும். அந்தத் தெரு வழியாகப் போகும் நிறைய பள்ளிக்கூடக் குழந்தைகள் அவனின் சிநேகிதர்கள். பெண் குழந்தைகள் அந்த வீட்டிலிருக்கும் பூக்களைத் தயங்கியபடியே இவன் தருவானே மாட்டானே என்கிற எண்ணத்தில் பயந்து கேட்கும்.

"நீங்களே பூக்கள்தானே! உங்களுக்கு எதற்குப் பூ?" என்று இவன் திருப்பிக் கேட்பான்.

"செம்பருத்திப் பூ கொடு." என்று விடாப்பிடியாக வாசலிலேயே நின்று அவர்கள் கேட்கும்போது இவனுக்கு மறுக்க மனம் வராது. கிரிதரனுக்குப் பூக்களைப் பறித்தால் பிடிக்காது என்று தெரிந்தும் கொத்தாகப் பூக்களைப் பறித்து வைத்துக் கொடுப்பான்.

தென்பஹதூர் மாதிரி இந்த நேபாளக் கூர்க்கா இல்லை. இவர்கள் நுழையும் போதே நிறுத்திக் கேள்விகள் கேட்டான்.

''நீங்கள் யார்? யாரைப் பார்க்க வேண்டும்?'' என்கிற கேள்விகளை ஒரு எஜமானருக்கு உரிய தோரணையில் கேட்டபோ கிரிதரனைப் பார்க்க வந்திருக்கிறோம் என்று சொல்லிவி நடந்தார்கள்.

அது தெருவிலிருந்து சற்றுத் தள்ளின வீடு. பாதைக் இரு புறங்களிலும் செம்பருத்திச் செடிகளில் பூக்கள் அதிகம இல்லை. இரண்டு செடிகள் நன்றாக வாடிக்கூட இருந்த மாமரம் காய்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. விசிறி வா யின் இலைகள் இரண்டு பக்கமும் வாடியிருந்தன.

இவர்கள் உள்ளே போனபோது வழக்கம்போலக் கிரித வராந்தாவில் உட்கார்ந்து எக்ஸ்பிரஸ் படித்துக் கொண்டிரு தான். இவர்களைப் பார்த்ததும் ஹலோ சொல்லிப் புன்சி புடன் எழுந்து வந்தான்.

''என் கடிதம் கிடைத்துத்தான் வந்தீர்களா?'' என் அதே சிரிப்புடன் கேட்டான்.

''கிடைக்காமல் எப்படித் துணிகளுடன் கிளம்பி வ வோம்?''

''அழைத்தால்தான் வர வேண்டுமா? டு எ ஃப்ரெண்ட் ஹவுஸ் தி ரோட் ஈஸ் நெவர் லாங்.''

ஹரிணி மௌனமாக இருந்தாள். ''என் நீங்கள்தா வரக் கூடாதா? உங்களுக்கு மட்டும் எங்களைப் பார்க் வேண்டும் என்று தோன்றிற்று?'' என ராதிகா கேட்க,

''சரி சரி, சண்டை போட வேண்டாம், வாருங்க உள்ளே போகலாம்,'' என்று அழைத்துச் சென்றான் கிரிதரன்.

''என்ன சாப்பிடுகிறீர்கள் இருவரும்?''

''என்ன இருக்கிறது?''

''காஃபி, டீ, ஹேப்பினஸ், ஐஸ்க்ரீம் நான்கும் இருக் -கிறது.''

''காபி சாப்பிடுகிறோம்.''

கிரிதரன் சமையல் செய்யும் அய்யரைக் கூப்பிட்டு மூன் கப் காபியை மாடி அறைக்குக் கொண்டுவரச் சொன்னான்.



ஹரிணிக்கும் ராதிகாவிற்கும் மாடியில் தன் அறைக்கு எதிராக உள்ள அறையை ஒழித்துக் கொடுத்தான்.

''அம்மாவை எங்கே காணோம்?'' ஹரிணி கேட்டாள்.

''தஞ்சாவூரில் அம்மாவின் சிநேகிதி பெண்ணிற்குத் திருமணம். அதற்காகப் போயிருக்கிறாள்.''

''தஞ்சாவூர் அருமையான இடம்!'' என்றாள் ராதிகா.

''நீங்கள் போயிருக்கிறீர்களா?''

''ம். எங்கள் ஊர் மாயவரம். உறவினர்கள் நிறையப் பேர் தஞ்சாவூரில் இருந்திருக்கிறார்கள். இப்போது எல்லாருமே மெட்ராஸுக்கு வந்து விட்டோம்.''

''மாயவரம் மட்டும் என்ன அழகான ஊர் இல்லையா...?''

''அழகுதான். யார் இல்லை என்று சொன்னார்கள்? மெட்ராஸ் லைஃப்புக்கு ஆசைப்பட்டு வந்தாகி விட்டது. இனி மேல் எங்கே அந்த இடத்திற்கு எல்லாம் போக முடியப் போகிறது? இந்தச் சத்தத்திற்கும் நெருக்கடிக்கும்தான் நம்மை பழக்கிக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அதிகமாக மனிதர்களின் முகத்தைப் பார்க்காமல் நிசப்தமாக இருக்கும் இடத்திற்குப் போய் ஒரு வாரம் தங்கிவிட்டு வர வேண்டும் போல இருக்கிறது. இடம்தான் இல்லை.''

''எங்கள் ஊருக்கு வருகிறீர்களா? அடுத்த வாரம் நான் போகலாம் என்றிருக்கிறேன்.''

''எங்கே இருக்கிறது உங்கள் ஊர்?''

''அருகில்தான். வெகு அருகில். வந்தவாசியைத் தாண்டிப் போகவேண்டும். வாங்களேன். போய் இரண்டு நாட்களில் திரும்பி வந்து விடலாம்.''

''இப்படி எங்கேயாவது கூப்பிட்டுக் கொண்டே இருங்கள். எனக்கும் வரவேண்டும் என்று தோன்றி விடும். அப்புறம் அவ்வளவுதான். ரெகார்ட் ஒர்க் நின்று விடும். படிப்பு நின்று விடும். அப்புறம் நானும் பெயிலாகி இந்த பி.எஸ்ஸி. யிலேயே இருக்கலாம். கோர்ஸை முடித்து வெளியில் வந்ததும் படித்துக்கொள்ளலாம் பாருங்கள்.''

''இரண்டு நாளில் என்ன அப்படிப் படித்துவிட்டு போகிறீர்கள் நீங்கள்?''

''இப்போது இரண்டு நாள். உங்கள் ஊருக்குப் போக இரண்டு நாள் என்று தள்ளிக் கொண்டே வந்தால் எக்ஸாமுக்கு முந்தின நாள் பன்னிரண்டு மணி நேரத்தில் படித்துப் பெயில் ஆக வேண்டியதுதான்.''

''பன்னிரண்டு மணி நேரத்தில் படித்துப் பெயில் ஆவது எப்படி என்று ஒரு புத்தகம் வேண்டுமானால் எழுதிவிடேன் ராதிகா.'' ஹரிணி சொல்லக் கிரிதரன் சிரித்தான். அதற்குள் அய்யர் மூன்று கப் காபியுடன் வர மூவரும் அதைப் பருக ஆரம்பித்தார்கள். அவர்கள் முடிக்கும் வரை காத்திருந்து காலிக் கோப்பைகளுடன் கீழே இறங்கிப் போனதும் அவர்களைத் தன் அறைக்கு அழைத்துக் கொண்டு போனான் கிரிதரன்.

நுழையும் போதே அந்த அறை சுத்தமாக இருப்பது தெரிந்தது. எதிரில் கண்ணாடிப் பீரோவில் புத்தகங்களாக அடுக்கப்பட்டிருந்தன. ஹரிணி அருகில் சென்று பார்த்தாள். ஹோமர், வெர்ஜில், போப், மில்டன், ஷேக்ஸ்பியர், ஸ்பென்ஸர், ஜான்ஸன் என்று நிறைய ஷெல்பை நிறைத்துக் கொண்டிருந்தன.

அந்தப் பீரோவிற்கு மேல் ஒற்றைக் கழுகு ஒன்று கண்ணாடி பிரேமிற்குள் பறந்து கொண்டிருந்தது. அறை மூலையில் ஒரு செஸ்ட் ஆப் டிராயர். அதன் மேல் ஸான்யோ டேப்ரிகார்டர். அருகில் வரிசையாக காஸெட்டுகள். ஹரிணி அதைக் கவனிப்பதைப் பார்த்து, ''பாட்டு ஏதாவது போடட்டுமா?'' என்று கிரிதரன் கேட்டான்.

''என்னவெல்லாம் வைத்திருக்கிறீர்கள்?''

''வெஸ்டர்னா?''

''கர்னாடிக் கூட இருக்கிறதா?''

''ம். எம்.எஸ்.ஸின் மீராபஜன் இருக்கிறது. பாலமுரளி, ஜேசுதாஸ், குன்னக்குடி வயலின், சிட்டிபாபு வீணை எல்லாம் இருக்கிறது. வெஸ்டர்னில் அபா, போனியம், பீட்டில்ஸ், லிப்ஸ், ஒஸிபெஸா வைத்திருக்கிறேன்.''



''உருது கஜல் வைத்திருக்கிறீர்களா?'' ராதிகா கேட்டாள்.

''ஜகஜித் சித்ரா சிங்கின் காஸெட் இருக்கிறது. கேட்கிறீர்களா?''

''ம். போடுங்கள். எனக்கு கஜல் ரொம்பவும் பிடிக்கும்.''

''நான் அதைக் கேட்டதே இல்லை,'' என்றாள் ஹரிணி.

''பாலைவனச் சோலை படத்தில் மேகமே மேகமே என்று ஒரு பாட்டு வரும் கேட்டிருக்கிறாயா? அந்தப் பாட்டின் மெட்டு கஜலிலிருந்து எடுக்கப்பட்டதுதான். கிரிதரன் போடுகிறார். கேளேன்.''

ஆரம்பமே ஹரிணிக்குப் பிடித்திருந்தது. எத்தனை மென்மையான குரல் என்று ஆச்சரியப்பட்டுப் போனாள். ஒவ்வொன்றாகக் கேட்கக் கேட்க அந்த ஆச்சரியம் இன்னும் அதிகமாயிற்று. முழுவதும் கேட்டு முடிக்கின்ற வரையில் அறை நிசப்தமாக இருந்தது. அந்த நிசப்தத்தைக் கலைக்கின்ற மாதிரி ஹரிணி, ''ராதிகா கூட நன்றாகப் பாடுவாள்!'' என்றாள்.

''அப்படியா...! எனக்குத் தெரியவே தெரியாதே!'' என்றான் கிரிதரன்.

''முறைப்படி சங்கீதம் கற்றுக் கொண்டிருக்கிறேன். சுமாராகத்தான் பாடுவேன். ஹரிணி சொல்வதையெல்லாம் நம்பாதீர்கள்.''

''ஹரிணி சொல்வதையெல்லாம் நான் எதற்கு நம்ப வேண்டும். நீங்கள் பாடுங்களேன், எது உண்மை என்று எனக்குத் தெரிந்துவிடும்.''

''தயவு செய்து இன்றைக்குப் பாடச் சொல்லாதீர்கள் இன்னொரு நாள் பாடுகிறேன்.''

''உங்களை நான் வற்புறுத்தவில்லை. என்றைக்குப் பாட வேண்டும் போலத் தோன்றுகிறதோ அன்றைக்குப் பாடுங்கள்.''

''சரி. இந்த இரண்டு நாட்களையும் நாம் எப்படிக் கழிக்கப் போகிறோம்? ஏதாவது சினிமாவிற்குப் போகலாமா?'' ஹரிணி கேட்டாள்.

''சினிமா வேண்டாம். நாளைக்கு எல்லோரும் கோல்டன் பீச்சிற்குப் போகலாமே. அப்பாவைக்கூட நேற்றுக் கேட்டேன் அவரும் வருவதாகச் சொல்லியிருக்கிறார். அம்மா இருந்திருக்கலாம். நான் போக வேண்டாம் என்று கூடச் சொன்னேன். அவசியமாகப் போக வேண்டும் என்று சொல்லிக் கிளம்பிப் போய் விட்டார்கள். அம்மாவும் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அவர் எப்பவுமே இப்படித்தான். எங்கே கூப்பிட்டாலும் வர மாட்டார்கள். வீட்டை விட்டு எங்கு போகவும் பிடிக்காது. இன்றைக்குப் பௌர்ணமி. நாளைக்கு அலை ஓரத்தில் உட்கார்ந்து சுகமான காற்றையும் நிலவையும் அனுபவித்துக்கொண்டே இருக்கலாம். பீச்சுக்குப் போய் எவ்வளவு நாளாகி விட்டது. அந்தப் பக்கத்திலேயே ஒரு வீடு பார்த்துக் கொண்டு போய்விடலாமா என்றுகூட நினைத்திருக்கிறேன். ஒரு ரூம், ஒரு கிச்சன், நிறைய புக்ஸ், ஒரு டேப் ரிகார்டர், கேசட்ஸ்... நினைத்துப் பார்க்க எத்தனை நன்றாக இருக்கிறது. இல்லை...''

''ம். கனவிலேயே மூழ்கியிருக்கிறவனுக்கு நிஜமான விஷயங்கள் பிடிக்காதுதான்.''

சட்டென்று மூவரும் திரும்பிப் பார்த்தார்கள். கிரிதரனின் தந்தை பாஸ்கரன் நின்று கொண்டிருந்தார்.

''என்னப்மா உன்னை இத்தனை நாளாகக் காணோம். வீட்டுப் பக்கம் வரக்கூடாதா?''

''வரணும்னுதான் நினைக்கிறேன். நேரம்தான் கிடைக்கவில்லை.''



''மனசிருந்தால் வழி இருக்குமா. இரண்டு நாள் தங்கற மாதிரிதானே வந்திருக்கே?''

''ஆமாம்.''

''நீயும்தானே ராதிகா?''

''நானில்லாமல் ஹரிணி மட்டும் தனியாக வந்துடுவாளா?''

''அது சரி, சாப்பிட்டு விட்ீர்களா?''

''இன்னும் இல்லை. உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறோம். அப்புறம் நாளைக்கு கோல்டன் பீச் போகலாம் என்று சொல்லியிருந்தேனே. ஞாபகம் இருக்கிறதா...?''

''ம். அதனால்தான் எல்லா வேலைகளையும் இன்றைக்கே முடித்துவிட்டு வந்து விட்டேன். நாளை முழுவதும் நான் ஃப்ரீதான். நீங்கள் சாப்பிடக் கீழே இறங்கி வாருங்கள். ஐயர் நமக்காகக் காத்துக் கொண்டிருப்பார்!'' என்று மணி பார்த்தார். ஒன்பது இருபது ஆகியிருந்தது.

''ஒன்பதுக்கு மேலாகவா ஆகிவிட்டது. இவ்வளவு நேரம் ஆனதே தெரியவில்லை!'' என்றாள் ராதிகா.

அவர்கள் போனபோது டைனிங் டேபிள் மீது எல்லாம் எடுத்து வைக்கப்பட்டிருந்தது. எல்லோரும் கீழே இறங்கி வருவதைப் பார்த்துச் சமையல் அறையில் புத்தகம் படித்துக் கொண்டிருந்த ஐயர் எழுந்து வந்தார். ''ஸாரி ஐயர்! பேசிக் கொண்டிருந்ததில் நேரமானதே தெரியவில்லை!'' என்று தான் தாமதமாக வந்ததற்கு மன்னிப்புக் கேட்டு உட்கார்ந்தான் கிரிதரன்.

# 6

பௌர்ணமிக்கு அடுத்த நாள் நிலவு சற்றுப் பெரியதாக இருப்பது போல இருந்தது. அந்த வெளிச்சம் அலைகளின்

மீது பட ஒவ்வொரு அலையும் இரைச்சலுடனும் ஆர்ப்பாட்டத்துடனும் ஓடி வந்தது. பின் கரையில் மோதி அந்த ஆர்ப்பாட்டம் எல்லாம் அடங்கி அமைதியாகத் திரும்பிற்று.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஹரிணியின் மனசைச் சோகம் கவ்விக் கொண்டது. எதையோ சாதிக்க ஆர்ப்பாட்டத்துடன் வந்து அது முடியாமல் அடங்கிப் போவதைப் போல இருந்தது. அந்த நிசப்தமும், அதன் அழகும், சில்லென்று வீசும் காற்றும் பழைய நிகழ்ச்சிகளை ஞாபகப் படுத்தின.

அப்பாவுடன் நிறையத்தரம் மெரீனாவுக்கு வந்திருக்கிறாள் அவள். அப்படி வரும்போதெல்லாம் ஒரு மணி நேரத்திற்கு மேல் அலைகளில் காலை நனைத்துக் கொண்டு நின்றிருப்பாள். அப்பா கடலோரத்தில் இவளைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருப்பார். மகள் எங்கேயாவது அடித்துக் கொண்டு போய்விடப் போகிறாளே என்கிற பயம் அவருக்கு அடிக்கடி வந்துவிடும் போலிருக்கிறது.

''ஹரிணி! அதிக தூரம் போகாதேம்மா. டிரஸ் எல்லாம் நனைந்துவிடும். வீட்டுக்குப் போகணும். நேரமாயிடுத்து, பார்!'' என்பார்.

''இன்னும் ஐந்து நிமிடம்ப்பா.''

ஹரிணியின் அந்தக் கெஞ்சுகிற பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியாமல், ''ஐந்து நிமிஷம்தான். அப்புறம் வந்து விடணும்,'' என்று சொல்லுவார். அந்த ஐந்து நிமிடம் அரை மணி ஆகிவிடும். மனசில்லாமல் திரும்பி வருவாள் ஹரிணி.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை இன்னும் சீக்கிரமாக வந்து அலையில் அதிக நேரம் நிற்க வேண்டும் என்கிற நினைப்புடன் அப்பாவின் கரங்களை ஓடி வந்து பிடித்துக் கொள்ளுவாள். பழைய நிகழ்ச்சிகள் எல்லாம் நிழற்படமாகத் தெரிய 'ஹரிணி' என்ற குரல் பின்னால் கேட்டது. அத்தனை நினைவுகளும் கலைந்து போய்த் திரும்பினாள் அவள். ராதிகா நின்று கொண்டிருந்தாள்.



''உன்னை எத்தனை தரம் கூப்பிடுவது? காதில் விழலை? வாயேன் சாப்பிட. அங்கிருந்து பாஸ்கரன்கூட நான்கு முறைக்கு மேல் கூப்பிட்டுவிட்டார்.''

''அப்படியா.... அப்பா ஞாபகம் வந்து விட்டது. அப்படியே உட்கார்ந்து விட்டேன்.''

''சரி, எழுந்து வா—'' ராதிகா ஹரிணிக்கு கை கொடுத்தாள். அவர்கள் இருவரும் நடந்து வருவதைப் பார்த்துக் கொண்டிருந்த கிரிதரன் அவர்கள் அருகில் வந்ததும் சொன்னான்.

''உங்க இரண்டு பேரையும் பார்த்தால் எனக்குப் பொறுமையாகக்கூட இருக்கிறது.''

''எதற்குப் பொறுமைப் படவேண்டும்?''

''உங்கள் நட்பின் மேல்தான்.''

''எங்களுக்கு இடையில் எவ்வளவு நட்பு இருக்கிறதோ அந்த நட்பு உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் கூட இருக்கிறது!'' ஹரிணி சொல்லிக் கொண்டே அருகிலிருந்த பெட்ஷீட்டை விரித்தாள்.

பாஸ்கரன் சாப்பாட்டுத் தூக்குகளை எடுத்து ஐயர் பண்ணித் தந்திருந்த பெங்காலித் தித்திப்புகளைக் காகிதத் தட்டில் வைத்துக் கொடுத்தார்.

''ஐயரைக் கூட அழைத்துக் கொண்டு வந்திருக்கலாம்—'' ராதிகா சொல்ல, கிரிதரன் சிரித்துவிட்டான்.

''நீங்கள் கூப்பிட்டுப் பாருங்கள். நான் எதுக்கும்மா? நீங்க எல்லாரும் போயிட்டு வாங்க. இங்கேயே படுத்துத் தூங்கினால் அத்தனை சந்தோஷமும் நிம்மதியும் எனக்குக் கிடைத்துவிடும் என்பார்.''

''கலியாண் வீட்டில் இல்லையா? நான் வந்ததிலிருந்தே பார்க்கவில்லையே,'' என்று கேட்டாள் ஹரிணி.

''அம்மா தனியாகப் போகிறார்களே என்று கூடச்சேர்ந்து போய்விட்டான். தஞ்சாவூர் கோவிலை அவன் பார்த்ததே இல்லையாம். சரி போய்விட்டு வா என்று அப்பா அனுப்பி

விட்டார். இரண்டு நாட்களாகத் தோட்டத்திற்குத் தண்ணீர் கொட்டுவது நான்தான். நாளைக்கு வந்ததும் நான் செய்த வேலையில் ஆயிரத்தெட்டு தப்பு கண்டுபிடிக்கப் போகிறான்."

"அவனுக்கு செய்கிற வேலையில் பர்பெக்ஷன் அவசியம். ஒவ்வொரு செடியையும் அவன் குழந்தை மாதிரி பார்த்துக் கொள்கிறான். தோட்டத்தில் எத்தனை பூ பூத்திருக்கிறது. மறுநாள் எத்தனை பூக்கும் என்பதிலிருந்து தெரிந்து வைத்துக் கொண்டிருப்பான்."

"எத்தனை பேருக்குச் செய்கிற வேலையில் சந்தோஷம் கிடைத்துவிடுகிறது?" என்றார் பாஸ்கரன்.

"வேலையில் ஆர்வம் இருந்தால் அந்த சந்தோஷம் தானாகக் கிடைக்கும். செய்கிற வேலையில் ஆர்வம் இல்லாமல் போனால்தான் வாழ்க்கையே போரடித்து விடுகிறது."

பேச்சு மெதுவாகத் திரும்பிற்று. அப்பாவின் நண்பர் வேணுகோபாலனிலிருந்து ஆரம்பித்து சைக்காலஜியைத் தொட்டு எங்கெங்கெல்லாமோ சென்றது. சிறிது நேரம் அந்தப் பேச்செல்லாம் முடிந்து அமைதியானபொழுது ஹரிணி சொன்னாள். "ராதிகா பாடி நீங்கள் கேட்டதில்லையே... ரொம்ப இனிமையான குரல். கேட்கக் கேட்க மனசெல்லாம் உருகிப் போயிடும். அப்படியே இலேசாகி வானத்தில் பறக்கிற மாதிரி இருக்கும்."

"அப்படியா...!" இரு கண்களையும் விரித்துப் பாஸ்கரன் கேட்டுவிட்டுப் பின் சொன்னார். "எனக்குச் சங்கீதம்னால் ரொம்பவும் பிடிக்கும்மா. ஒரு பெண் இருந்திருந்தால் அவளைப் பெரிய பாடகியாக்கியிருப்பேன்."

"நான் உங்களை அன்றைக்கே பாடச் சொல்லிக் கேட்டேன். இன்னொரு நாள் பாடுகிறேன் என்று சொல்லி மறுத்துவிட்டீர்கள். இன்றைக்கு உங்களை நிச்சயமாக விட மாட்டோம். மூட் இல்லை என்றெல்லாம் சாக்குச் சொல்ல முடியாது. அமைதியான சூழ்நிலை, சில்லென்று காற்று, அலையோசை பின்னணியாக ஒலிக்கும். நிச்சயம் நீங்கள் மறுக்கக் கூடாது," என்றான் கிரிதரன்.



ஒரு நிமிஷ மௌனத்திற்குப் பின்பு ராதிகா பாட ஆரம்பித்தாள். "குழலூதி மனமெல்லாம்" என்று ஆரம்பித்துப் பாடின போது அங்கிருந்த அத்தனை மனங்களையும் கொள்ளை கொண்டுதான் போனது அந்தக் குரல். உருகி உருகி உன்னை நான் அழைக்கவா இதர மாதருடன் நீ களிக்கவா என்கிற வரியும், அந்தக் குரலும் எல்லோரையும் கட்டிப் போட்டது. கடற்கரையின் மோனமான அழகுக்கும், நிலா வெளிச்சத்துக்கும், சில்லென்று வீசுகிற காற்றுக்கும் இடையில் அந்தக் குரலைக் கேட்டுக் கொண்டு அப்படியே செத்துப் போய்விட வேண்டும் என்றிருந்தது.

அந்த நாள் அப்படியே நீடிக்கக் கூடாதா என்றும் இருந்தது. பாட்டு முடிந்ததும் அந்த இடத்தின் அமைதி அதிகமாயிற்று. எல்லார் மனசையும் சொல்ல முடியாத ஒரு சோகம் இறுக்கிக் கொண்டது. அந்த மௌனம் மறுபடியும் ஹரிணியை எங்கேயோ கொண்டு போய் நிறுத்திவிடும் என்று தோன்ற சூழ்நிலையைக் கலகலப்பாக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டே, "உங்களிடம் நான் ஒன்று கேட்கலாமா?" என கிரிதரனைப் பார்த்தாள் ராதிகா.

"என்ன...! தாராளமாகக் கேட்கலாம்."

"நீங்கள் ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை?"

"கேளும்மா. நான்கூடச் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். இந்த வயசில் ஒரு பேரனையோ, பேத்தியையோ வைத்துக் கொண்டு கொஞ்ச வேண்டும் என்கிற ஆசை எனக்கு வராதாம்மா? எல்லா அப்பாவும் ஆசைப்படுகிற ஒரு விஷயம்தானே. நான் சொன்னால் இவன் கேட்கவே மாட்டேன் என்கிறான்."

"ஐயாம் ஸாரிப்பா. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் உங்களைத் திருப்திப் படுத்த என்னால் முடியாது..." கிரிதரன் சொல்லிவிட்டு சிகரெட் பாக்கெட்டையும் தீப்பெட்டியையும் எடுத்தான். குனிந்து கஷ்டப்பட்டு ஐந்து தீக்குச்சிகளை அணைய வைத்து ஆறுவதில் பற்ற வைத்துக் கொண்டான்.

புகையை இதயம் முழுவதும் இழுத்துக் கொண்டபோது சிகரெட் நுனி பிரகாசமாகி மங்கியது.

"பாரும்மா. இப்படி ஏதாவது கேட்டுவிட்டால் சிகரெட்டும் தீப்பெட்டியுமாக ஆகிவிடுகிறான். இப்படி இருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்! இவனோட அம்மாவுக்குத் தினமுமே இவனைப் பற்றின கவலைதான். எந்த நேரத்திலும் எங்கே போனாலும் அவனுக்கு நிம்மதி இருக்கப் போறது இல்லை. இப்போ தஞ்சாவூருக்குப் போகிறேனே, அங்கே எல்லாரும் இவனைப் பற்றிக் கேட்கப் போகிறார்கள் என்று சொல்லிக்கொண்டே போனான்.

"எங்களுக்கு இன்னொரு பையன் இருந்தாலாவது அவனுக்குக் கல்யாணம் பண்ணிப் பார்த்து நாங்கள் திருப்தி படுத்திக் கொள்வோம். இவன் ஒருத்தன்தானே. எங்களுடைய ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடமை இவனுக்கு இருக்கிறதா இல்லையா என்று நீங்களே சொல்லுங்கள். இப்போது கூட அவன் சம்மதிக்கட்டும். நான் பெண் பார்த்து வருகிறேன். இட் ஈஸ் நாட் டூ லேட். வயசு ஒண்ணும் அதிகமாக ஆயிடலை. முப்பத்தெட்டுதானே...இந்த வயசில் எத்தனை பேர் திருமணம் செய்து கொள்ளவில்லை...?"

"திருமணம்கிறதே ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் சடங்கின் மூலம் சேர்த்து வைப்பதுதான் என்று அப்பா நினைக்கிறார். அந்த மாதிரி ஒரு திருமணம் எனக்கு இனிமேல் நடக்கவே முடியாது ராதிகா. நான் கல்லூரியிலே படிக்கிறபோது என்னுடன் சுதா என்கிற பெண் படித்தாள். அவள் பிராமண வகுப்பைச் சேர்ந்தவள். வைதீகமான குடும்பம் அவளுடையது. அவளுடைய அப்பா ரொம்ப ஆசாரமானவர்.

"நெற்றியிலே எப்போதும் பட்டையாக நாமம் இருக்கும். பஞ்சகச்சம்தான் கட்டிக் கொள்வார். அவளோட அம்மாவும் அப்படித்தான். இரண்டு பேருமே சமஸ்கிருதம் படித்தவர்கள். சுதாவினுடைய தாத்தாவும் சமஸ்கிருதப் பண்டிதர். அவளும் ரொம்ப இண்டலிஜெண்ட். இரண்டு பேரும் ஆறு வருஷம்



ஒன்றாகப் படித்தோம். அவளுக்கு எந்த விதத்திலேயும் நான் பொருத்தமில்லாதவன் என்று எனக்குத் தெரிந்தும் அவளிடம் என் மனம் அடிமைப்பட்டு விட்டதை என்னால் தடுக்க முடியவில்லை.

333031

அவளும் என்னை விரும்பினாள். ஆறு வருடப் பழக்கம் எங்கள் அன்பை அதிகப்படுத்திவிட்டது. எங்கள் இருவருக்கும் நிறைய ஒற்றுமை இருந்தது. நான் நினைத்ததை அவள் பேசுவாள். அவள் பேச நினைத்த விஷயத்தை நான் பேசுவேன். உலகத்தையே நான் அவளிடம்தான் பார்த்தேன். அவளுக்கு உலகமே நான் ஆகிப் போனேன். இரண்டு பேரும் நிறையப் பேசணும்னு நினைத்துக் கொண்டு வருவோம். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டால் எதுவும் பேசத் தோன்றாது.

"மௌனமாகவே பாதி நாட்களை கழித்திருக்கிறோம். இந்த மாதிரி அலையோரத்துல எத்தனை நாள் மௌனமாகக் கழித்திருக்கிறோம் தெரியுமா? எம்.பில். படிக்கும்போதுதான் அவளோட பெற்றோர்களுக்கு எங்களுடைய நட்பு தெரிய வந்தது. அப்போ நான் ஹாஸ்டல்லே இருந்தேன். அவ அப்பா என்னைப் பார்க்க வந்தார். விஷயம் தெரிந்துதான் வந்திருக்கிறார் என்று புரிந்து விட்டது. அவர் படித்தவர். எங்களை நிச்சயமாகப் புரிந்துகொள்வார் என்று நினைத்தேன். அதனால் சுதாவை நான் விரும்புகிறேன். அவளும் என்னை நேசிக்கிறாள். நீங்கள் என்னைப் புரிந்துகொண்டு எங்களுக்குத் திருமணம் செய்து வையுங்கள் என்று கேட்டேன். அவர் கொஞ்ச நேரம் பதில் எதுவும் சொல்லாமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கண்கள் அத்தனை அழகாக இருந்ததை அப்போதுதான் கவனித்தேன். என் பெண்ணிற்கு எந்த விதத்தில் நீ தகுதி உடையவனாக இருப்பாய் என்று கேட்கிற மாதிரி இருந்தது. அவள ...ருகில் நெருங்க எனக்கு எந்த விதத்திலும் தகுதி இல்லை ...ன்று அவர் நினைப்பதில் தவறு எதுவும் இல்லை. கொஞ்ச நேரம் என்னையே பார்த்துக் கொண்டிருந்த அவர் என்னிடம் ...சான்னார்.

"உனக்கும் எங்களுக்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. நான் மிகமிக ஆசாரமான குடும்பத்தைச் சேர்ந்தவன். எங்க குடும்பத்தில் எந்தப் பெண்ணையும் அதிகமாகப் படிக்க வைக்க வழக்கம் இல்லை. நான் மட்டும் சுதாவைப் படிக்க வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். எல்லோருடைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் படிக்க வைத்தேன். நீயும் படிச்சவன்தானே. என்னைப் புரிந்து கொள்வாய் என்ற நோக்கத்தோடுதான் நான் இங்கே வந்திருக்கிறேன். காதலித்தால் இரண்டு பேரும் இணைந்துதான் ஆக வேண்டுமா? உடலும் உடலும் சேர்கிற வாழ்க்கையை நீங்க இரண்டு பேரும் மறக்க முடியாதா?

"உண்மையான அன்புக்கு இதெல்லாம் அவசியம் இல்லைன்னு நினைக்கிறேன். அன்பு கொண்ட இரண்டு உள்ளங்கள் பிரிந்து வெகு தூரத்தில் இருந்தாலும் ஒன்றை ஒன்று நேசிக்க முடியும். அது சாத்தியம்தான். சுதா பிறந்த மறு நிமிஷமே என் நண்பன் ஒருவனுக்கு வாக்குத் தந்துவிட்டேன். அவனுக்கு ஒரு மகன் இருக்கிறான். அவனும் நிறையப் படித்திருக்கிறான். சின்ன வயசிலிருந்தே அவன்தான் என் மாப்பிள்ளைன்னு தீர்மானிச்சாச்சு.

"இருபத்து மூன்று வருஷமாக அந்த எண்ணத்தை வளர விட்டாச்சு. அந்தப் பையனுக்கு இந்த விஷயம் தெரியும். சுதாவிற்கும் தெரியும். இரண்டு பேரும் சிறிய வயதில் பார்த்துக் கொண்டதுதான். அந்தப் பையனும் சுதாவைத்தான் நினைச்சுண்டு இருக்கான். அவனின் அப்பா தான் குறிக்கச் சொல்லிக் கேட்டிருக்கிறான். நான் என்ன செய்யட்டும் என்று என்னிடம் கேட்டார். நான் ஐந்து நிமிஷம் பதில் சொல்லாமல் நின்றிருந்தேன். உன்னை என் நிலையில் வெச்சுப் பாருப்பா. அப்போ நீ என்ன செய்வாய் என்று சொல்லு. அதையே நானும் செய்கிறேன். எனக்கு மனுஷ மனங்களைப் பிரிச்சு வெச்சு வேடிக்கை பார்க்கணும்ன்ற எண்ணம் இல்லை. உனக்குச் சுதாவைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தால் இருபது வருஷமா விதை போட்டு மரம் மாதிரி ஆசையை வளர்த்து வெச்சிண்டிருக்கிற அந்தப் பையனை ஏமாத்தணும்.



அந்தப் பையனுக்குக் கல்யாணம் பண்ணித் தந்தால் உன்னை ஏமாத்தணும். யாராவது ஒருத்தர் விலகித்தான் போகணும். உனக்கு முடிவெடுக்க முடியல்லைனால் அந்தப் பையனையும் கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன். எல்லோரும் சேர்ந்து என்ன சொல்கிறீர்களோ அதைச் செய்கிறேன் என்றார். அவர் பேசி முடித்ததும் நான் இனிமேல் சுதாவைப் பார்க்க மாட்டேன். சத்தியமாகச் சொல்கிறேன். நீங்கள் உங்கள் இஷ்டம் எதுவோ அதை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று அப்போது இருந்த மனநிலையில் சொல்லி விட்டேன்.

அவர் என் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நின்று விட்டார். கண்ணிலிருந்த கண்ணீர் கன்னங்களில் கோடிழுக்க உசத்தமனுஷன்ப்பா நீ. உன்னோட நட்பு கிடைக்க என் மகள் கொடுத்து வைச்சிருக்கணும். அது கடைசிவரை நட்பாகவே மாற நானும் கொடுத்து வெச்சிருக்கணும் என்றார். அவர் போனதும் சுதாவை நிஜமாகவே பார்க்கக் கூடாது—அவளுடன் பேசக்கூடாது என்றெல்லாம் நினைத்துப் படிப்புக்கு எல்லாம் முழுக்குப் போட்டுவிட்டுக் கிளம்பிவிட்டேன்.

அப்புறம் சுதா என்னைத் தேடியிருக்கிறாள். எங்கெங்கோ எனக்காக அலைந்து பார்த்திருக்கிறாள். திருமணத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அப்புறம் ஒரு நாள் அவளைப் பார்த்தேன். ஒரு கடை வாசலில் என்னைப் பார்த்ததுமே அழ ஆரம்பித்து விட்டாள். என் வீட்டு முகவரியை வாங்கிக் கொண்டாள். அன்றே அவள் கணவனுடன் திரும்பியும் வந்தாள். அவனிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாளாம். விருப்பமில்லாமல் உறவு வைத்துக் கொள்ள அவனுக்கும் கஷ்டமாக இருந்திருக்கிறது. என்னையும் சுதாவையும் சேர்த்து வைக்கத்தான் வந்திருப்பதாகச் சொன்னான். எனக்குத் திருமணத்திலேயே விருப்பமில்லை என்று சொன்னேன்.

பின் அவளின் அப்பா வந்து என்னைப் பார்த்தது—அவர் பேசினது எல்லாவற்றையும் சொல்லி அந்த மனிதனின் மனம் நோக எதையுமே செய்ய மாட்டேன் என்றும் சொன்னேன்

அவள் கிளம்பிப் போய்விட்டாள். அடுத்த நாள் அவள் இருபது தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டுத் தற்கொலை செய்துகொண்டு விட்டாள். அவளின் செய்கை எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. கடைசியாக அவளைப் பார்க்கப் போனேன்.

அவளுடைய தந்தை ஆடிப் போய்விட்டார். என்னைப் பார்த்ததும் சிறிய குழந்தைப் போலத் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டார். அவரை என்ன சொல்லித் தேற்றுவது? அந்த நிகழ்ச்சிக்குப் பின்னால் யாரையும் நினைச்சுப் பார்க்க முடியலே. அப்பா அம்மாவிற்காக ஒரு கல்யாணம் பண்ணிக்கிட்டு ஒரு பெண்ணோட வாழ்க்கையை எதற்கு நான் பாழடிக்கணும்?

இந்தப் பதினைந்து வருஷத்துல நான் அவளை நினைச்சுப் பார்க்காத நாள் கிடையாது. ஒரு அழகான விஷயத்தைப் பார்த்தால் அவளோட ஞாபகம் தான் வருகிறது. எங்களுக்கு இடையில் வளர்ந்த அந்த நட்பின் நினைவுகளிலேயே என்னால் வாழ்ந்து விடமுடியும். அது போதும் எனக்கு. இப்போது சொல் ராதிகா, நான் திருமணம் செய்து கொள்ளாமல் என் அம்மா அப்பாவை ஏமாற்றி விட்டேனா என்று. காதல் அனுபவம் உள்ள உன் மனசுக்கு என்னை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறேன்."

ஹரிணிக்கு அவனுடைய கடைசி வாக்கியம் ஆச்சரியத்தை ஏற்படுத்திற்று. கிரிதரனை நேராகப் பார்த்து, "வாட் யு மீன் மிஸ்டர் கிரிதரன்?" என்று கேட்டாள்.

"நிஜமாகத்தான் சொல்கிறேன் ஹரிணி, என்னால் சுதாவைத் தவிர வேறு யாரையும் நினைத்துப் பார்க்க முடியாது!"

"நான் அதைப் பற்றிக் கேட்கவில்லை நீங்கள் கடைசியாக ஏதோ சொன்னீர்களே..."

"காதல் அனுபவம் உள்ள ஒரு மனசுக்குத்தான் என்னைப் புரிந்து கொள்ள முடியும் என்று ராதிகாவிடம் சொன்னேன்..."

"ராதிகா யாரையும் காதலிப்பதாகத் தெரியவில்லையே!" கிரிதரன் திரும்பி ராதிகாவைப் பார்த்தான்.

"ஐயம் ஸாரி ராதிகா. உங்கள் இருவருக்கும் இடையில் எந்த ரகசியமும் இருக்காது என்று நினைத்தது தவறுதான்."



"என்னிடமிருந்து கூட மறைத்து விட்டாய் பார்த்தாயா நீ?" ஹரிணி ராதிகாவிடம் கேட்டாள்.

"மறைக்க வேண்டும் என்கிற எண்ணம் எதுவும் எனக்கு இல்லை ஹரிணி."

"சொல்ல வேண்டும் என்கிற எண்ணமும் இல்லை தானே..."

"நான் நிறைய முறை உன்னிடம் சொல்ல வந்தேன். ஆனால் ஏதோ உன்னிடம் சொல்ல விடாமல் தடுத்துவிட்டது."

"எங்கள் நட்பைப் பார்த்துப் பொருமைப் பட்டீர்களே, இப்போது சொல்லுங்கள் கிரிதரன்—பொருமைப்படும் படியாகவா எங்கள் நட்பு இருந்திருக்கிறது. எதை ஒரு தோழியிடம் முதலில் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்று ஒரு பெண் நினைப்பாளோ அந்த விஷயத்தையே என்னிடமிருந்து மறைத்து விட்டாள் என் ஆருயிர்த் தோழி..."

"தவறாக நினைத்துக் கொள்ளாதே ஹரிணி. ராதிகா மறைக்க வேண்டும் என்பதற்காக மறைத்திருக்க மாட்டாள்!"

"அப்போதும் அவளுக்கே பரிந்து கொண்டு வாருங்கள் நீங்கள்... அது சரி, உங்களுக்கு எப்படி இது தெரியும்?"

"இருபது நாட்கள் முன் பிரிட்டிஷ் கவுன்சில் லைப்ரரியில் இரண்டு பேரையும் பார்த்தேன். ராதிகா என்னைப் பார்க்கவில்லை. தன்னைச் சுற்றி உலகம் உழல்கிறது என்கிற சிந்தனையே இல்லாமல் அவள் பேசிக் கொண்டதிலிருந்து புரிந்து கொண்டேன். அப்புறம் இரண்டு முறை அவர்களைப் பீச்சில் கண்ணகி சிலைக்கு அருகில் பார்த்தேன். அதற்கு அப்புறம் கூடவா என்னால் புரிந்து கொள்ள முடியாது?"

"ஏதோ செய்யக் கூடாத ஒன்றை நான் செய்து விட்டதாக அல்லவா நீங்கள் இருவரும் பேசுகிறீர்கள்."

"இல்லை. ராதிகா காதலித்துத் திருமணம் செய்து கொள்வதை நான் வரவேற்கிறேன்... யூ கோ அஹெட்... எத்தனை இடைஞ்சல்கள் வந்தாலும் உனக்கு உதவி செய்ய நான் காத்துக் கொண்டிருக்கிறேன்."

''ஏதேது... அறுபது வயதை எட்டப் போகிற ஒரு மனி வின் எதிரில் என்ன பேசுகிறோம் என்று புரியாமல் பேசி கொண்டே போகிறீர்கள்.''

''தவறாக என்னப்பா பேசி விட்டோம் நாங்கள். கா லித்துத் திருமணம் செய்து கொள்வது தவறா...?''

''அந்த அதிர்ஷ்டக்காரப் பையன் யாரு ராதிகா...?''

''அவர் பெயர் பிரகாஷ். எங்கள் வீட்டின் அருகில் தான் அவருக்கும் வீடு. எம். காம் முடித்துவிட்டுச் சொந்த மாக பிஸினஸ் பண்ணிக் கொண்டிருக்கிறார்...''

''உங்க வீட்டுப் பக்கத்திலே என்றால் எனக்கும் அவனைத் தெரியும் என்று நினைக்கிறேன்... குணசேகரனோட கடைசிப் பையன் பிரகாஷையா சொல்கிறாய்...''

''எக்ஸாக்ட்லி...''

பாஸ்கர் சிறிது நேரம் மௌனம் சாதித்தார். பின் சொன்னார். ''ராதிகா, உனக்கு கெட்டதாக எதையும் சொல்ல மாட்டேன் என்று நீ நினைத்தால் அவனை மறந்து விடு என்று தான் நான் சொல்ல முடியும். அவன் நல்ல பையன் இல்லை. எனக்கு அவனைப் பற்றி நன்றாகத் தெரியும். இனிமேல் கூடிய மட்டும் அவனை விட்டு விலகி நில்...''

''என்னால் அவரை மறக்கவே முடியாது அங்கிள். எனக்கு அவரை ஒரு வருடமாகத் தெரியும். ஐ லவ் ஸோ மச். நாங் கள் இரண்டு பேரும் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறோம். பிரகாஷ் முன்பு எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம். இப்போது நடந்து போன விஷயங்களுக்கு அவர் வருத்தப் படுவது எனக்குத்தான் தெரியும்.''

''நீ சிறிய பெண் ராதிகா. நான் எதைச் சொன்னாலும் உனக்குப் புரிந்து கொள்கிற பக்குவம் கிடையாது. அனுபவ மும் போதாது. அவனைப் பற்றி உனக்கு எதுவும் தெரியாது. சிறிய குழந்தையிலிருந்து எனக்கு அவனைத் தெரியும். நான் எதற்கு அவனைப் பற்றித் தவறாகச் சொல்லப் போகிறேன். உன் செய்கைக்காக நீயே ஒரு நாள் வருத்தப்படப் போகிறாய் பார்.''



''நிச்சயமாக எல்லோரும் பொறாமைப்படக் கூடிய ஒரு வாழ்க்கையை நான் வாழத்தான் போகிறேன். நீங்கள் பார்க் கத்தான் போகிறீர்கள்.''

''நீ சந்தோஷமாக எல்லோரும் பொறாமைப்படும் படியாக வாழ வேண்டும் என்பதனால்தான் சொல்கிறேன். நீ என் பெண்ணாக இருந்தாலும் இதைத்தான் சொல்லியிருப்பேன்.''

''ஐ நோ அபௌட் ஹிம். அவரைப் பற்றி நீங்கள் இனி மேல் எதுவும் பேச வேண்டாம்!'' என்று கோபத்துடன் எழுந்து காட்டேஜை நோக்கி நடந்தாள் ராதிகா. ஹரிணி அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பாஸ்கரன் ஹரிணியிடம் சொன்னார். ''நீ ராதிகாவின் உண்மையான சிநேகிதி என்றால் இந்த நட்பை நீ முடிந்த வரை வளர விடாமல் தடுக்க வேண்டும் ஹரிணி.''

''ராதிகா யார் சொன்னாலும் கேட்க மாட்டாள். ரொம்ப பிடிவாதம் அவளுக்கு. இத்தனை வருஷமாகப் பழகுகிற என்னி டமிருந்தே அவள் மறைத்திருக்கிறாள் என்றால் நான் இதை வரவேற்காமல் இருந்து விடுவேனோ என்கிற பயம்தானே. அவனை யாராலும் மாற்ற முடியாது. அவள் விருப்பத் திற்கு எதிராக நான் ஏதாவது பேசினால் இது என் சொந்த விஷயம் ஹரிணி. நீ இதில் தலையிட வேண்டாம் என்று சொன்னாலும் சொல்லி விடுவாள்.''

''அவன் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். நாம் கெட்டது எதையும் செய்யவில்லையே. அவனைக் காப்பாற்ற வந்து ஒன்றுதான் நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். அவன் என்ன சொற்களை உபயோகப்படுத்திப் பேசினாலும் அதற்கு மதிப்புத் தரக்கூடாது. என்றைக்காவது ஒரு நாள் நாம் எவ்வளவு நல்ல விஷயத்தை எடுத்துச் சொல்லியிருக்கி றோம் என்பதை அவன் புரிந்து கொள்வான் இல்லையா...''

''நாம் கிளம்பலாமே. ராதிகா மட்டும் தனியாகப் போயி ருக்கிறாள். மணி பன்னிரண்டாகிவிட்டது.'' என்றான் கிரி தரன். எழுந்து சாப்பாட்டுத் தூக்குகளையும் பெட்ஷீட்டையும்

உதறி எடுத்துக் கொண்டான். தண்ணீர் ஜக்கையும் மற்ற சாமான்களையும் ஹரிணி மனமில்லாமல் எடுத்துக் கொண்டே நடந்தாள்.

ஹரிணிக்கு இந்த இடத்திலேயே இருக்க வேண்டும் போலிருக்கிறது. ஆனால் அந்த இடம் ரொம்பவும் அடங்கி சந்தடி எதுவும் இல்லாமல் போய் விட்டதே ...அடிக்கடி இனி மேல் வரலாம். இந்த இடம் என்ன மெட்ராஸிலிருந்து அதிக தூரத்திலா இருக்கிறது என்று சொல்லிக் கொண்டே அவர்களுடன் நடந்தார் பாஸ்கரன்.

# 7

கோல்டன் பீச்சிலிருந்து வந்ததிலிருந்தே ராதிகா ஹரிணியிடம் அதிகம் பேசுவதைக் குறைத்துக் கொண்டாள். ஏதாவது கேட்டால் ஆமாம் இல்லை என்கிற ஒற்றைப் பதிலாகவே வந்தது. கல்லூரிக்குப் போகும்போது ஒன்றும் பேசாமல் இருவரும் ஒன்றாகப் போவது கஷ்டமாகக்கூட இருந்தது.

சில நாட்களில் ஸ்பெஷல் கிளாஸ் இருக்கிறது என்று அம்மாவிடம் சொல்லிவிட்டு ராதிகா ஹரிணியைப் பார்க்க வந்தாள்.

''அம்மாவிடம் ஸ்பெஷல் கிளாஸ் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். அம்மா உன்னைக் கேட்டாலும் என்னைக் காட்டித் தராமல் எனக்குச் சாதகமான ஒரு பதிலைச் சொல்லு.''

''ராதிகா, ஒரு நிமிடம் நான் சொல்வதை நீ கேள். இந்த மாதிரி பிரகாஷுடன் நீ சுற்றாதே. உன் பெயர் கெட்டுப் போகும். உனக்கு அவனை விட்டு இருக்க முடியாது என்று தோன்றினால் முதலில் கல்யாணம் பண்ணிக் கொள்.''

ராதிகா ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தாள்.



''நான் வேறு என்ன சொல்ல முடியும். அத்தனை பெரிய மனுஷன் சொல்லியே உனக்கு ஏறலை. நான் சொல்லியா எடுத்துக் கொள்ளப் போகிறாய்...?''

''என்னால் அவரை விட்டு இருக்கவே முடியாது ஹரிணி. அவர் சொல்லட்டும். அதற்கு நான் முக்கியத்துவம் தர வேண்டும் என்று தோணலை. நீ அவரை ஒரு முறை வந்து பார். நான் தகுந்த மனுஷனைத் தேர்ந்தெடுத்திருக்கிறேனா என்பது புரியும்.''

''நான் புரிஞ்சுண்டு என்ன பண்ணப் போறேன். டிசைட் பண்ண வேண்டியது நீ.''

''நான் அவரைத் தவிர யாரையும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன்.''

''அப்பா அம்மாகிட்டே சொல்லிட்டு செய்துகொள்ளேன். எதற்காக அவனோடு ஊரைச் சுற்றிப் பெயரைக் கெடுத்துக் கொள்கிறாய்?''

''நீதான் அம்மாவிடம் சொல்லேன்.''

''இந்த விஷயத்தைப் பொறுத்தவரை நான் மௌனமாக இருக்கத்தான் விரும்புகிறேன்.''

''சரி. இன்று மாலை காலேஜிலிருந்து வந்ததும் நானே சொல்லிக் கொள்கிறேன்''.

அவள் அம்மாவிடம் தெரிவிக்கிற நாளில் அந்த வீட்டில் புயல் உருவாகும் என்று நினைத்துக் கொண்டாள் ஹரிணி.

அன்று சாயந்திரம் ஹரிணி வீட்டிற்கு வந்தபோது ராதிகா இன்னும் வந்திருக்கவில்லை. அவள் உள்ளே போய்ப் புத்தகங்களை வைத்துவிட்டு வந்ததும் ராதிகாவின் அம்மா காஃபிக் கோப்பையைத் தந்து, ''இன்னும் ஏன் ராதிகா வரலை?'' என்று கேட்டாள். 'எனக்குத் தெரியாது' என்று பதிலளித்தாள் ஹரிணி.

''இரண்டு பேரும் ஒரே காலேஜிலேதானே படிக்கறீங்க. தெரியாதுன்னு பதில் சொல்லறீயே...''

"ஒரே காலேஜாக இருந்தாலும் என்னோட டிபார்ட்மெண்ட் ஒரு பக்கம். அவளோட டிபார்ட்மெண்ட் ஒரு பக்கம், நான் காலேஜில் அவளைப் பார்ப்பதே இல்லை."

"தினமும் அவள் நேரம் கழித்துத்தான் வருகிறாள். ஆறு மணிக்கும் ஏழு மணிக்கும் காலேஜில் என்ன வேலை? அவ்வளவு நேரமா ஸ்பெஷல் கிளாஸ் இருக்கும். கேட்டால் ஒரு நாளைக்கு ஸ்போர்ட்ஸ் என்கிறாள். ஒரு நாளைக்கு பார்ட்டி என்கிறாள். அவளோட போக்கே வர வர வித்தியாசமாகத்தான் மாறிக் கொண்டு வருகிறது. ஏதாவது பழக்கத்துல கொண்டுபோய் விட்டுடப் போறதேன்னு பயமாக இருக்கு ஹரிணி".

பேசிக் கொண்டிருக்கும் போதே ராதிகா ஸ்கூட்டரில் வந்து இறங்கினதையும் அவனை வீட்டுக்கு வரச் சொல்லிக் கூப்பிட்டுக் கொண்டிருந்ததையும் ஜன்னல் அருகிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள் ராதிகாவின் அம்மா. ராதிகா உள்ளே வந்ததும், "யாரடி அவன்?" என்று கேட்டாள்.

"என் பிரெண்ட்..."

"எத்தனை நாளா அவன் உனக்கு பிரெண்ட்...?" அவள் மௌனமாக ஹரிணியைப் பார்க்க,

"உன்னைத்தான் கேக்கறேன். நீ ஏன் அவளை பார்க்கறே?"

"ஒரு வருஷமா பிரெண்ட்..."

"தினமும் அவனோடதான் ஊரைச் சுத்திட்டு பார்ட்டி, ஸ்போர்ட்ஸ், ஸ்பெஷல் கிளாஸ்னு பொய் சொல்றியா."

"அம்...மா"

"என்னடி அம்மா...? ஒரு வருஷமா அவனோட பழகிட்டு இன்னைக்கு வீட்டில் இருப்பவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக ஸ்கூட்டர்லே வந்து இறங்கறயா...? வெக்கமா இல்லை உனக்கு? ஏம்மா ஹரிணி, இத்தனை நாள் அவளோட பழகறியே, எனக்குச் சொல்லக்கூடாதா..."

"அம்மா..." அவளை ஒன்றும் கேட்காதே. அவளுக்கு எதுவும் தெரியாது. நீ கேட்பதானால் என்னிடமே கேட்கலாம்."



"ராதிகா சொல்கிற மாதிரி இத்தனை நாள் வரை எனக்கு எதுவுமே தெரியாதும்மா. சத்தியமாகத் தெரியாது. போன வாரம் கிரிதரன், அவங்க அப்பாவோட கோல்டன் பீச்சுக்குப் போனோமே, அன்னைக்குக் கிரிதரன் சொல்லித்தான் எனக்குத் தெரியும். அவங்க அப்பாகூட இவளுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். இவள் கேட்பதாக இல்லை. இவளுக்கு இந்த விஷயத்தில் எந்த உதவியும் செய்ததில்லை. நீங்கள் என்னை நம்ப வேண்டும்."

ஹரிணி சொல்வதையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த பின், ராதிகாவிடம், "யார் அவன்...? எங்கிருக்கிறான்...?" என்று கேட்டாள்.

"அவர் பேர் பிரகாஷ்."

"அவர் என்னடி அவர். இந்த மாதிரி வேலை பண்ணறவனுக்கு மதிப்பு வேறயா?"

"இதுக்கு நீ அவரைக் குற்றம் சொல்ல வேண்டாம். எனக்கு அவரைப் பிடித்திருக்கிறது. கல்யாணம் பண்ணிக் கொண்டால் அவரைத்தான் பண்ணிக் கொள்வேன். இல்லாவிட்டால் சாகிறவரை தனியாகத்தான் இருப்பேன்." தீர்மானத்துடன் சொன்னாள் அவள்.

"என்ன பண்ணறான் அவன்?"

"பிஸினஸ் பண்ணுகிறார்."

"என்ன பிஸினஸ்...?"

"ஸ்வீட் ஸ்டால் வைத்திருக்கிறார்."

அம்மா தலையில் அடித்துக் கொண்டாள்.

"படிச்சு ஆபீஸ்ல வேலை பண்ணுகிற ஒரு மனுஷனை உனக்குக் கிடைக்கலையா...?"

"ஏன், அந்த வேலைக்கு என்ன குறைச்சல்...? மாதம் இரண்டாயிரத்திற்கு மேலான ஒரு தொகையைச் சம்பாதிக்கிறார் அவர். பக்கத்து ரோடுதான். ஆறாம் நம்பர் வீட்டு மாடியிலே குடியிருக்கிறார்..."

"ஒரே பொண்ணுன்னு உன்னை ஆசையாக வளர்த்தேனடி நான். ஏன்டி இந்த மாதிரி ஒரு காரியத்தைப் பண்ணிட்டு வந்து நிக்கறே. நான் சொல்லறதைக் கேளு. நல்லா படிச்ச பையனா பார்த்து உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன் நான்..."

"அவரும் எம்.காம். படிச்சிருக்கார்..."

"எம்.காம். படிச்சுட்டு ஏன்டி அவன் ஸ்வீட் ஸ்டால் வெக்கணும். அவனைப் பார்த்தா படிச்சவன் மாதிரிகூட இல்லை..."

"படிச்சவன்னு முகத்துலயா எழுதி ஒட்ட வெச்சிருக்கும், உனக்கு இஷ்டம்னால் எனக்கு அவரைக் கல்யாணம் பண்ணித் தா. இல்லையானால் கல்யாணத்தைப் பத்தின பேச்சே எடுக்காதே..."

"அப்பா அம்மா இருக்காங்களா அந்தப் பையனுக்கு?"

"அம்மா இருக்காங்க. அப்பாவை அவர் பார்த்ததே இல்லையாம். அவரோட அப்பா செய்து கொண்டிருந்த பிஸினஸ் தான் அது. அவர் படித்து முடிக்கிறவரை அவரோட பெரியப்பாதான் கவனித்துக் கொண்டிருந்தார். படித்து முடித்ததும் அவரே பார்த்துக் கொள்ள ஆரம்பித்து விட்டார்."

அவள் பேசுகிற தோரணையும் அவள் பேசும் விஷயங்களும் அம்மாவிற்குக் கோபத்தை ஏற்படுத்த முகம் சிவந்து மேலே என்ன செய்வது என்று தெரியாமல், "அப்பா வரட்டும். அவர் கிட்டே பேசிக்கோ நீ..." என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு அவள் நகர்ந்ததும், "அம்மாவுக்கு இன்று எப்படியாவது தெரிவிக்க வேண்டும் என்று நினைத்தேன். தெரிவித்தும் விட்டேன். அம்மா எங்கேயாவது வெளியில் போயிருக்கப் போகிறாளோ என்று நினைத்துக் கொண்டே வந்தேன்," என்று சொல்லிக் கொண்டே தன் அறைக்குச் சென்றாள் ராதிகா.



# 8

பெண் பார்ப்பதற்குப் பிரகாஷின் அம்மாவும், சித்தியும் வந்தபோது ராதிகாவும் ஹரிணியும் கல்லூரிக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் ஹரிணியை, அவர்களை உள்ளே அழைத்து உட்காரச் சொல் என்று அனுப்பிவிட்டு அம்மாவைத் தேடிக்கொண்டு சமையலறைக்குள் வந்தாள் ராதிகா. "அம்மா, அவங்க எல்லோரும் வந்திருக்காங்க. நீ போம்மா."

"யாருடி வந்திருக்காங்க?"

"பிரகாஷோட அம்மாவும் கூட இன்னொருத்தங்களும் வந்திருக்காங்க."

"இப்பகூட சொல்றேன் ராதி. அந்தப் பையன் வேணும். வேற நல்ல பையனா பார்த்துத் தரேன்."

"நான் சொன்னால் சொன்னதுதாம்மா..."

"இந்தப் பிடிவாதம் எல்லாம் நல்லதுக்கு இல்லை!" என்று சொல்லிக் கொண்டே வாசலுக்கு வந்தாள்.

இரண்டு நிமிடப் பேச்சில் அம்மாவுக்கு அவர்களைப்பற்றிக் கொஞ்சம் புரிந்தது. எடுத்த பேச்சுக்கெல்லாம் பணமும், ரூபாய் நோட்டுக்களும்தான் அவர்களிடமிருந்து வார்த்தைகளாக வந்தன. பார்த்தால் பெரிய பணக்காரர்களாகவும் தெரியவில்லை. முதல் பார்வையிலேயே அம்மாவிற்கு அவர்களைப் பிடிக்காமல் போய்விட்டது. பேசிக் கொண்டிருக்கும் போதே ஹரிணி காபி கொண்டுவந்து தந்தாள்.

அதைக் குடித்ததும் பிரகாஷின் அம்மா, "பொண்ணைக் கூட்டிண்டு வாங்கோ. நான் பார்த்தாச்சு. என் தங்கை பார்க்கணும்," என்றாள்.

ராதிகா வந்து நமஸ்காரம் பண்ணினாள். பிரகாஷின் சித்தி இவளைக் கூப்பிட்டுப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள். ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு பழம் ஒரு ரவிக்கைத் துண்டு எல்லாவற்றையும் வைத்துக் கொடுத்தாள்.

''பிரகாஷ் மனசு கோணமல் நீ நடந்துக்கணும். அவன் தான் எங்களுக்கு முக்கியம். அதனால்தான் சம்பிரதாயம் எதுவும் பார்க்காமல் நாங்களே வந்தோம். அவன் சந்தோஷ மாக இருந்தால் அதுவே எங்களுக்குப் போதும்."

''பொண்ணு பாக்க சம்பிரதாயத்துக்காக நாங்க வந் தோமே தவிர, எல்லாவற்றையும் இவளும் என் பையனுமே சேர்ந்து முடிவெடுத்தபின் சொல்வதற்கு என்ன இருக்கிறது? இந்த காலத்துல யார் அம்மா அப்பா பேச்சைக் கேட்கிறார்கள்! வெளியிலிருந்து எத்தனையோ இடம் வந்தது. வைர நெக்ல ஸும் பங்களாவும் தந்து கல்யாணம் பண்ணித் தரக் காத்துக் கொண்டிருந்தார்கள். என் பையன்தான் எதையுமே வேண் டாம்னு சொல்லிட்டானே...!"

''எங்களுக்கு அவ்வளவு செய்து தருகிற சக்தி இல் லேம்மா...?''

''அதெல்லாம் நான் எதிர் பார்க்கலே. பத்தாயிரம் ரூபாய் வரதட்சிணையாகத் தந்தால் போதும். ஐம்பது சவரன் நகை போடணும். வெள்ளிப் பாத்திரம் அவசியம். மற்ற தெல்லாம் உங்க இஷ்டம். உங்களுக்கு ஒரே பெண்தானே? அவளுக்குச் செய்யாமல் வேறு யாருக்கு நீங்கள் செய்யப் போகிறீர்கள்...?"

''எங்களுடைய சக்தியை மீறினதா இருக்கேம்மா நீங்க கேட்கிறது. ஒரே பெண்தான். அவள் ஆசைப்பட்டு விட் டாளே என்கிறதனால்தான் இதைப்பற்றிக் கொஞ்சம் நினைக்க வேண்டியதாக இருக்கிறது."

''அதுதான் முதலிலேயே சொல்லி விட்டேனே. இந்தக் காலத்தில் பெண் பார்க்க அப்பா அம்மாவை எங்கே அனு மதிக்கிறார்கள்?"

''வரதட்சிணையும் பத்தாயிரம் கேட்கிறீர்கள். ஐம்பது சவரன் நகையும் போட நாங்கள் எங்கே போவோம். எங்களு டையது நடுத்தரக் குடும்பம்தான்."

''விரலுக்குத் தகுந்த வீக்கம் இருக்கணும் என்று முன்ன லேயே தெரிஞ்சிருக்கணும்."



இதை கேட்ட ராதிகாவின் அம்மா மனதுக்குள் வெறுத் துக் கொண்டாள். ''சீ, இது என்ன பேரம். இப்படியாவது ஒரு திருமணம் அவளுக்கு அவசியம்தானா...இவர்கள் மனிதர் கள்தானா அல்லது பணத் திமிர் பிடித்த வெறியர்களா...! இந்த குடும்பத்தில் போனால் மட்டும் அவள் சந்தோஷமாகவா இருக்கப் போகிறாள்? எப்படி அந்தப் பையன் மீது மனம் போயிற்று அவளுக்கு? இவள் வளர்த்த பையன்தானே. அவன் மட்டும் எப்படி இருக்கப் போகிறான்?''

அவர்கள் போகிறவரை பல்லைக் கடித்துக் கொண்டிருக்க வேண்டியதாக இருந்தது.

''ராதிகாவோட அப்பாகிட்டே கேட்டுச் சொல்லி அனுப் புங்க. அப்புறம் ஆக வேண்டியதைப் பார்ப்போம்."

அவர்கள் கிளம்பிப் போனதும், ''இப்படி ஒரு கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டியது அவசியம்தானா ராதிகா...? உனக்கு வெட்கமாக இல்லே? ஒரு வருஷமா பழகறேன்னு சொல்றியே, இன்னுமா உன்னால் அவர்களைப் புரிந்து கொள்ள முடியலே?

வைர நெக்லஸும் பங்களாவுமா வேண்டும்...! அவங்க ளுக்கு ஆசை இல்லேடி... பேராசைதான். அங்கே போனால் பத்து நாள் நிம்மதியா இருக்க மாட்டே நீ. சந்தோஷத்தை வித்துக் காசாக்கிப்பான் அவன். நான் சொல்றதைக் கேளு. அந்தப் பையன் வேண்டாம். உனக்கு அவனைக் கல்யாணம் பண்ணித்தர எனக்குச் சம்மதமில்லே. நீ கல்யாணம் பண்ணிக் காமல்கூட இரு. மேலே படி. வேலைக்குப் போ. சம்பாதிச்சுத் தனியா இருந்துக்கோ. அதுவே எத்தனையோ நிம்மதியான விஷயம். அந்த இடம் வேண்டாம்னு சொல்லு. நான் வேற நல்ல மனுஷனா பார்த்துக் கல்யாணம் பண்ணித் தரேன். உன்னை ஜென்மம் முழுசும் கலங்காமல்வெச்சுக்கறவனா பார்த்து பண்ணித் தரேன் ராதி. சொல்றதைக் கேளுடி. உனக்கு உலக அனுபவம் போறாது. மனுஷங்களை எடை போடத் தெரியலே. முதல்லேயே நீ அவனைப் பத்தி தெரிஞ்சிண்டு இருந்திருக்க வேண்டாம்...!''என்றாள் அம்மா.

"அம்மா...அவங்க இவ்வளவு கேப்பாங்கன்னு எனக்குத் தெரியாது. நான் இதை எதிர் பார்க்கவும் இல்லே. நான் பிரகாஷ்கிட்டே சொல்லறேன். அவர் நிச்சயமா இதை ஒத்துக்க மாட்டார். இப்படியெல்லாம் இந்தம்மா வந்து கேட்பாங்கன்னு அவர் நினைச்சுகூடப் பார்த்திருக்க மாட்டார். நான் அவரிடம் சொல்லறேன். வரதட்சிணை தர முடியாதுன்னு சொல்றேன். அப்படி முடியாதென்று சொல்லி விட்டால் கொஞ்சம் குறைச்சுக்கச் சொல்லறேன். நான் வேறு என்ன பண்ண முடியும்...!

பிரகாஷைத் தவிர எனக்கு வேறு யாரும் வேணாம். உன்னால் முடியலேன்னா சொல்லிடு. அதுக்காக என்னை வேறு யாரையாவது பண்ணிக்கச் சொல்லிக் கேக்காதே!" என்று புத்தகங்களையும் டிபன் பாக்ஸையும் எடுத்துக் கொண்டு கிளம்பினாள் ராதிகா.

இதையெல்லாம் மௌனமாகக் கவனித்து கொண்டிருந்த ஹரிணியை அம்மா அழைத்துப் போகும்போது, "அவளிடம் இந்த இடம் வேண்டாம்னு புத்தி சொல்லும்மா" என்று அவள் காதுகளில் கிசுகிசுத்தாள்.

ராதிகாவின் அப்பா பிரகாஷின் வீட்டில் கேட்ட எல்லாவற்றிற்கும் சம்மதித்தார். இருப்பது ஒரே பெண் என்றும் அவள் விருப்பப்படிதான் அவளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றும் அதற்கு எத்தனை செலவானாலும் தான் கவலைப்படவில்லை என்றும் வீட்டிற்கு அருகிலேயே உள்ள கல்யாணச் சத்திரத்தை ஏற்பாடு பண்ணினார். பெரிய சத்திரம்தான். ஆனாலும் போதவில்லை.

பிரகாஷ் வீட்டினர் எதுவும் சொல்லக் கூடாதே என்று பணத்தைத் தாராளமாக இறைத்தார். புடவைகள் எல்லாம் ராதிகாவின் விருப்பப்படி அவள் கேட்ட அனைத்தையும் வாங்கித் தந்தார். வாங்கிக் கொண்டு வந்த பின் அவள் அம்மாவிடம் காட்டுவாள். அம்மா, வந்து பாரும்மா. நன்றாக இருக்கிறதா, என்று கூப்பிடுவாள். நகைகளும் பட்டுப் புடவைகளும் வாங்கத் தவிர வேறு எதற்கும் அம்மா போகவில்லை.



அவளுக்கு அந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லாததை வெளிப்படையாகவே காண்பிக்க ஆரம்பித்தாள். ராதிகா நன்றாக இருக்கிறதா என்று எதையாவது கொண்டுவந்து காண்பித்தால் நன்றாக இருக்கிறது என்று தலையாட்டுவாள். ராதிகா விடமாட்டாள்.

"என்னம்மா தலையாட்டல். பிடித்திருக்கிறதா என்று சொல்லேன். இல்லையென்றால் மாற்றி விடலாம்."

"பிடித்திருக்கிறது. மாற்ற வேண்டாம்!" என்று அம்மாவிடமிருந்து ஒற்றைப் பதிலாகத்தான் வரும்.

"மனசுப் பூர்வமாகச் சொல்ல மாட்டேன் என்கிறாயே..."

"எல்லாம் பிடிச்சிருக்கு ராதிகா. மாப்பிள்ளையைத்தான் பிடிக்கலே."

"அதை மட்டும் மாத்தவே முடியாதும்மா..."

கல்யாணத்திற்குக் கிரிதரன் வந்திருந்தான். ராதிகா ஹரிணியுடன் போய் அவனை அழைத்துவிட்டு வந்திருந்தாள். அவனுடைய அம்மாவையும் அப்பாவையும் கட்டாயம் வரவேண்டுமென்று வற்புறுத்தினாள். உன் கல்யாணத்திற்கு வராமல் இருப்போமா என்று சிரித்தார்கள் அவர்கள்.

"நினைச்சதை நடத்திக் கொண்டுவிட்டாய் இல்லையா...?" என்று பாஸ்கரன் கேட்டார்.

"காதல் என்பதே திருமணத்தில் முடிய வேண்டியது தானே..."

"உன் அம்மா இதற்கு முழுச் சம்மதம் தந்துவிட்டார்களா...?"

"இன்றைக்கு இந்தத் திருமணம் நின்று போனால்கூட அம்மாவிற்குச் சந்தோஷம்தான். பிரகாஷைக் கொஞ்சம்கூட அம்மாவிற்குப் பிடிக்கவில்லை. அம்மாவா பண்ணிக் கொள்ளப் போகிறார்கள்? அப்பா ஒன்றும் சொல்லவில்லை. ஒரே பெண் என்று என் விருப்பப்படியே விட்டுவிட்டார். நீங்கள் கல்யாணத்திற்கு அவசியம் வர வேண்டும்!" என்று மறுபடியும் அழைத்துவிட்டு வந்திருந்தாள்.

கல்யாணத்திற்குக் கிரிதரன், அவனுடைய அம்மா அப்பா, அவர்களைத் தவிரக் கிரிதரனின் நண்பர் ஒருவரும் வந்திருந்தார்கள். ராதிகா பிரகாஷுக்கு அறிமுகப்படுத்தினான். பாஸ்கரனை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமே இருக்கவில்லை.

ஹரிணி அவர்களைச் சாப்பிட அழைத்துக் கொண்டு போனாள். கிரிதரன் அவளை அவனுடைய நண்பன் தீரேந்தருக்கு அறிமுகப்படுத்தி வைத்தான். பின் ஹரிணியைத் தனியாக அழைத்துச் சென்றான்.

''நான் இன்றைக்குத் தீரேந்தரை அழைத்துக் கொண்டு வந்ததன் நோக்கமே உங்கள் இருவரையும் உங்கள் இருவருக்கும் அறிமுகப்படுத்தி வைக்கவேண்டும் என்றுதான். எனக்கு அவனை வெகு நாட்களாகத் தெரியும் ஹரிணி.

உனக்கு அவனை அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும் என்று வெகு நாட்களாக நினைத்துக் கொண்டிருந்தேன். அதற்கு இன்றைக்குத்தான் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் உனக்கு எதையும் அதிகமாகச் சொல்ல வேண்டாம். சுத்தி வளைத்துப் பேச வேண்டிய அவசியமும் இல்லை. நீ புத்திசாலிப் பெண்தான். கவிதை எழுதறவள். நான் எதற்காக அவனைப் பற்றி இத்தனை பேசுகிறேன் என்று இதற்குள்ளாகவே நீ புரிந்து கொண்டிருப்பாய். அவனுக்கு உன்னைப் பற்றி எல்லாம் தெரியும் ஹரிணி. அவனும் அம்மா அப்பா யாரும் இல்லாதவன்தான். உங்க இரண்டு பேருக்கும் இருக்கும் இந்த ஒற்றுமை ஒன்றே போதும். உனக்கும் வாழ்க்கையில் அன்புடன் பரிவுடன் இருக்க ஒரு துணை தேவை. அவனுக்கும் அதே மாதிரி ஒரு துணை அவசியம். அவன் கூட நீ சந்தோஷமாக இருப்பாய் என்று தோன்றிற்று. அவனும் உன்னால் சந்தோஷப்படுவான். உனக்கு அவனைப் பிடித்திருந்தால் வருகிற சனிக்கிழமை வீட்டிற்கு வா. அவனையும் வரச் சொல்கிறேன். முதலில் இருவரும் பேசி இருவரையும் புரிந்து கொள்ளுங்கள். இல்லையென்றால் நண்பர்களாக இருந்து விடுங்கள்...''



ஹரிணி மௌனமாக இருந்தாள். கிரிதரன் அவளையும் சாப்பிட அழைத்தான். அவள் அப்புறம் சாப்பிடுகிறேன் என்று சொல்லி மறுத்துவிட்டாள்.

கிளம்பும்போது கிரிதரன் ராதிகாவிடம் சொல்லிவிட்டு ஹரிணியிடம் வந்தான். ''நாங்கள் கிளம்புகிறோம்'', என்றான். தீரேந்தரும் 'வருகிறேன்' என்று புன்சிரிப்புடன் விடை பெற்றுக் கொண்டபோது மனசுக்குள் புதுசாக ஒரு சந்தோஷம் ஏற்பட்ட மாதிரி இருந்தது.

## 9

அந்த ஹோட்டலுக்கு ஹரிணி வருவது அதுதான் முதல் தடவை. இதற்கு முன் அப்பாவுடன் நிறைய ஹோட்டலுக்குப் போயிருக்கிறாள். அவைகள் எல்லாம் ஆடம்பரமில்லாதவை. சாப்பாட்டு மேஜைகளும் நாற்காலிகளும் மட்டும் இருந்த இடங்கள். ஆனால் இந்த ஹோட்டல் முழுவதுமே பளபளத்தது.

விதவிதமான விளக்குகள் மேலே தொங்கிக் கொண்டிருந்தன. சின்னதாக மேலை நாட்டுச் சங்கீதம் ஒலித்தது. அந்த விளக்குகள் மங்கலாக எரிந்த போதும் மேஜையின் மீது மெழுகுவர்த்திகள் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. சுவரில் தொங்கிய படங்கள் அந்த அறையை அழகு படுத்தியவனுடைய கலை உணர்வை வெளிப்படுத்தியது.

அன்று மாலையில் கிரிதரன் கல்லூரி வாசலில் தீரேந்தருடன் காத்திருந்து அவள் வெளியில் வந்ததும் அவளை அழைத்த போது முதலில் வர மறுத்தாள் அவள். அந்த மாதிரி ஹோட்டல்களுக்கு எல்லாம் தனியாகப் போய்ப் பழக்கமில்லை என்றாள். கிரிதரன் விடவில்லை.

''நீ நிச்சயம் வந்துதான் ஆகவேண்டும். நானும் மூன்று சனிக்கிழமைகளாகக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். இப்

படி மறுத்துக் கொண்டே வந்தால் என்ன அர்த்தம்? எப்போதுதான் இரண்டு பேரும் மனம் விட்டுப் பேசிக் கொள்ளப் போகிறீர்கள்? ம்...? இன்றைக்கு எப்படியும் உங்கள் இருவரையும் சந்திக்க வைக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு என் எல்லா வேலைகளையும் விட்டு விட்டு வந்திருக்கிறேன். ம்... வண்டியில் ஏறு!" என்று பின் பக்கக் கதவைத் திறந்து விட்டான். வேறு வழி இல்லாமல் ஏறி உட்கார்ந்தாள் ஹரிணி.

"எங்கே போகலாம்...?" என்று பின் பக்கம் திரும்பி ஹரிணியிடம் கேட்டான் கிரிதரன்.

"எங்கே வேண்டுமானாலும் போகலாம்," என்றாள் ஹரிணி.

"எனக்கு என்ன தெரியும், மறுபடியும் ஹோட்டலை விட்டால்...?"

"அதைத் தவிர சென்னையில் போவதற்கு எங்கே இடம் இருக்கிறது? என்னிடம் நிறையப் பணம் இருந்தால் காதலர்களுக்கென்று ஒரு தனியான இடத்தை அமைத்து விடுவேன்."

ஹரிணி புன்னகை செய்தாள்.

"இப்போது எதற்காகச் சிரிக்கிறீர்கள்? நான் நிஜமாகவே காதலர்களுக்கு என்றுதான் சொன்னேன். இதில் தம்மை நான் சம்பந்தப்படுத்தவில்லை."

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது அந்த ஓட்டலின் வாசலில் வண்டியை நிறுத்தினான். அவர்களை இறக்கிவிட்டதும் பின்னால் சென்று வண்டியை நிறுத்திக் கண்ணாடியைத் தூக்கிவிட்டுக் காரைப் பூட்டி விட்டு வந்தான்.

"என்ன இங்கேயே நிற்கிறீர்கள்? உள்ளே போவது தானே...?"

"உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் எனக்கு இந்த ஓட்டலின் உள்ளே போகக்கூட வழி தெரியாது!" என்றாள் ஹரிணி.



"தெரிந்து கொண்டால் போயிற்று. எல்லாமே தெரிந்து கொண்டா பிறந்து விடுகிறோம்...?" என்று சொல்லி உள்ளே போனபோதுதான் ஹரிணி ஒவ்வொன்றாகக் கவனித்துக் கொண்டே வந்தாள்.

அந்த ஹோட்டலைப் போல அங்கிருந்த மெனுகூடப் புதியதாக, புரியாததாக இருந்தது. இட்டிலியும் தோசையும் பூரியும் பொங்கலும்தான் அவளுக்குப் பழக்கம். அந்த மெனுவில் உள்ள அனைத்தும் அசைவ உணவா என்று கூடப் புரியவில்லை.

அவளின் தயக்கத்தைப் புரிந்து கொண்ட தீரேந்தர், "எல்லாமே வெஜிடேரியன் டிஷ்ஷஸ்தான். என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"இதில் எனக்கு எதுவுமே புரியவில்லை. இதில் எதையுமே நான் சாப்பிட்டது கிடையாது. அதனால் நீங்களே எனக்கும் சேர்த்துச் சொல்லிவிடுங்கள்," என்றாள்.

தீரேந்தர் எல்லோருக்கும் சேர்த்து ஆர்டர் பண்ணிய போது அந்த அறைக் கோடியில் அவனின் நண்பர்கள் உட்கார்ந்திருப்பது தெரிய, "ப்ளீஸ் எக்ஸ்க்யூஸ் மி, என் பிரெண்ட்ஸ் வந்திருக்காங்க. ரொம்ப நாளாகி விட்டது அவர்களைப் பார்த்து. நீங்கள் பேசிக் கொண்டிருங்கள். நான் பத்து நிமிடத்தில் வந்து விடுகிறேன்!" என்று எழுந்து கொண்டான்.

தீரேந்தர் போவதையே பார்த்துக் கொண்டிருந்த கிரிதரன் திரும்பி ஹரிணியைப் பார்த்தான்.

"நான் எத்தனையோ நாட்கள் உன்னைக் கூப்பிட்டும் நீ வராமல் போகவே உனக்கு இவனைப் பிடிக்கவில்லையோ என்கிற சந்தேகம் வந்து விட்டது ஹரிணி. அப்புறம்தான பத்து நிமிடம் பழகிவிட்டு ஒரு மனிதனைப் பற்றின தவறான அபிப்ராயம் எப்படி வரும் என்று தோன்றிற்று.

எனக்குத் தீரேந்தரை ரொம்ப நாட்களாகத் தெரியும். என்னோட ஒரு நல்ல பிரெண்ட் இவன். உன்னுடன் பழக ஆரம்பிச்சதிலிருந்தே உனக்கு இவனை அறிமுகப்படுத்த வேண்டும்

என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஏனோ இதுவ அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விட்டது. ராதி கல்யாணத்திற்குக் கிளம்புகிற அன்று அவன் வந்தான். அ னைக்கே உனக்கு அறிமுகப்படுத்தி வைக்கலாமே என்று அ னையும் அழைத்துக் கொண்டு வந்தேன்.

அதற்குப் பின்பும் நிறையத் தடவை உன்னை அழைத்து நீ வராமல் போகவே உனக்கு விருப்பம் இல்லையோ என் தோன்றிவிட்டது. பத்து நிமிஷப் பழக்கத்தில் ஒரு மனித பற்றித் தவறான அபிப்பிராயத்திற்கு வந்துவிடக் கூடா ஹரிணி...''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை...எனக்குத் தவறு அபிப்ராயம் எதுவும் கிடையாது. இந்த மாதிரி வந்து பே றதுக்கும் பழகறதுக்கும் கூச்சமாக இருந்தது. அதனால்தா வரலை. என்னால யாருடனும் சுலபமாகப் பழகிட முடிய அதனால்தான் மௌனமாக இருந்து விட்டேன்.''

''நீ அவனை மிஸ் பண்ணிடப் போறியோன்னு தோன் விட்டது ஹரிணி. ஹி நோஸ் அபௌட் யு. அவனுக் உன்னைப் பற்றி எல்லாம் தெரியும். அவனை நான் பார்க் போதெல்லாம் கூடவே உன்னோட நினைப்பும் வரும். நீ இரண்டு பேரும் ஒரு அழகான குடும்பத்தை அமைப்பீ என்றும் தோன்றும். உன்னால் அவனையும் அவனால் உன் யும் சந்தோஷப்படுத்த முடியும் என்றும் தோன்றிற்று. இ சந்தோஷத்தை விட வேற என்ன வேணும்?'' என்று அ முகத்தைப் பார்த்தான்.

அவன் பேசாமல் இருக்கவே மீண்டும் தானே பேச ஆர பித்தான்.

''எனக்குத் தோன்றின எல்லாவற்றையும் நான் அ னிடம் சொன்னேன். உன்னை மாதிரியே அவனும் மௌன இருந்தான். பின் நான் கேட்பது எல்லாம் உண்மைதா என்கிற சந்தேகம் வருகிறது என்றான். அப்புறம் அவ நிறையப் பேசினான்.



பிறந்ததிலிருந்தே பெற்றோர்களை அவன் பார்த்ததில்லை யாம். அவன் தமிழ் பேசறவன் இல்லை. கர்நாடகாவைச் சேர்ந்தவனும். அதைத் தவிர வேறு எதுவும் அவனுக்குத் தெரியாது. அவனை வளர்த்தது ஒரு முஸ்லீம். அதனால் ஹிந்தியும் உருதுவும் நன்றாகப் பேச வருமாம். இதை யெல் லாம் சொல்லிவிட்டு ஹரிணியை முதலில் கேளுங்க. அவங்க ளும் இதற்குச் சம்மதிக்கணும். அதுதான் ரொம்ப முக்கியம். அவங்களுக்கு நான் யார் என்று தெரியாது. எடுப்பார் கைப் பிள்ளையாக வளர்ந்து விட்டேன்.

எனக்குன்னு இதுவரை நான் சம்பாதித்துக் கொண்டது கிடையாது. பணம் என்கிற சொத்து என்கிட்டே கிடையாது. எனக்குப் புத்தகங்கள்தான் சொத்து. அதைத்தான் நான் அதிக மாகச் சேர்த்து வைக்கிறேன். எனக்கு ஆயிரத்து அறுநூறு ரூபாய் சம்பளம். இதையும் அவர்களிடம் சொல்லி விடு. இதற்கெல்லாம் அவர்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் எனக்குத் தெரியப்படுத்து. லெட் அஸ் தென் அண்டர்ஸ்டாண்ட் ஈச் அதர் என்று சொன்னான். நான் நினைச்சுண்டு இருந்ததை யெல்லாம் சொல்லி விட்டேன். நீ உனக்குத் தோணறதைச் சொல்லலாம். எவ்ரி திங் ஈஸ் இன் யுவர் ஹேண்ட்ஸ். அவனு டன் பழகிப் பாரு. பிடிச்சிருந்தாலும் சரி, பிடிக்காவிட்டா லும் சரி — நண்பர்களாக இருந்து விடலாம். நீ எப்போ வேணும்னாலும் உன் முடிவைச் சொல்லலாம். ஒரு மாதத் திலும் சொல்லலாம். அதற்கு மேலே ஆனாலும் சரி. உனக்காக அவன் எத்தனை நாள் வேண்டுமானாலும் காத்திருக்கத் தயாராக இருக்கிறான் ஹரிணி.

அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டே வந்த ஹரிணிக்கு மனசு நெகிழ்ந்து போயிற்று.

''இதற்கெல்லாம் எனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று எனக்கே புரியவில்லை. உங்களின் மூலம் மட்டுமே என்னைப் பற்றித் தெரிந்து கொண்டு பின் என்னைப் பிடித்திருக்கிறது என்று எனக்காக ஒரு வருடம் காத்திருக்கத் தயாராக இருப் பதற்கு நிஜமாகவே எனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று

புரியவில்லை. உங்களைப் போன்ற ஒரு நண்பரும் அவரைப் போன்ற ஒரு மனிதரும் கிடைக்க உண்மையிலேயே நான் அதிர்ஷ்டம் பண்ணினவள்தான்.''

ஹரிணி பேசிக் கொண்டிருந்தபோது தீரேந்தர் அவளைப் பார்த்துப் புன்னகை செய்து கொண்டே வந்தான்.

இரண்டு பேருக்கும் நடுவில் இருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

''சாரி. காலேஜில் நாங்கள் ஒன்றாகப் படித்தோம். அப்புறம் வெகு நாட்களுக்குப் பின் இப்போதுதான் பார்க்கிறோம். மற்ற நண்பர்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததில நேரமாகி விட்டது,'' என்று தாமதமாக வந்ததற்கு மன்னிப்புக் எழுந்து கேட்டுக் கொண்டான்.

அதற்குள் ஆர்டர் பண்ணினவைகளை பேரர் கொண்டு வர—கிரிதரன் பிரெஷ் லைமைக் குடித்துவிட்டு, ''இரண்டு பேரும் பேசிக் கொண்டிருங்கள். எனக்கு ஐந்தே கால் மணிக்கு ஒருவரைப் பார்க்க வேண்டும். அவரிடம் எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. திரும்பி வர நேரமாகிவிடும். ஹரிணியை வீட்டில் ட்ராப் பண்ணிவிட்டுப் போ தீரேந்தர்!'' என்று எழுந்து கொண்டான்.

கிரிதரன் போகிறவரை பார்த்துக் கொண்டிருந்த ஹரிணி தீரேந்தர் பக்கம் திரும்பினாள். அவனும் இலேசான புன்னகையோடு அவளைப் பார்த்தான். பின் மெதுவான குரலில் சொன்னாள்.

''ஒரு மாசத்துக்கு முன்பு ஒரு நாள் நான் கிரிதரனைப் பார்க்க வந்தபோது உங்களைப் பற்றிச் சொன்னான். உங்களிடம் என்ன சொன்னானோ அவை எல்லாவற்றையும் என்னிடமும் சொல்லியிருக்கிறான் என்று நினைக்கிறேன். நீ ஏன் அவளைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்றான். சட்டென்று என்னிடம் அப்படிக் கேட்டதும் எனக்குப் பதில் சொல்லத் தெரியலை. எனக்கு முதலில் உங்களைப் பார்க்க வேண்டும் என்று தோன்றிற்று. இரண்டு மூன்று முறை



உங்களைக் கிரிதரன் அழைத்தும் நீங்கள் வராததிலிருந்து உங்களுக்கு இதில் விருப்பமில்லையோ என்று நினைத்தேன்.''

''எனக்குக் கூச்சமாக இருந்தது. இன்றைக்குக் கிரிதரன் கல்லூரிக்கு வந்து அழைக்காமல் இருந்தால் வந்திருக்கவும் மாட்டேன். நீங்க இரண்டு பேரும் ரொம்ப நாளாக நண்பர்களாக இருந்தும் உங்களைப் பற்றிக் கிரிதரன் அதிகமாகப் பேசியது கிடையாது.''

''ஆனால் உங்களைப் பற்றி என்னிடம் நிறையச் சொல்லியிருக்கிறான்.''

''என்ன சொல்லியிருக்கிறார்...?''

''உங்களை முதன் முதலில் பார்த்ததிலிருந்து, அப்பா இறந்து போனது, உங்களைக் காப்பாற்றியது, அப்புறம் ராதிகா வீட்டில் நீங்கள் தங்கியிருப்பது எல்லாவற்றையும் சொன்னான். நீங்கள் ஏன் அந்த மாதிரிச் செய்தீர்கள்...?''

''என் நிலையில் நீங்கள் இருந்திருந்தாலும் இதைத்தான் செய்திருப்பீர்கள். அப்போது என் மனநிலை எப்படியிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். அப்பாவின் இறப்பு மட்டும் அதற்குக் காரணமாக இருந்திருக்க முடியாது. எதிர் காலத்தைப் பற்றின பயம் எனக்கு வந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

அப்போதிருந்த மனநிலை அப்படி. யாரும் நமக்குக் கிடையாதே என்கிற எண்ணம்தான் என்னை அந்தச்செயலைச் செய்யத் தூண்டியது. இப்போது நினைத்துப் பார்த்தால் நான் செய்த விஷயம் எத்தனை அசிங்கம் என்று புரிகிறது. கிரிதரனுக்கும் ராதிகாவிற்கும் நான் அதிகம் கடமைப்பட்டவள். அவர்கள் மட்டும் இல்லையென்றால் இந்த நேரம் நான் எந்த நிலையில் இருந்திருப்பேன்!''

''ஐயம் ஸாரி மிஸ் ஹரிணி. அந்த விஷயத்தை ஞாபகப் படுத்தி உங்களைக் கஷ்டப் படுத்திட்டேன்.''

''நோ. நோ... இதுல கஷ்டம் என்ன இருக்கு? அந்த நேரத்துல நான் தைரியத்தை இழந்துட்டேன். அவ்வளவு தானே...''

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோதே பேரர் அவன் ஆர்டர் பண்ணின பராத்தாவையும் ஆஃப் மட்டரையும் கொண்டு வந்து வைத்தார். அதைச் சாப்பிட்டுக் கொண்டே, ''நல்ல வேளை, உங்களுக்கு எதுவும் நேர்ந்து விடவில்லை. அப்படி ஏதாவது ஆகியிருந்தால் ஒரு நல்ல துணையை நான் இழந்திருப்பேன்.''

''என்னைப் பற்றி எதுவும் தெரிந்து கொள்ளாமல் நல்ல என்கிற வார்த்தையை எப்படிச் சேர்த்துக் கொண்டீர்கள்...?''

''ஒருவரைப் புரிந்துகொள்ள எனக்கு பத்து நிமிடப் பேச்சு போதும் ஹரிணி. நீங்கள் இந்தச் சந்திப்பிற்குப் பின் என்ன முடிவு செய்கிறீர்களோ எனக்குத் தெரியாது. நீங்கள் எந்த முடிவுக்கு வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள முடியும் என்னால் என்று சொல்ல முடியவில்லை.

நீங்கள் என்னை நிராகரித்து விட்டால் எனக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். அதுவும் உங்களைப் பார்த்த பின்பு நிச்சயம் கஷ்டமாகத்தான் இருக்கும். உங்களைப் பற்றிக் கிரிதரன் சொன்னதிலிருந்து உங்களை யாருக்கும் பிடிக்கும் என்று தோன்றிற்று. நிறைய விஷயங்களில் என்னுடன் நீங்கள் ஒத்துப் போவீர்கள் என்று மனசுக்குப் பட்டது. நான் அமைதியானவன். அதிகம் பேசாதவன். யாருடனும் அதிகம் பழகாதவன். கிரிதரனை விட்டால் எனக்கு வேறு நண்பர்கள் கிடையாது. அதே மாதிரி இத்தனை நெருங்கிப் பழகும் ஒரே பெண் நீங்கள்தான்.''

தீரேந்தர் சொல்லிவிட்டு அவள் முகத்தை ஒரு தரம் பார்த்தான். அந்தப் பார்வை மென்மையாய் மனசை வருடிக் கொடுக்கிறாற் போல இருந்தது. அந்தப் பார்வையையே சுவாசித்த பின் நிதானமாக அவளிடம் சொன்னான்.

''உங்களுக்கு என்னைப் பிடித்திருந்தால் — திருமணம் செய்து கொள்கிற அளவுக்குப் பிடித்திருந்தால் — என்னைப் பற்றி முதலில் நீங்கள் முழுதும் தெரிந்துகொள்ள வேண்டும். வாழ்க்கைங்கறது ரொம்ப அழகானது ஹரிணி. அதுல



கல்யாணம் என்கிறது இன்னும் அழகான சந்தோஷம் நிறைந்த ஒன்று.

அவசரமான ஒரு முடிவுக்கு வந்து விட்டோமோ என்று பின்னால் நினைக்கக் கூடிய ஒரு காரியத்தை இப்போதே செய்யாமல் இருந்து விடுவது நல்லதில்லையா? நான் எதற்கு இதையெல்லாம் சொல்கிறேன் என்றால் என்னைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாததனால்தான். நான் பிறந்ததிலிருந்தே பெற்றோர்களைப் பார்க்காதவன் ஹரிணி. அப்பாவின் அன்போ அம்மாவின் அரவணைப்போ எனக்குத் தெரியாது. நான் கன்னடம் பேசுபவர்களுக்குப் பிறந்தவன் என்பதைத் தவிர எதுவும் தெரியாது. என்னை அன்சாரி என்பவர்தான் வளர்த்தார். அவர் சொல்லித்தான் என் பெற்றோர்கள் கன்னடம் பேசுகிறவர்கள் என்று எனக்குத் தெரியும்.

ஒரு ட்ரெய்ன் ஆக்ஸிடெண்டில் என் அம்மாவும் அப்பாவும் இறந்து போய் விட்டார்களாம். அதே ட்ரெய்னில் பயணம் செய்த அன்சாரி எடுத்து வளர்த்திருக்கிறார். படிக்க வைத்தார். அவருடைய குழந்தைகளிலிருந்து என்னை வித்யாசப்படுத்தினதே கிடையாது. அது எல்லோருக்கும் வந்திராது ஹரிணி. யு மஸ்ட் மீட் ஹிம். அவரிடம் உன்னைப் பற்றிச் சொன்னால் சந்தோஷப் படுவார். அவருக்கு நிச்சயமாக உன்னைப் பிடிக்கும் ஹரிணி. அவர் மெட்ராசுக்கு வரட்டும். உன்னை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.

வாழ்க்கைங்கறது ரொம்ப அழகான விஷயம் என்பதை எனக்குக் கற்றுக் கொடுத்ததே அவர்தான் ஹரிணி. நாம வாழறதே சந்தோஷமாக இருக்கத்தான் என்பதையும் நான் அவரிடமிருந்து கற்றுக் கொண்டேன். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டால் வாழ்க்கை சுலபமாகி விடுகிறது என்று அவர் அடிக்கடி சொல்லுவார்.

அப்படி உங்களை நானும் என்னை நீங்களும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று நான் நினைக்கிறேன். ஒருவரோடு ஒருவர் பழகறதுக்கே இது அவசியம் என்கிற

போது ஒருவரோடு ஒருவர் சேர்ந்து வாழ இது இன்னும் அவசியம் இல்லையா...?" என்று அவளைப் பார்த்தான்.

பின், "ஸ்ரீதரன் உங்களைப் பற்றிச் சொன்னதிலிருந்து நீங்கள் எப்படி இருப்பீர்கள் என்று நான் கற்பனை பண்ணிப் பார்த்திருக்கிறேன். கற்பனையில் நான் பார்த்த ஹரிணியை விட நேரில் நான் பார்க்கிற ஹரிணி அழகுதான். எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு ஹரிணி. இந்த மாதிரி இதுவரை நான் யாரையும் நேசித்தது இல்லை. வாழ்க்கைக்கு ஒரு துணை அவசியம் என்று கூட நினைத்தது இல்லை. ஆனால் உங்களைப் பார்த்ததற்குப் பின் — ஒரு மாதம் ஆகியிருக்குமா, உங்களை நான் பார்த்து — அத்தனை நாட்களும் நீங்கள்தான் என் மனதில் நிறைந்திருக்கிறீர்கள்.

இதை நான் மறைக்க வேண்டிய அவசியமே இல்லை. உங்கள் மனதில் நான் நெருங்கி வந்திருக்கிறேனோ இல்லையோ ஆனால் என் மனம் முழுவதுமே நீங்கள்தான் நிறைந்திருக்கிறீர்கள். இந்த ஒரு மாதமாகவே நான் உங்களுடன் வாழ்ந்து கொண்டிருப்பதாகத்தான் எனக்கு நினைப்பு. என் ரூமில் நான் தனியாக இருக்கிறபோதெல்லாம் நீங்களும் கூட இருக்கிறாற் போலக் கற்பனை பண்ணிப் பார்த்துக் கொள்வேன். அந்த ஒற்றை அறையிலேயே நீங்களும் நானும் சேர்ந்து இந்த ஒரு மாதம் வாழ்ந்திருக்கிறோம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

நீங்கள் படிக்கிற மாதிரியும், உங்களுக்கு நான் நோட்ஸ் எடுத்துத் தருவது போலவும், உங்களைக் காலேஜ் வாசலில் ட்ராப் பண்ணுவது மாதிரியும், நான்கு மணிக்கு நான் வந்து அழைத்துக் கொண்டு வருவது மாதிரியும் — இப்போது நினைத்துப் பார்க்கும்போது எத்தனை சந்தோஷமான ஒரு கற்பனை உலகில் சஞ்சரித்திருக்கிறேன் என்று புரிகிறது ஹரிணி... நான் பார்த்த அந்தக் கற்பனை உலகை நீங்கள் நிஜமாகவே தந்தால் நான் எத்தனை சந்தோஷப் படுவேன் தெரியுமா?"

"நான் ஒன்று சொல்லட்டுமா...?"



"என்ன..." என்று நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"இவ்வளவு பேசறீங்க. இந்த ஒரு மாசத்திலே என்கிட்டே மிகவும் நெருக்கமாகப் பழகிட்டதாகச் சொல்றீங்க. இன்னும் கூட என்னை ஏன் பன்மையிலேயே அழைக்கறீங்க?"

"நான்தான் பேசிக்கிட்டிருந்தேனே தவிர நீங்கள் — ஐயம் சாரி — நீ வாய் திறந்து ஒண்ணுமே சொல்லவில்லையே, என் மனசில இருந்த அத்தனையையும் நான் வெளிப்படுத்தியாகி விட்டது. உன்னோட மனசும் இத்தனை நேரம் இப்படித்தானே அலைபாய்ந்து எண்ணிக் கொண்டிருந்திருக்க வேண்டும். ஆனால் எதுவுமே இதுவரை சொல்லலியே, உங்க முகத்திலிருந்தும் என்னால் எதுவுமே புரிந்து கொள்ள முடியவில்லை. உங்க முகம் கூட உணர்ச்சிகளை வெளிப்படுத்த மாட்டேன் என்கிறது. உங்க மனசுக்கும் முகத்துக்கும் அப்படி என்ன ஒரு ஒப்பந்தம்...?"

அதைக் கேட்டுப் புன்சிரிப்பாகச் சிரித்தாள் ஹரிணி. பளிச்சென்று விளக்கேற்றினது போல இருந்தது. எப்போதாவது சிரிக்கிற இவளின் சிரிப்பு எத்தனை இயல்பாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டான்.

"ஒப்பந்தம் எதுவும் இல்லை. புதுசான ஒரு அனுபவத்திற்கு எப்படி ரியாக்ட் பண்ணுறது என்று தெரியவில்லை. எனக்கு அதிகமாகப் பேச வராது. மனசுக்குள் இருப்பதை வெளிப்படையாகச் சொல்ல வரலை. உங்களைப் பார்த்ததிலிருந்து நானும் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன். அடிக்கடி உங்கள் நினைவு என்னைத் தொந்தரவு செய்து கொண்டுதான் இருக்கிறது. உங்க நினைப்பு எனக்கு வருகிறபோதெல்லாம் எனக்குச் சிலிர்த்துப் போகிறது. லைஃப் பார்ட்னர் பார்ட்னர் — இல்லை — "லைஃப் பார்ட்னர்" என்று சொல்லாமல், "லைஃப் பார்ட்னர்" — இல்லை.

"லைஃப் பார்ட்னர் பார்ட்னர்"

"கல்யாணம்ங்கறது இன்னும் சுவாரசியமான அழகான விஷயம் என்று புரிகிறது. அதற்கும் மேல நான் சொல்ல நினைக்கிற விஷயங்களை என்னால் சொல்லி விட முடியலை. அப்படியே சொன்னாலும் உங்களை மாதிரிச் சொல்ல வராது. உங்களுக்கு என் கம்பெனி எவ்வளவு தேவையாக இருக்கிறதோ அதே போல எனக்கும் உங்கள் கம்பெனி அவசியம். ஐ வாண்ட் டு பி வித் யு... வித் யு ஃபார் எவர். உங்களை மாதிரி ஒரு உயர்ந்த மனுஷனை எனக்குத் தேடித் தரணும் என்று எப்படித் தோன்றிற்று கிரிதரனுக்கு...! இப்படி நம்ம இரண்டு பேரையும் ஒன்று சேர்க்க வேண்டும் என்று எப்படி அவருக்குத் தோன்றிற்று...!"

அவள் பேசிக் கொண்டிருந்தபோதே டேபிளின் மீதிருந்த அவளின் கைகளைச் சட்டென்று பற்றிக் கொண்டான் அவன். வாய் திறந்து பேச வேண்டும் போலிருந்தது. மனசில் உள்ள அனைத்தையும் வார்த்தைகளில் வெளிப்படுத்தத் தோன்றிற்று. கூடவே எதற்கு என்ற கேள்வியும் எழுந்தது. இந்த வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம் இருக்கப் போகிறது...! பேசினால்தானா...? பேசாமல் புரிய வைக்க முடியாதா...!

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். மென்மையாய்ப் பார்க்கிற பார்வை. மனசைத் தொடுகிற பார்வை.

"மறுபடியும் உன்னை எப்போது சந்திக்க முடியும் ஹரிணி?"

"ஒரு நாள் சொல்லாமல் உங்க ரூமுக்கு வந்துவிடப் போகிறேன்."

"ஐயய்யோ, வேண்டாம் ஹரிணி. என் ரூமுக்கு நீ வர வேண்டாம். என்னைப் பார்க்க வேண்டும் என்று தோன்றினால் போன் பண்ணு. என் ஆபீசுக்குப் போன் பண்ணு. எங்கே எனக்காகக் காத்துக் கொண்டிருப்பாய் என்று எனக்குத் தெரியப்படுத்து. அங்கே வருகிறேன் நான்."

"ஏன் உங்க ரூமுக்கு நான் வருவது பிடிக்கலையா...?"



"அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை. அது ஒரு பாச்சலர்ஸ் ஹாஸ்டல். அதற்குரிய ஒரு தோற்றம் உனக்குப் பிடிக்காமல் போகலாம். அதற்கு மேலே எனக்குக் குடிக்கிற பழக்கம் உண்டு. நீ வர்ற சமயத்துல நான் பாட்டிலை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கலாம். ஐ வில் ட்ரை டு கர்டெய்ல் இட்... இதுவரை என்னை வேண்டாம் என்று தடுக்க யாரும் இல்லை. இனிமேல நீ வந்து தடுத்தால் கொஞ்சம் கொஞ்சமாக நான் திருத்திக்கொண்டு விடுவேன்..."

"சிகரெட் பிடிக்கிற பழக்கம் கூட உண்டா...?"

"ம், அதிகமாக இல்லை. ஒரு நாளைக்கு ஒரு பாக்கெட்..." அவன் சொல்லி விட்டு பேரரைக் கூப்பிட்டான். அவர் காபிக் கோப்பைகளைக் கொண்டு வந்து வைத்தார். குடித்து விட்டு, "கிளம்பலாமா?" என்று கேட்டான். அவள் தலையசைத்தாள்.

அவர்கள் வெளியில் வந்தபோது நன்றாக இருட்டி விட்டிருந்தது. ஹரிணி கைக்கடிகாரத்தில் மணி பார்த்தாள். ஏழரையாகியிருந்தது.

"நேரமாகி விட்டதா...?" தீரேந்தர் அவளிடம் கேட்டான்.

"ஆமாம். வீட்டிற்குப் போக எட்டாகிவிடும் இல்லையா... இவ்வளவு நேரம் கழித்து நான் போனது இல்லை..."

"ராதிகாவின் அம்மா ஏதாவது சொல்லுவார்களோ...?"

"ம் ஹூம். அவர்கள் எதுவும் சொல்ல மாட்டார்கள்."

"நான் வீடு மட்டும் கொண்டு வந்து விடட்டுமா...?"

"வேண்டாம். நான் போய்விடுவேன். அவர்கள் முன்னால் உங்களுடன் போய் இறங்க எனக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாள் அவர்களிடம் நம்மைப்பற்றிச் சொல்லிவிட்டு அப்புறம் உங்களை அறிமுகப் படுத்துகிறேன்."

"சரி, உன் இஷ்டம்..." என்று அவன் தூரத்தில் சென்று கொண்டிருந்த ஆட்டோவை அழைத்தான். அது அரை வட்டம் அடித்து அவர்கள் அருகில் வந்து நின்றது. ஹரிணி

போக வேண்டிய இடத்தைச் சொல்லி ஏறிக் கொண்டதும் ஆட்டோ புறப்பட அவன் பாக்கெட்டில் தேடி அதிலிருந்து ஒரு வில்ஸ் பில்டரைப் பற்ற வைத்துக் கொண்டான்.

ஆட்டோ கண்களை விட்டு மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்த பின் கிரிதரனுக்குப் போன் பண்ணினால் என்ன என்று தோன்றிற்று. அருகிலுள்ள பெட்ரோல் பங்கிற்குச் சென்று டெலிபோன் எண்களைச் சுழற்றினான். மறு பக்கம் ஹலோ என்ற குரல் கேட்டதும் ஐம்பது பைசா நாணயத்தைப் போட்டு ஹலோ என்றான். "கிரி... நான்தான் ...தீரேந்தர் பேசுகிறேன்," என்றான்.

"எங்கிருந்து பேசுகிறாய்?"

"ஒரு பெட்ரோல் பங்கிலிருந்து... ஐ வான்ட்டட் டு தாங்க்யு."

"எதற்கு...?"

"எல்லாவற்றிற்கும்தான். குட் நைட்."

போனை வைத்ததும் ஹரிணியின் ஞாபகத்துடன் ஒரு ஆட்டோ பிடித்தான் அவன்.

# 10

கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழையும்போது வீடு அன்று எப்போதும் போல் கலகலப்பாக இல்லாமல் மாறுபட்டிருந்ததை உணர்ந்தாள் ஹரிணி. வெளியில் ட்யூப் லைட் எரிந்து கொண்டிருந்தது.

வழக்கத்திற்கு மாறாக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மெதுவான குரலில் எதிர் வீட்டு வரதனும், ஹரிஹரனும் பேசிக் கொண்டு நின்றிருந்தார்கள். இன்னும் அந்தத் தெருவில் வசிக்கும் எட்டுப்பேர் நின்றிருந்தும் எப்படி அந்த வீடு அமைதியாக இருக்கிறது என்று நினைத்து ஹரிஹரனைக் கேட்கலாமா என்று யோசித்த போது ராதிகாவின் அப்பா எதிரில் வந்தார். அவர் முகம் முழுவதும் சிவப்பேறிக் கண்கள் எல்லாம் வீங்கிப் போயிருந்தது.



இவளைப் பார்த்து, "இப்போதான் வர்றியாம்மா...?" என்றார்.

அவள் மௌனமாக இருந்தாள்.

"போம்மா ... உள்ளே போயிப் பாரு...ராதிகா என்ன வேலை செஞ்சு எப்படி வந்திருக்கான்னு பாரும்மா...வெள்ளை வெளேர்ன்னு மெழுகுப் பொம்மை மாதிரி இருந்தாளேம்மா... இப்ப எப்படி ஆயிருக்கான்னு பாரும்மா... இத்தனை வருஷம் கஷ்டப்பட்டு ஆசையாக ஒரே பொண்ணுன்னு வளர்த்தேனேம்மா... அவ ஆசைப்பட்டான்னு கல்யாணம் பண்ணி ஒரு மாசம்தானேம்மா ஆச்சு... அதுக்குள்ளே அவசரப்பட்டுட்டாம்மா..."

அவரின் வார்த்தைகள் அவளின் இதயத்தையே தொறுக்குவது போலிருக்க உள்ளே வந்தாள் அவள். அவளால்—கட்டிலில் கிடத்தப்பட்டிருந்த ராதிகாவைப் பார்க்க முடியவில்லை.

ராதிகாவா அது! தலை முடியெல்லாம் கருகி...கழுத்தும் கன்னங்களும் எரிந்து கருமையாகி—உதடுகள் கூடத் தெரியாமல் பற்கள் வெளியே நீட்டிக் கொண்டு — ஓ காட்...

ராதிகாவின் அம்மா அவளைப்பார்த்ததுமே மறுபடியும் அழ ஆரம்பித்தாள். ஹரிணியாலும் தாங்க முடியவில்லை. ராதிகாவின் முகத்தை உயிரற்ற உடம்பைப் பார்க்கப் பார்க்கத் துக்கம் தொண்டையை அடைத்தது. இது என்ன கோழைத்தனம்...? தற்கொலை செய்து கொள்ளும்படி அப்படி என்ன நேர்ந்து விட்டது...! எதிர் நீச்சல் போட்டு எல்லாவற்றையும் சமாளிக்க வேண்டும் என்று எனக்குச் சொல்லித் தந்த ராதிகாவா நீ... உன்னிடமிருந்த தைரியமெல்லாம் எங்கே போயிற்று? என் அவசரப்பட்டாய் ராதிகா...? எனக்கு இருந்ததெல்லாம் அப்பாவும் நண்பர்களும் தானே. ஒவ்வொருத்தரா என்னை விட்டுப் போறீங்களே... என்னால தாங்க முடியலையே ராதி...உன்னைப் பார்க்கக்கூட முடியலையே...

ஹரிணி அம்மாவிடம், "எப்படிம்மா நடந்தது இது...?" என்று கேட்டபோது, "தெரியலேம்மா...காலையில ஸ்டவ்

பக்கத்துலே ஏதோ வேலே செய்து கொண்டிருந்தபோது கையில தீப் பற்றிக் கொண்டுவிட்டதாம் ஹரிணி...நைல புடவை வேற...எப்படி ஆகிவிட்டாள் பாரும்மா...ஒரு நி ஷத்துல உடம்பே பத்திண்டு போயிட்டாளேம்மா...தம்பி ஏமாத்தினது மட்டுமில்லாமல் அவசர அவசரமா கல்யாணமு பண்ணிண்டு அந்தப் பையனேயும் ஏமாத்திட்டுப் போயிட்ட ளேம்மா..."

ஹரிணிக்குத் தூக்கி வாரிப் போட்டது. என்ன சொல்லு ருர் இவர்... என்ன நினைத்துக் கொண்டிருக்கிருர்...! இது தற்செயலாக நிகழ்ந்தது என்ரு...? இது கூடவா புரியவில்லை திருமணத்திற்குப் பின்பு ஒரு நாள் சந்தோஷமாக இருந்தது இந்த முகம்...? ஒரு நாள் சிரித்ததா இந்த முகம்...? அந்த கண்களில் சிரிப்புத் தெரிந்ததா... அந்த உதடு சிரித்த நேரங் களில் அவளின் உள்ளம் அழுதது கூடவா புரியவில்லை...

ராதிகாவின் அப்பா அறை வாசலில் நின்று ஹரிணி என்று அழைத்தார். அவள் எழுந்து போனாள். ஒரு நிமிட மௌனத்திற்குப் பின், "யார் யாருக்குத் தெரியப்படுத்தணுமோ அவங்க எல்லாருக்கும் சொல்லிடும்மா... நாளைக்குக் காலை யிலே ஐந்தரை மணிக்குப் பங்களூர் மெயில் வந்துவிடும், என் தங்கை மட்டும்தான் வரணும். அவ வந்தாச்சுன்னு ஆக வேண்டியதை உடனே பாத்துடலாம்மா..." சொல்லும் போதே அவரின் குரல் உடைந்து போயிற்று.

"உங்களுக்கு எப்போ தெரியும் மாமா?"

"பதினேரு மணி இருக்கும்மா... பிரகாஷ் ஓடி வந்தான், மாமா மோசம் போயிட்டோம்னு சொன்னன், அவனேட முகத்தைப் பார்த்ததுமே பயமாயிருந்தது. என்ன ஆச்சுன்னு பதறிப் போய்க் கேட்டேன். ராதிகா புடவை தீப்பத்தி எரிந்து, ஆஸ்பிடலில் அட்மிட் பண்ணியிருக்கோம் மாமா... டாக்டர்ஸ் எல்லாம் இப்போ எதுவும் சொல்லறதுக்கு இல்லேன்னு சொல் லிட்டா மாமான்னு வந்தான். உடனே போனேம்மா... அவ கண்ணைத் திறந்து பாத்திருக்கக் கூடாதா...? அப்பான்னு ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதாம்மா...நாங்க போன



போது எல்லாமே முடிந்து போய் உடம்பை வெள்ளைத் துணி யிலே போர்த்தி வெச்சிருந்ததும்மா... அவளுக்குத்தான் சமைக்க வேண்டிய அவசியம் எதுவும் கிடையாதேம்மா... அவ எதுக்கும்மா கிச்சன் பக்கம் போகணும்? படிப்பை நிறுத் தாமல் ஒழுங்காக காலேஜ் போயிருந் தால் இதெல்லாம் ஆகியிருக்காதேம்மா..."

"அவளுக்குத்தான் கிச்சன் பக்கம் போக வேண்டிய அவசி யம் இல்லையே. ஏன் போனள் என்று யோசித்துப் பார்த்தீர் களா?" என்று கேட்க வந்ததைச் சட்டென்று நிறுத்திக் கொண் டான்.

"நான் போய் எங்களோட ஃபிரெண்ட்சிற்குச் சொல்லி விட்டு வருகிறேன்."

"போன் பண்ணிடேன்மா..."

"அவங்க வீட்டில் போன் கிடையாது மாமா."

ஹரிணி தெருக் கோடியில் உள்ள டெலிபோன் பூத்திற்கு வந்து கிரிதரனின் எண்களைச் சுழற்றினள். மறு முனையில் அவன் குரல் கேட்டதும், "நான்தான் ஹரிணி பேசுகிறேன்," என்ருள்.

"கங்கிராட்ஸ் ஹரிணி..."

"ராதிகா ஈஸ் நோ மோர் கிரிதரன்..."

"வா...ட்!"

"ரியலி. காலையிலே பதினேரு மணிக்கு நெருப்புப் பட்டு புடவையெல்லாம் பத்திண்டுடுத்தாம்..."

"வாட் டு யு மீன்..."

"இது தற்செயலாக நடந்த நிகழ்ச்சியாக எனக்குப் படலை இது தற்கொலையாகவோ கொலையாகவோதான் இருக் கணும்..."

"என்ன?"

''எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது கிரிதரன். அவ ளோட கல்யாண நாளோடு அவளின் சிரிப்பெல்லாம் நின்று போய்விட்டது. அப்புறம் அவள் சந்தோஷமாக இருந்தே நான் பார்க்கவில்லை. போன வாரம் அவளை நான் பார்த்த போது கூட அவள் ஏதோ மாதிரிதான் இருந்தாள். நான் எத்தனை கேட்டும் பதில் வரவில்லை. அவர்கள் இருவரிடையே ஏதோ நடந்திருக்கிறது."

''அவ...அம்மா அப்பா கிட்டே சொல்லி விட்டாயா...?"

''ம்ஹூம்...இது தற்செயலாக நடந்த விஷயம் என்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பிரகாஷ் மேலே எந்தச் சந்தேகமும் வரலே. பிரகாஷ் வந்து அங்கே நடிச்சுக்கிட்டிருக்கான். எனக்கு அவனைப் பார்க்கும் போதே இரண்டு கைகளையும் வெச்சு அவன் கழுத்தை நெரிச்சிடலாம் போல இருக்கு. இட் ஈஸ் எ பிளாண்ட் மர்டர்...''

''டிட் ஷி லீவ் எனி நோட்..."

''நோ நோட்...நத்திங்...இது தற்கொலையாக இருந் தாலும் அவள் எழுதி வைத்திருப்பாள். கொலையாக இருந் தால்...? அவளை வந்து பாருங்களேன்...உடம்பு முழுசும் கருகிப் போய் விட்டது. பார்க்கக் கூட முடியலே. தலையெல்லாம் கருகிக் கன்னம் எல்லாம் வெந்து போய் இருக்கு. இரண்டு கண்களைத் தவிர உடம்பே கருகிப் போய் விட்டது கிரிதரன்..."

''சரி, நான் வரேன்...''

''இப்பவே வர்றீங்களா...?"

''பத்தே நிமிஷம் வந்து விடுவேன்."

''நான் கேட் அருகிலேயே உங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பேன்."

''சரி...''

அவள் போனை வைத்து விட்டு ராதிகாவின் வகுப்பில் படிக்கும் லாவண்யாவிற்குப் போன் பண்ணி அவளின் நண்பர் களுக்கும் விஷயத்தைத் தெரிவிக்கச் சொல்லிவிட்டு வந்தாள்.



கிரிதரன் சொன்னது போலவே வந்து விட்டான். ஹரிணி யைப் பார்த்ததும், ''இட் ஈஸ் எ ஷாக்கிங் நியூஸ் ஃபார் ஹரிணி. நிஜமாகவே என்னால் நம்ப முடியவில்லை ஹரிணி!" என்றான்.

''நேத்து ராத்திரி நான் திரும்பி வந்ததும்தான் தெரியும் கிரிதரன். இது காலையிலே பதினொரு மணிக்கு நடந்திருக்கு. ஹாஸ்பிடலுக்கு எடுத்து கிட்டுப் போயிருக்காங்க. ராதியோட அம்மா அப்பா போய்ப் பார்த்த போது அவ இல்லே. எனக்கு நிஜமாகவே சந்தேகமாக இருக்கிறது. இது கொலைங்கிற சந்தேகம். பிரகாஷ் நிச்சயமா இதைச் செய்திருப்பான்..."

''எனக்குக்கூட அப்படித்தான் தோன்றுகிறது. தற் கொலை பண்ணிக்கிற அளவுக்கு அவனுக்குத் தைரியம் கிடையாது ஹரிணி. அது கூட கெரசினைக் கொட்டிப் பத்த வச்சிக்கிற அளவுக்கு நிச்சயமா கிடையாது. தற்கொலையா இருந்தா ஏதாவது எழுதி வச்சிருக்கலாம்."

''இது கொலையாகவும் இருக்கலாம்னு அவங்க அம்மா கிட்டே சொல்லலாம் இல்லையா?"

''சொல்லி என்ன செய்ய முடியும். இது கொலைதான்னு நிரூபிக்க நம்மால முடியுமா...?"

''போலீஸ் எதற்கு இருக்காங்க..."

''இது ஆக்ஸிடெண்ட்தான்னு அவங்க சொல்லிடலாம். இது அவங்க அவங்க மனசுக்குத்தான் தெரியணும். ஆக்ஸி டெண்ட்லே செத்துப் போனதை அவங்க அம்மாவும் அப்பா வும் தாங்கிப்பாங்க. ஆனால் கொலைன்னு தெரிஞ்சால் அவங்க மனசு எத்தனை கஷ்டப்படும்னு நெனைச்சுப் பாரு. அதுவும் ப்ரூவ் பண்ண முடியலைன்னா எத்தனை கோபமும் ஆத்திரமும் வரும்."

''வரட்டுமே......உண்மை வெளியிலே வந்துதானே ஆகணும்."

''அதனால பாதிக்கப்படப் போறது யாருன்னு நினைச்சுப் பாரு ஹரிணி.''

''நிச்சயமாகப் பிரகாஷ்தான்.''

''அவன் நிச்சயமாகப் பாதிக்கப் பட மாட்டான் ஹரிணி. இதிலிருந்து தப்பிச்சு வர அவனுக்கா தெரியாது. இதையெல்லாம் நினைச்சுப் பார்க்காமலா அவன் இதைச் செய்திருப்பான். போலீஸ் வரும். அவர்கள் இன்வெஸ்டிகேட் பண்ணினால் பெரிய ஆளுங்க எல்லாம் தலையிட்டு ஆக்ஸிடெண்ட்தான்னு நிரூபிச்சிட்டுப் போயிடுவாங்க. அவன் ஒரு விதத்திலேயும் அஃபெக்ட் ஆக மாட்டான். அவனோட அம்மா அப்பாவின் வயத்தெரிச்சல் மிச்சமாகும். அவங்கதான் புலம்பிக்கிட்டிருக்கணும். வேற என்ன நடக்கும்...?

''பத்தோட பதினொன்னுன்னு பேசாமல் போகச் சொல்றீங்களா?''

''வேற வழி கிடையாதுன்னு சொல்றேன். நாம போய்ச் சொல்லி என்ன சாதிக்கப் போறோம்னு நினைச்சுப் பாரு. அந்த அம்மா அப்பாவிற்குப் பிற்காலத்துல இருக்கப் போற கொஞ்ச நிம்மதியையும் நாம கலைக்கணுமா...? உண்மை வெளியில வரும்னு நீ நெனைக்கிறியா...? அப்படி நெனச்சால் நாமதான் பைத்தியக்காரங்க. உனக்குப் பிரகாஷை இப்பத்தான் தெரியும், எனக்கு ரொம்ப வருஷமாத் தெரியும் ஹரிணி. வா. போய் அவனோட அம்மா அப்பாவைப் பார்க்கலாம்!'' என்றான்.

பிரகாஷ் கிரிதரனைப் பார்த்ததும் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தான். 'எத்தனை வேஷம்' என்று மனத்துக்குள் பொருமினாள் ஹரிணி. இரண்டு நிமிடத்தில் பொங்கி வந்த துக்கமும் அழுகையும் சட்டென்று அடங்கி விட்டது. கொஞ்ச நேரம் அவனருகில் நின்றிருந்து பின் ராதிகாவின் அப்பாவிடம் சென்றான் கிரிதரன். அடுத்த நாள் எட்டு மணிக்கு எல்லாமே முடிந்து போயிற்று.

ஹரிணிக்குச் சட்டென்று அப்பாவின் ஞாபகம் வந்தது. அவர் உடம்பை ஹாலில் கிடத்தியிருந்தது நினைவிற்கு



வந்தது. அவன் அழுதது—தற்கொலைக்கு முயற்சித்தது—ராதிகா வீட்டில் வந்து தங்க ஆரம்பித்தது என்று ஒவ்வொரு விஷயமும் சித்திரங்களாகத் தெரிந்தது.

எல்லாம் முடிந்து மயானத்திலிருந்து திரும்பி வந்து குளித்து அரிசி உப்புமா சாப்பிட்ட போது ராதிகாவின் அப்பா அவளைப் பார்த்தார். ''அன்னிக்குச் சொன்னியே ஹரிணி ஒரு வாக்கியம். அது எத்தனை உண்மையானது தெரியுமா...? இப்ப நான் மட்டும் என்ன செய்யறேன். எனக்கும் பசிதான் பெரிசாகப் போய் விட்டது. பார்த்தியா...? அதுதான் பிரதானமாகி விட்டது பார்த்தியா...இத்தனை நாள் ஆசைப் பட்டு ராதிகாவை வளர்த்துப் படிக்க வெச்சுக் கல்யாணமும் பண்ணித் தந்து கொண்டு போயும் வெச்சுட்டு வந்துட்டேம்மா...''

''என்ன நீங்க போய் இப்படி அழறீங்க. ப்ளீஸ் பி காம்...'' என்று கிரிதரன் அவரின் முதுகில் தட்டினான்.

# 11

அன்று தீரேந்தருக்குப் போன் பண்ண வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் ஹரிணி. அவனைப் பார்த்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. ராதிகா இறந்து போன நான்கு நாட்கள் கழித்துப் பார்த்ததுதான். அன்று எப்படியாவது அவனைக் கல்லூரிக்கு நான்கு மணிக்கு வரச் சொல்ல வேண்டும் என்று நினைத்துத் தெருக் கோடியில் உள்ள டெலிபோன் பூத்திற்குச் சென்றாள். மறு முனையில் டெலிபோனை எடுத்து ஹலோ என்றான் தீரேந்தர்.

''ஹலோ! நான்தான் ஹரிணி பேசுகிறேன்,'' என்றாள்.

''ம். குரலிலிருந்தே தெரிகிறது.''

''எப்படி இருக்கிறீர்கள்...?''

''ம். நன்றாக இருக்கிறேன்.''

"போன வாரம் இரண்டு முறை போன் பண்ணினேன். நீங்கள் ஆபீஸில் இல்லை."

"தெரியும் ஹரிணி."

"நீங்க மறுபடியும் எனக்குப் போன் பண்ணவில்லையே."

"பண்ண முடியலை."

"என்ன தீரேந்தர், ஏதோ மாதிரிப் பேசுகிறீர்கள்?"

"ஒன்றுமில்லையே."

"நீங்கள் ஒன்றுமில்லை என்று சொன்னால் சரி. எனக்கு இன்று உங்களைப் பார்க்க வேண்டும். நாலு மணிக்கு என் காலேஜுக்கு வாங்களேன்."

"இன்றைக்கா...?"

"ஆமாம். இன்றைக்குத்தான்."

"ஆபீஸில் கொஞ்சம் வேலை இருக்கிறது ஹரிணி."

"என்றைக்கு ஆபீஸில் வேலை இருக்காது?"

"நாளைக்குக் கிரிதரன் வீட்டிற்கு வாயேன்."

"எத்தனை மணிக்கு...?"

"பதினொரு மணிக்கு வர முடியுமா...?"

"சரி, வருகிறேன்."

டெலிபோனை வைத்தபோது தீரேந்தரின் குரலும் பேச்சும் வழக்கத்திற்கு மாறாக இருந்ததை ஹரிணி கவனிக்கத் தவறவில்லை.

தீரேந்தர் ஹரிணியுடன் பேசி முடித்ததும் கிரிதரனுக்குப் போன் பண்ணி அப்போதே அவனைப் பார்க்க வருவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினான். அவன் போன போது ரிசப்ஷனிலேயே அவனுக்காகக் காத்திருந்தான் கிரிதரன். அவன் முகம் முக்கியமாக எதையோ சொல்ல நினைப்பதைப் புரிந்து கொண்டு, "வெளியில் எங்கேயாவது போகலாமா?" என்று கேட்டான்.



"ஓ எஸ். ஐ டோண்ட் மைண்ட். உன்கிட்டே பேசணும். அவ்வளவுதான். நீ எங்கே போனாலும் நான் வரேன்."

"இரு. நான் காரைப் பின் பக்கம் பார்க் பண்ணியிருக்கிறேன். எடுத்துக் கொண்டு வருகிறேன்." அவன் காரை ரிவர்ஸில் எடுத்துக் கொண்டு வந்து முன் பக்கக் கதவைத் தீரேந்தருக்குத் திறந்துவிட்டான். அவன் ஏறி உட்கார்ந்ததும் "டிரைவ் இன்னுக்குப் போகலாம்," என்று வலது பக்கம் திருப்பினான்.

டிரைவ் இன்னில் ஒரு மரத்தடியில் காரை நிறுத்தி இரண்டு கப் காபிக்கு ஆர்டர் பண்ணினதும் அவன் பக்கம் திரும்பி, "இப்போ சொல்லு. இப்படி என்னைக் கூப்பிட்டுக் கொண்டு வரும்படி அப்படி என்ன முக்கியமான விஷயம்...!" என்றான்.

"நான் ஹரிணியைப் பார்த்து ஒரு மாசத்துக்கு மேல் ஆயிடுத்து. ராதிகா இறந்து போன நாலு நாள் கழிச்சுப் பார்த்ததுதான். அப்புறம் அவள் எனக்கு இரண்டு முறை ஆபீசுக்குப் போன் பண்ணினாள். நான்தான் எடுத்தேன். ஆனால் தீரேந்தர் இல்லை என்று சொல்லி வைச்சுட்டேன்..."

"ஓய்...?" ஆச்சரியம் கலந்த பார்வையில் கேட்டான் கிரிதரன்.

"இப்போது அவளைத் தவிர்க்கத்தான் தோன்றுகிறது கிரி..."

"அதைத்தான் ஏன் என்று கேட்கிறேன்."

"நான் கடைசியா அவளைப் பீச்லேதான் பார்த்தேன். இரண்டு பேரும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போ நான் இருமிக் கொண்டே இருந்தேன். அவள் என்னை ஒரு டாக்டரிடம் போய்க் காண்பிக்கச் சொன்னாள். இதுவரை நான் டாக்டர் கிட்டேயே போனது கிடையாது கிரி. என் உடம்புலே இத்தனை அக்கறை எடுத்துக்கிட்டு இவ்வளவு முறை சொல்லுகிறாளே என்பதற்காகச் சரி போய் டெஸ்ட் பண்ணிக்கிறேன்னு

சொன்னேன். அன்றைக்கு ராதிகாவைப் பத்தித்தான் பேசிக் கொண்டிருந்தோம். ராதிகாவோட டெத்—இழப்பு அவளை உலுக்கிவிட்டது கிரி.

கொஞ்ச நாளுக்கு முன்னாடி அப்பா என்னை விட்டுப் போயிட்டாரு. இப்போ ராதிகா... இன்னும் யாரையெல்லாம் இழக்கப் போறேனோன்னு சொன்னாள். அப்புறம் நான் விரும்பறவங்க நேசிக்கிறவங்க எல்லோரும் என்னை விட்டுப் போயிடறாங்களே ஏன் நீரேந்தர்? என்று என்னிடம் கேட்டாள். இப்போ நானும் அவளை விட்டுப் போயிடுவேனோங்கற பயம் வந்துவிட்டது கிரி."

"என்ன சொல்லுகிறாய் நீ..."

"நான் ஹரிணி சொன்னாளேன்னு டாக்டர்கிட்டே போனேன். இருமுகிறபோது இரத்தம் வந்தது என்றும் சொன்னேன். அவர் என்னை டிரீட்மெண்டிற்கு அடையார் கேன்ஸர் ஹாஸ்பிடலுக்கு அனுப்பிவிட்டார்."

"நிஜமாகவா சொல்றே நீ... இது உண்மையா...?"

"எஸ்..."

"நோ... நோ... அந்த டாக்டர் உன்னை ஒழுங்காக டெஸ்ட் பண்ணியிருக்க மாட்டார். நீ வா. என்னோட ஃபாமிலி டாக்டரிடம் உன்னை அழைத்துக் கொண்டு போகிறேன்..."

"அவர் எடுத்த டெஸ்டுகள் எல்லாம் சொல்கின்றன கிரிதரன். எனக்கு அவர் சொன்னபோது நம்பத்தான் முடியலே. இனிஷியல் ஸ்டேஜிலேயே வந்திருந்தால் குணப்படுத்தியிருந்திருக்க முடியுமாம். இப்போது நான் நாட்களை எண்ணத்தான் வேண்டும் போலிருக்கிறது. இந்த நிலையிலேயே எனக்கு ஒரு நட்பு அவசியம்தானு சொல்லேன். அவள் அன்று கேட்டாளே, ஏன் நான் விரும்புகிற அத்தனை பேரும் என்னை விட்டுப் போகிறார்கள் என்று... நானும் ஒரு பந்தத்தை ஏற்படுத்திவிட்டு ஏன் போகணும்? அதனால்தான்



அவளை எனக்குப் பார்க்க முடியலே. ஷி லவ்ஸ் மி ஸோ மச்... இதை அவளால் தாங்க முடியாது. என்றால் எப்படி அவகிட்டே இதைச் சொல்ல முடியும்..."

"ஓ காட்... நோ... 'உன்னை இப்படி விட்டுவிட மாட்டேன் நீரேந்தர். உலகத்தின் எந்த மூலைக்கு வேண்டுமானாலும் போய் உன்னைக் காப்பாத்திடுவேன் நான். ஹரிணியால மட்டும் இல்லை. என்னாலும் இதைத் தாங்க முடியவில்லை."

"எனக்கும் முதல்லே கஷ்டமா இருந்தது. இன்னும் ஆறு மாசம்தான் எனக்கு லைஃப் என்று நினைக்கிறபோதே அழுகை அழுகையா வந்தது. முதல்ல தெரிஞ்சபோது கடவுளைத் திட்டிக்கிட்டே இருந்தேன். லைஃப்லே அதிகமான ஒரு சந்தோஷத்தைத் தந்துவிட்டு இனிமையான ஒரு வாழ்க்கையை ஆரம்பித்து உடனே அதை அழிச்சுடறியேன்னு கேட்டேன். எனக்கே அந்த மாதிரி இருந்தால் ஹரிணிக்கு எப்படி இருக்கும்னு நினைச்சுப் பார்த்தேன். உடனேயே என் சந்திப்பு பேச்சு எல்லாத்தையும் நிறுத்திக்கிட்டேன். ஆனால் நேத்து அவ போன் பண்ணினபோது ஒரு நிமிஷம் எல்லாத்தையும் மறந்துட்டேன். அடுத்த நிமிஷம்தான் உறைச்சுது. நாளைக்கு அவளை உங்க வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கேன். அவள் வருவாள். என்னால் இனிமேல் அவளைப் பார்க்க முடியாது. நீங்க எத்தனை நினைச்சாலும் காப்பாத்த முடியாத கட்டத்தை எல்லாம் நான் தாண்டிப் போயாச்சு. நான் வர மாட்டேன். எனக்காக அவள்கிட்டே என்னைப்பற்றி நீ சொல்லிடணும்.

"என்னை மறக்கச் சொல்லணும். வேற யாரையாவது ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லணும். உன்னால் முடிந்தால் ஒரு நல்ல பையனாகப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைப்பியா கிரி?"

"டோண்ட் ஸே தட். இதை அவள் தாங்கிப்பாள்னு நினைக்கிறியா...? அதுக்கும் மேல வேற ஒரு கல்யாணம் பண்ணிப்பான்னு நினைக்கறியா? நான் அந்த மாதிரிச்

சொன்னால் என்றைக்குத் தீரேந்தரை நேசிக்க ஆரம்பித்தேனோ அன்றைக்கே எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதுன்னுதான் அவள் சொல்லுவாள்.

''ஐ நோ ஹர். இன்னொரு கல்யாணம் பண்ணிக்க அவ மனசு நிச்சயமா இடம் கொடுக்காது. அவள் நிச்சயமா அதைச் செய்ய மாட்டா...''

''என்னை என்ன பண்ணச் சொல்கிறாய் நீ? இனிமேல் என்னால் அவளைப் பார்க்க நிச்சயமாக முடியாது கிரி.''

''டாக்டர் என்ன சொன்னார்?''

''இன்னும் மூன்று மாசம் ஒவ்வொரு நாட்களையும் விரல் விட்டு எண்ணிக் கொண்டிருக்கச் சொன்னார்.''

''நீ அவளைப் பார்க்க வர மாட்டேன்னு சொல்லுவதெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. ட்ரை டு ஃபேஸ் ரியாலிடி. நீ நாளைக்குக் கண்டிப்பாக வா. அவள்கிட்டே நீயே சொல்லு. லைஃப்லே ரொம்ப அடிபட்ட பெண்தான் அவள். இது கஷ்டமாக இருந்தாலும் இந்த மூணு மாசம் உன்னோடு இருக்கறதைத்தான் அவ பெரிய விஷயமாக நினைப்பாள்.''

''இது அவளோட லைஃப்பைக் கெடுக்கிற விஷயம் கிரி. நீ என்ன பேசறேன்னு உனக்குப் புரியலைன்னு நினைக்கிறேன். இப்ப இல்லைன்னாலும் என்றைக்காவது ஒரு நாள் அவ மனசு மாறும். வேறு கல்யாணம் பண்ணிக்கலாம்னு தோணும்...''

''அது அவளைப் பொறுத்த விஷயம். ஆனால் அவளைப் பார்க்காமல் மட்டும் இருக்காதே. யு ப்ளீஸ் கம் டுமாரோ...''

கொஞ்ச நேர மௌனத்திற்குப் பின்பு, 'சரி. வருகிறேன்,' என்றான் அவன்.

அடுத்த நாள் பதினொரு மணிக்குப் புன்னகையுடன் உள்ளே நுழைந்தாள் ஹரிணி. கிரிதரனையும் தீரேந்தரையும் பார்த்து 'ஹலோ' என்றாள். கிரிதரனிடம், ''எப்படி இருக்கிறீர்கள்...?'' என்று கேட்டாள்.

''ம். எனக்கு என்ன... நன்றாக இருக்கிறேன்.''



''இரண்டு பேரும் ஏதோ மாதிரி இருக்கிறீர்களே, என்ன விஷயம்... நான் நேற்றுப் போன் பண்ணின போதும் அவர் சரியாகப் பேசவில்லை. இன்று இரண்டு பேருடைய முகமுமே ஏதோ மாதிரி இருக்கிறது.''

''காபி சாப்பிடுகிறாயா ஹரிணி?''

''முதலில் உங்களை உறுத்திக் கொண்டிருக்கிற விஷயம் என்ன என்று சொல்லுங்கள். அப்புறம் சாப்பிடுகிறேன்.''

''காபி சாப்பிடேன். சொல்லுகிறோம்.''

''சொன்னால்தான்...''

தீரேந்தர் ஹரிணியையே ஒரு நிமிடம் பார்த்துவிட்டுச் சட்டென்று எழுந்து உள்ளே போனான். அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த கிரிதரன் ஹரிணி பக்கம் திரும்பினான்.

''உன்கிட்டே ஒரு விஷயம் சொல்லணும் என்றுதான் அவன் உன்னை வரச் சொன்னான்.''

''சொல்ல வந்ததைச் சொல்லாமல் எழுந்து போனால் எப்படி?''

''ஹி வான்ட்ஸ் மி டு டெல்.''

''என்ன, சொல்லுங்களேன்.''

''ஹி டஸண்ட் வான்ட் டு மேர்ரி யு.''

''ஒய்?'' அவள் கேட்டபோது அவளின் முகம் மனத்திலிருந்த உணர்ச்சிகளைப் பிரதிபலித்தது.

''அவனுக்கு 'ப்ளட் கான்ஸர்' ஹரிணி.''

ஹரிணி அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள். நீங்கள் சொல்வது உண்மையா என்கிற பயம் கலந்த பார்வை. அவன் எழுந்தபோதும், உள்ளே போய்க் காபி கலந்து வைத்த போதும் தீரேந்தர் மறுபடி வந்து உட்கார்ந்தபோதும் அவள் அப்படியேதான் இருந்தாள்.

பதினைந்து நிமிட மௌனத்திற்குப் பின் 'ஹரிணி' என்று நீரேந்தர் அழைத்தான். ஹரிணி திரும்பிப் பார்த்தாள்.

"நாம கல்யாணம் பண்ணிக்கலாமா நீரேந்தர்...?" என்று கேட்டாள்.

"இனிமேலுமா உனக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது?"

"எஸ்."

"டாக்டர் சொன்ன தொண்ணூறு நாளில் ஒரு நாள் குறைந்து போய் விட்டது ஹரிணி. இன்னும் எண்பத்தொன்பது நாட்கள்தான் இருக்கிறது."

"இன்னும் எண்பத்தொன்பது நாட்கள் இருக்கிறதே என்று நினைத்துக் கொள்ளுங்களேன்!" என்று எதிரில் கிரிதரன் இருப்பதையும் மறந்து நீரேந்தர் அருகில் சென்று அவனை இறுக அணைத்துக் கொண்டாள் அவள்.

# நெருப்பு சுடும்

## விக்கிரமாதித்தனும் வேதாளமும்

கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதா பாத்திரங்கள் அத்தனை பேரும் ஆசிரியையின் இயக்கத்திற்குக் கட்டுப்பட்டு ஆசிரியை அவர்களின் எண்ணப்படியே இயங்குகிறார்கள். அல்லது இயக்கப் படுகிறார்கள். இது குறித்து வாசகர்களின் விமர்சனங்களை வாசகர்களே வாசகர்களின் பெயருக்குத் தபால் மூலமாக அனுப்பிக் கொள்ளுதல் வேண்டும்.

---

கதையினுள் நுழையுமுன் சின்ன அறிமுகம் :

---

விக்கிரமர்த்தித்தன்<br>
& வேதாளம் — அம்புலிமாமா<br>
அசோக்குமார் — வழக்கறிஞர்<br>
ஷீதல் — வழக்கறிஞரின் செயலாளர்<br>
முனுசாமி — நாலாந்தரத் தொழிலில் உயிர் வளர்ப்பவன்<br>
ரிணி, ஸல்மா — கோடம்பாக்கம் ஹாலிவுட்டின் நிரந்தர அபிமானிகள்<br>
அக்னிபுத்ரன் — தொழிலதிபர்<br>
செல்வி அனிதா<br>
திருமதி மைத்ரேயி — தொழிலதிபரின் புத்ரிகள்<br>
கிருஷ்ணகோபால் — தொழிலதிபரின் மருமகப் பிள்ளை<br>
பராசரன் — மிக மிகப் பிரபல கிரிமினல் வழக்கறிஞர்<br>
ராஜசேகரன் — போலீஸ் கமிஷனர்<br>
தன்ராஜ், லோகு, ரவி — நாலாந்தரத் தொழில் செய்யும் நண்பர்கள்<br>
கிருஷ்ணமூர்த்தி — ஹோட்டல் மானேஜர்<br>
ரீட்டா — வரவேற்பறைப் பெண்

தவிரவும் சம்பந்தப்படும் நபர்களின் பெயர்கள் அவ்வப்போது அறிவிக்கப்பட்டு மர்மம் சிதறாமல் ஒரு மணி நேரம் ஆட்கொள்ளும்.

# 1

மனுஷ்ய வாசனையே படாத அமானுஷ்ய இருள். கறுப்பு வானத் திரையில் நட்சத்திரப் பொத்தல்களினுள் சாம்பலாய்ப் படரும் வெளிச்ச நிழல். புஸ் புஸ்ஸென்று ஆரவாரமாக மூச்சு விட்டுக் கொண்டு உலாத்தும் கருநாகங்கள். எங்கோ ஆகாயத்தில் கூவும் சேவல்.

விக்கிரமாதித்தன் தன் நீண்ட வாளை ஸ்திரமாக வலது புறம் உருவி இழையவிட்டுச் சத்தம் கேட்டு நிமிர்ந்து நிற்கும் நாகங்களை உன்னிப்பாய்க் கவனித்துத் தோளின் சுமை பாதங்களில் பாவாமல் உடலின் அசைவுகளில் சமாளித்து நகர்ந்தான். தலைக்கு நேர் எதிர் கோட்டில் முகம் முழுக்கக் கண்களாய் விறுடிக்கும் குறைவான சமயத்தில் காற்றிலும் லேசான இமையைப் பளிச் பளிச்சென இமைத்துக் கலவரப் படுத்தி அச்சம் கொள்ளாத விக்கிரமாதித்தனைச் சபித்துக் கடைசி முயற்சியாய் உரக்க அலறிக் கொண்டு விக்கிரமாதித்தனின் தலையைத் தட்டியது ஆந்தை.

அனிச்சையாய் எதிர் கொள்ளும் இயல்பு வாய்ந்த விக்கிரமாதித்தனின் வாள் அரை சுழற்சி எழும்பி ஆகாயத்தில் வெட்ட, சூடான ரத்தத் துளிகள் முகத்தில் பாய, ஆந்தையின் தலை தூரத்தில் உலர்ந்து போன சருகுகளில் விழுந்தது பெரிய ஓசையாகக் கேட்டது.

விக்கிரமாதித்தன் சலித்துக் கொண்டு இடது புறங்கையால் ரத்தத் துளிகளைத் துடைத்துக் காற்றில் விசிற தோளி[illegible] பாரமனைத்தையும் சட்டெனக் குறைத்து வேதாளம் உய[illegible] பறந்து காடு குலுங்கச் சிரித்தது.



''மனந் தளராத விக்கிரமாதித்தனே! உன் முயற்சிக்கு வாழ்த்துக்கள்......கடைசியாய் ஒரு கதை சொல்லப் போகிறேன்... இதன் முடிவு தெரிந்தும் சொல்லாமற் போனால் உன் தலை ஆயிரம் துகள்களாக வெடித்துச் சிதறும்...''

சாம்பல் ஒளி தடவிய அடர்த்தியான இருட்டில் சிதைந்து போன வேதாள முகத்தின் பற்கள் பளிச்சிட்டன.

காலை முத்தமிட வந்த கருநாகத்தை வாளின் ஒளியில் தூக்கிப் போட்டு விட்டு முகத்தில் புன்னகை மறையாமல் தீர்க்கமாய் வேதாளத்தைப் பார்த்தான் — 'சொல்' என்பது போல.

உடனடியாக வேதாளம் கதையை ஆரம்பிக்கவில்லை. யோசித்தது. விக்கிரமாதித்தனை மடக்க வேண்டும்... எப்படி? எப்படி?

# 2

விண்ட்ஷீல்டுக்கு அப்புறம் உத்தேசமாக அந்தப் பணக்காரக் கட்டடம் நகர்ந்து, தயங்கிப் பின் நின்றபோது மகாராஜா சேவகன் கதவைத் திறந்து பணிவுடன் குனிந்து—

''குட் ஈவினிங்! வெல்கம் யுவர் மெஜஸ்டி!'' என்றான்.

பிரும்மாண்டமான கண்ணாடிக் கதவுக்கு உள்ளே சென்னை வெயிலை மாசு படுத்தும் செயற்கைக் குளிர்பதன வசதி.

அசோக் நுழைவதற்கு முன் கொஞ்சம் தயங்கிக் கண்ணாடியின் ஊடே பார்வையில மேய்ந்தான். முழுக்க முழுக்க அதிகார வர்க்கச் சீராடல்கள் கொஞ்சல்கள் விசாரிப்புகள்.

ஸ்லீவ்லெஸ் ரவிக்கை — தொப்புளுக்குக் கீழ் இறங்கி இன்னும் எந்த நேரமும் கீழே விழுந்து விடுவேன் என்று பயமுறுத்தும் ஷிபான் சேலைகள். பக்கெட் நிறைய மேக்கப்

கரைத்து அபிஷேகித்துக் கொண்ட மனைவிமார்கள். பொருந்தாத லிப்ஸ்டிக். தப்புத் தப்பாய் இங்கிலீஷ்.

தனக்குப் பிறந்தநாள் பார்ட்டி—தலையைக் கனவெட்டாக இடதுபுறம் வெட்டி ஒலியாக்கிக் கொண்டான்.

கதவைத் திறந்ததும் அரையங்குலத்திற்கு குஷன் கார்பெட், நிறையப் பணம் சாப்பிட்டுக் குறைச்சலாய் ஒளிவிடும் சாண்ட்லியர், சீண்டினால் கோபித்துக் கொள்வது போல் நடித்துச் சீண்டலுக்கு விரும்பி உட்படும், மாசக் கடைசியில் வாங்கப் போகும் சம்பளத்துக்காகச் சகித்து அதிலேயே அமிழ்ந்து கொள்ளும் நம்மூர் வரவேற்பறை யுவதிகள், லேசான இளம் வழுக்கை, மூன்று மாதத் தொப்பை சகிதம் சதா தன்னின் சாதனைகளை விளம்பரப்படுத்திக் கொள்ளும் கணவன்மார்கள்—கனவான்கள்.

அசோக்கிற்கு இந்தச் சூழ்நிலையே வெறுத்தது. இவர்களின் எல்லா அங்கமும் நகத்தின் கடைசி நுனிவரை பொய்யென்று தெரியும். சகித்துக் கொள்ள வேண்டும். வருஷத்தில் ஒருமுறை அப்பா — அம்மாவின் சந்தோஷத்திற்காகச் சகித்துக் கொள்ள வேண்டும். வேறு வழியில்லை. அவர்களும் இதிலேயே ஊறியவர்கள். ஆசாபாசங்களே இல்லாத உலகம்.

எப்படி இவர்களுக்கு இரவில் தூக்கம் வருகிறது? நிற்பது, நடப்பது, உட்காருவது, பேசுவது, பழகுவது, சொந்த வாழ்க்கை, பொது வாழ்க்கை, அந்தரங்க வாழ்க்கை, ஆன்மிக வாழ்க்கை அத்தனையும் பொய், பொய்யிலே பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் பூச்சிகள்—பாஸ்டர்ட்ஸ்.

ஹாய் அசோக் கம் யார், விஷ் யூ எ மெனிமோர் ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே.

'தாங்க்ஸ்!' அசோக் உதட்டில் மட்டும் சிரித்தான்.

எனக்குப் பொறந்த நாள்னு நீ ஏன்டா இங்க என்னை வாழ்த்தற சாக்கில் பிரபல்யம் தேடிக்கற? எனக்காகவா



இங்க வந்திருக்க? இல்லே. உன் தொழிலை வளர்த்துக்க. கான்டாக்ட்ஸை வளர்த்துக்க. உன்னைப் பத்திப் பெருமை அடிச்சுக்க.

நட்ட நடு ஹாலில் விஸ்தாரமாக கேக் செய்து நிறைய மெழுகுவர்த்திகள் ஏற்றியிருந்தார்கள். இவன் அதை நோக்கி நகர நகர ஏதோ சாதித்ததைப் போலக் கூட்டம் கைதட்டி ஆரவாரம் செய்தது.

சினிமாவாக இருந்தால் இவன் மனநிலைக்குக் கதாசிரியர் விளக்கம் கொடுக்க அதை டைரக்டர் ஆமோதித்துத் தன் பாணியில் அதை மிகைப் படுத்தி இசையமைப்பாளருக்குச் சொல்லி ட்யூன் போட்டு நைந்து போன தமிழ் வரிகளை ஆர்கனையும் ஸிந்தஸைஸரையும் வைத்துக்கொண்டு பிரமாதமாக ஆக்கிக் காட்டி இவனைப் பாட்டுக்கு வாயசைக்க வைத்திருப்பார்கள்.

இவனுக்காகக் காத்திருந்த அப்பா எல்லார் முன்னிலையிலும் வாஞ்சையாகக் கோட்டின் நுனி கசங்காமல் இறுக அணைத்துக் கன்னத்தில் முத்தமிட, கூட்டம் ஆரவாரிக்க, அம்மா இன்னும் நெருக்கமாகத் தன் பாசத்தை வெளிப்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் பயன்படுத்திக் கொண்டாள்.

இந்த ஒரே ஒரு சந்தர்ப்பத்தைத் தவிர இந்த இரண்டு பேர்களை வேறு எப்போதும் பார்க்க முடியாது. அப்பாவிற்கு பிஸினஸ், பணம், அம்மாவுக்கு லேடீஸ் கிளப், சமூக சேவை. சே! முகத்தில் நடிப்புத் தந்து சிரித்தான்.

மெழுகுவர்த்திகளை ஊதி அணைத்தான்.

பலூன்கள் வெடித்தன.

அபஸ்வரத்தில் எல்லோரும் சேர்ந்து கொண்டு மண்வாசனை துளியும் இல்லாமல் ''ஹாப்பி பர்த் டே டு யூ...'' பாடினார்கள்.

போட்டோகிராஃபர் கிளிக்க அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கேக் ஊட்டினான்.

இதற்காகவே காத்திருந்த குடி மக்கள் பாரை நோக்கி நகர, இவன் கண்ணில் ஷீதல் தென்பட்டாள்.

ஷீதல் இவனின் காரியதரிசி. குடும்பம் பற்றிக் கேட்கக் கூடாது. மூலம் ஆங்கிலோ இந்தியன். வெள்ளை நிறத்தில் அட்டகாசமாய்க் கையில் பொக்கேயுடன் இவனைக் கிள்ளினாள்.

அசோக் சங்கடப்பட்டுப் போனான். தனியாய் இது சகஜம். அப்பா அம்மா முன்னிலையில்? நெளிந்தான்.

''தாங்க்ஸ் என்றான்...

அப்பா காஷுவலாக இவனை நெருங்கி, ''என்னடா காரியதரிசியா காதலரசியா?'' என்றார்...

இவன் சங்கடமாக— ''அதெல்லாம் ஒன்றுமில்லை.''

''ம்... இதெல்லாம் தப்புன்னு சொல்ல மாட்டேன். உன் வயசுல நான் ஊர்ல புழுதி கிளப்பியிருக்கேன். என்ஜாய் லைஃப். பட் மாட்டிக்காத!'' சர்காஸ்ட்டிக்காகச் சொல்லிவிட்டு நகர்ந்தார் அப்பா.

அம்மா இவனை ஷீதல் முத்தமிட்டதைத் தன் குடும்பத்தின் அரிஸ்டோகிராட்டை இயல்பாக வெளிப்படுத்தி இவனின் பணத்துக்காக ஜால்ரா போடும் தோழிகளிடம் சிலாகித்துக் கொண்டாள்.

அசோக்கிற்கு மறுபடி இந்தச் சூழ்நிலை வெறுத்தது. இவன் அப்பா செலவில் ஊரிலுள்ள அத்தனை பேர்களும் காணாதது கண்ட மாதிரி பாரில் ஜானிவாக்கரை முழுங்கிக் கொண்டிருந்தார்கள்.

இவனுக்குக் குடிக்க வேண்டும் போல் இருந்தது. அப்பா இவனைப் பார்வையால் புரிந்துகொண்டு,

''கமான் சைல்ட், ஹாவ் எ பெக்...''

''நோ டாட்... தார்மலி.''

''ஸ்டாப் இட்... இன்னிக்கு ஒரு நாளாவது பொய் சொல்லாத! நான் உன் வயதைத் தாண்டித்தான் வந்திருக்



கேன். என்ஜாய்! உன்னைப் பத்தி எனக்குத் தெரியும்! — கமான்...''

வேண்டா வெறுப்பாக நகர்வது போல் இச்சையுடன் நகர்ந்தான்.

பாரின் முனையில் 'காக் நாக்' இருந்தது. இவனின் பிராண்ட் விலை அறுநூற்று முப்பது ரூபாய் இருக்கும். இவன் பார்வை போன திக்கைப் பார்த்துப் புரிந்து கொண்டு, அப்பா காக் நாக் தருவித்தார். ரெண்டு லார்ஜ்.

''கமான் சியர்ஸ் ஃபார் தி ஹெல்த் ஆஃப் அசோக்...''

பழுப்பு மஞ்சள் நிறத் திரவம் இவன் எதிர்பார்த்ததை விட ஸ்ட்ராங்காக, தொண்டைக் குழியில் விழுந்தோடிக் குடலைத் தகித்தது.

இந்தப் பார்ட்டி முடிந்த பிறகு அப்பாவையும் அம்மாவையும் கண்டுபிடிக்க முடியாது. பாரில் மட்டும் இவனை அன்பொழுக விசாரித்து, அணைத்து, எல்லாம் நடிப்பு. சே! வாட் எ லைஃப்.

''ஆமாம்டா, ஏதாவது சம்பாதிக்கறியா?''—அப்பா கேட்டார்

''விளையாடறீங்களா? ரெண்டு வருஷமா உங்க கிட்ட ஒரு பைசா வாங்காம மெதுவாக முன்னேறி இப்போ சொந்தமாகப் பிரிமியர் பத்மினி வாங்கியிருக்கேன். அம்சமான அபார்ட்மெண்ட்டுக்கு மாசம் ஆயிரம் ரூபா வாடகையாகக் கொடுக்கறேன். ஆபீஸ் நடத்தறேன். என் தொழில்ல முழுக்க முழுக்க என் மூளை மட்டும்தான் மூலதனம். உங்களை மாதிரி தொழிலாளர்களை நம்பியில்ல...''

''சரி, அப்புறம் என் அம்மாகிட்ட ஒரு ரூபா வாங்கின?''

''அது...அது.''

''ஐ நோ. எஞ்ஜாய் மேன்... நான் நிறையச் சம்பாதிக்கறேன். நீ என்னதான் கஷ்டப்பட்டு அழிச்சாலும் இன்னும்

பத்துத் தலைமுறைக்குத் தேறும். அதனால நீ கேட்ட லட்சம் எனக்குப் பெரிசில்லை...''

''யு ஆர் மிஸ்டேக்கன்... அம்மாகிட்ட ஒரு ரூபா வாங்கினது என் ஆபீசை இன்னும் பெரிசுபடுத்தக் கடனாகத்தான் கேட்டேன். பார்ட் பேமண்டா இருபத்து ஐயாயிரம் ரூபா செக் அம்மாகிட்ட திருப்பிக் குடுத்தாச்சு. வேணும்னா கேட்டுக்கங்க!''

''டோண்ட்கெட் எக்ஸைடட்-எதுக்காகச் செலவழிக்காம இருக்கணும். இது எனக்குப் புடிக்கல. இந்தப் பியட்டைத் தூர எறிந்துடு. உனக்காக எஸ். டி. சி. யில் டோயாட்டோ ஒண்ணு புக் பண்ணியிருக்கேன். அதை எடுத்துக்க. வாழ்க்கையைத் தாராளமா அனுபவி! ஹேவ் அனதர் லார்ஜ்...?'' சொல்லிவிட்டு அருகே வந்த தோழருடன் தனியாகப் பேசப் போய்விட்டார். இப்போது ஹாலின் ஒளி இன்னும் குறைந்து எங்கிருந்தோ மெலிதாய் ஜாஸ் ஒலி தவழ ஆரம்பித்தது.

வயதான இளைஞர்கள் ஜோடி ஜோடியாய் நடனமாடினார்கள்.

இவனும் மெதுவாக மையப் பகுதியை நோக்கிக் கொஞ்சம் தடுமாறி நகர்ந்தான். ''காக்தாக்'' சிறு மூளையை இம்சைப்படுத்த ஆரம்பித்து அது செயலிழந்திருந்தது.

இவனோடு ஆட அப்ஸராசாக ஒருத்தி தானாக வலிய முன் வந்தாள். வெள்ளையாய் வழுக்கும் இடையைத் தேவைக்கு மேலேயே கீழிறக்கி—

இவனும் ஆடினான்.

எல்லாம் முடிந்து அப்பாவும் அம்மாவும் இவனை வீட்டுக்குக் கூப்பிடுவது கேட்டது. இவன் குழறிக் கொண்டே நான் என் அபார்ட்மெண்ட்டுக்குப் போறேன என்றான. இவனுக்கே இவன் குரல் அந்நியமாகப்பட்டது. அப்போது எதிரில் வந்து நின்றாள் ஒரு பெண்.

''உன் பெயரென்ன''



"GHEE — THAA..."

''நான் என்ன மளிகைக் கடைக்காரனா—நெய்யெல்லாம் தாறுக்கு!''

''நாட்டி... நான் என் பேர் சொன்னேன், கீதா Githa...''

''என் கூட என் அபார்ட்மெண்டுக்கும் வரியா?''

ஒரு கணம் யோசித்து, ''வித் ப்ளஷர்!'' என்றாள்.

பார்ட்டி ஹாலை விட்டு மெதுவாகக் கழன்று காரில் எதிரிப்படில் உயர்ந்து அபார்ட்மெண்ட் கதவைத் திறந்து ஸ்டீரியோவைச் சின்னதாய்ச் சுழலவிட்டுக் கீதாவுடன் மெலிதான இருட்டில் படுக்கையறைக்கு நகர்ந்தான்.

# 3

''ஹாண்டஸ் அப்...''

கைகளை உயரத் தூக்கினான். முகத்தில் பயமில்லை. அலட்சியம் இருந்தது. விவரம் இருந்தது. விவேகம் இருந்தது.

''உனக்கு என்ன வேணும்?''

''நீ புத்திசாலியா இருந்தா கறுப்பு ஃபைல். முட்டாளா இருந்தா உன் உயிர்.''

''நான் புத்திசாலி. கறுப்பு ஃபைல் அடுத்த ரூம்ல என் பெட்டிக்குள்ள இருக்கு. போய் எடுத்துக்க.''

''முடியாது! நீயே போ. பின்னால நான் வரேன்.'' போனான். துப்பாக்கிக்காரன் அவனின் ஒவ்வொரு அசைவுகளையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே அவன் பின் சென்றான். சின்ன ப்ரீஃப்கேஸைத் திறந்து ஃபைலை எடுத்துத் துப்பாக்கிக்காரன் கையில் திணிக்கும் சமயம் துப்பாக்கிக்காரன் உணர்ச்சி வசப்பட்டு சற்றே பரவசப்பட்ட தருணம் இவனுக்குப் போதுமானதாக இருக்க அடி வயிற்றில் பலமாகக் காலால் உதைத்தான்.

துப்பாக்கிக்காரன் பூமியிலிருந்து சற்றே பெயர்ந்து எகிற—அதே விநாடி இவனும் சற்று எகிறிக் காலால் அவன் துப்பாக்கியை இடற முற்பட, 'டுமில்' துப்பாக்கி வெடித்தது.

சன்னமான இருட்டில் சின்னச் சிவப்பு வெளிச்சம் தெரிய விரல்கள் டேபிளின் மீது நகர்ந்து ரிமோட் கண்ட்ரோல் பெட்டியின் மேட்டில் ஒன்றை அழுத்தித் தடவ ஐம்பதோரு சென்டிமீட்டர் கலர் திரையில் துப்பாக்கிக்காரனும் ஹீரோவும் அப்படியே அசையாமல் அந்தரத்தில் நின்றார்கள்.

அசோக் வீடியோவிலிருந்து கண்களை நகர்த்தாமல் இண்டர்காமை உருவி எடுத்தான்.

''யெஸ் ஷீதல்...''

''உங்களைப் பார்க்க மிஸ்டர் அக்னிபுத்ரன்னு ஒருத்தர் வந்திருக்கார்—''

''அப்பாயிண்ட்மெண்ட் வாங்கியிருக்கிறாரா?''

''இல்லை.''

''சரி, அப்போ நாளைக்கு... (யோசித்தான்) சரி, இப்பவே உள்ள விட்டுடு...''

''யெஸ் பாஸ்.''

அசோக் வீடியோவின் உயிரழித்து ஃபில்டர் வில்ஸாக்கு உயிரூட்டியபோது நாகரிகமாய் கதவை இரண்டு முறை தட்டிவிட்டு, ஆறடி உயரத்தில், சற்றே நரைத்திருந்த அடர்த்தியான ஜிப்பா தலையுடன், முகத்தில் பிரதானமாக நெற்றி துலங்க, தங்க மெட்டாலிக் ஃப்ரேமுக்குள் சற்றே பெரிய விழிகள் நைச்சியமாய்ப் பிதுங்க, வேகமாய் ஆரம்பித்துச் சட்டென்று முடிந்து போன மூக்குக்குக் கீழே ராஜாங்க மீசையோடு, பட்டில் ஜிப்பா ஷெர்வானி அணிந்து, நிறையப் பணக்காரத்தனத்தோடு, இன்னும் நிறைய நிஜமான வாசனை சென்ட்டோடு, இவனை நோக்கிக் காரியம் கருதிப் புன்னகைத்து அறிமுகப்படுத்திக் கொண்டு, சொன்ன பிறகு நாற்காலியில் அமர்ந்தார்.



அசோக் இன்னுமொரு முறை பார்வையை அவர் மீது அலைய விட்டு மெதுவாகக் கேட்டான்.

''யு ஆர் வெல்கம்... என்கிட்டேயிருந்து என்ன எதிர்பார்க்கறீங்க...?''

''சின்ன உதவி.''

''ம்... சொல்லுங்க.''

அக்னிபுத்ரன் ஜிப்பா பாக்கெட்டிற்குள் கையை நுழைத்து, நன்றாகக் கத்தரித்து ஒன்றன் கீழ் ஒன்றாக அடுக்கப்பட்ட தினசரி செய்தித் துண்டுகளை நுனியில் ஸ்டாப்ளர் பின்னால் இணைத்து இவனிடம் நீட்டினார்.

இவன் கண்களை உலவ விட்டான்...

கோடம்பாக்கத்தில் அழகி கொலை

வாலிபர் கைது!

சென்னை கோடம்பாக்கத்தில் பெண்கள் விடுதியில் வசிக்கும் அழகி ஸல்மா; இவர் சினிமா உப நடிகர்கள் சங்க உறுப்பினர். காளி, சகல கலா வல்லவன், பாயும் புலி உள்பட நிறையப் படங்களில் உபநடிகையாக நடித்து வந்தவர். நேற்று முன் தினம் அதாவது சனிக்கிழமை இரவு சுமார் பன்னிரண்டு மணிக்கு இவர் மர்மமான முறையில் மெரினா கடற்கரையோரம் செத்துக் கிடந்தார்.

முதலில் உடல் இருந்த நிலையில் அழகி ஸல்மா கடலில் குளிக்க முயற்சித்து மூழ்கிக் கிடந்தது போல்தான் தெரிந்தது. நேரில் முதலில் பார்த்த சுண்டல் கடைக்காரர் யூசுப் முகமதுவின் தகவலின் பேரில் போலீசார் புலன் விசாரித்ததில் முனுசாமி என்கிறவரை இந்தக் கொலை சம்பந்தமாகக் கைது செய்திருக்கிறார்கள். போலீஸ் கமிஷனர் ராஜசேகரன் இந்தக் கொலையைத் தானே நேரில் விசாரிக்கிறார்.

''வெல் ... இந்தக் கட்டிங்கைப் பார்த்தேன். உங்களுக்கும் இந்தக் கேஸுக்கும் என்ன சம்பந்தம். இதுல யாருக்காக நான் ஆஜராகணும்?''

''நன்னு படிச்சுப் பாத்தீங்களா?''

''ம்... உங்களுக்கும் இந்தக் கேசுக்கும் சம்பந்தம் இருக்கிற மாதிரி உங்க தோரணைலேந்து தெரியல. இதுல போட்டுருக்கறுப்பில கோடம்பாக்கம் அழகிக்கும் உங்களுக்கும் தொடர்பு இருக்கிற மாதிரித் தெரியல. யு லுக் டீஸெண்ட். அதே மாதிரி முனுசாமி பிக்பாக்கெட் வழிப்பறி பண்ணிக் காசு சம்பாதிக்கிற ஆசாமி...''

அசோக் தொடர்ந்து தமிழில் பேச வார்த்தை தேடினான்.

''ஐ மைசெல்ப் கம் டு த பாயிண்ட். நீங்க கொஞ்சம் துப்பறியணும். துப்பறிஞ்ச விவரத்தை ரகஸ்யமா எங்கிட்ட மட்டும் சொல்லணும். என் குடும்ப கௌரவம் இதுல சாம்பலாகியிருக்கு...''

''ஐ யாம் ஸாரி ஸார். என் தொழில் வாதாடறது தான். துப்பறிவதெல்லாம் என்னால் முடியாது. அதுக்குன்னு ஏஜென்ஸீஸ் நிறைய இருக்கு மெட்ராஸ்ல. யு ப்ளீஸ் அப்ரோச் குளோப் டிடக்டிவ் ஏஜென்ஸி.''

''எனக்கும் தெரியும். அதுல சிக்கல் இருக்கு. மெட்ராஸ்ல என்ன? இந்தியாவில் இருக்கிற அத்தனை பெரிய மனுஷங்களும், குறிப்பா நீதித் தொழில் சம்பந்தப்பட்ட அத்தனை பேரும் என் நண்பர்கள். என் ஃபாமிலி விஷயம் வெளியே தெரியறதுல எனக்கு விருப்பம் இல்லை. உங்களைப் பத்தி கேள்விப் பட்டிருக்கேன். என், மஜூம்தார் வெர்ஸஸ் டேட் கவர்ன்மெண்ட் கேஸ்க்கு நீங்க கோர்ட்ல வாதாடினதை ஒரு நாள் பார்த்திருக்கேன். ஐ பிலிவ் யூ — என்ன காசை கேட்டாலும் கொடுக்கத் தயாராயிருக்கேன்.''

அசோக் யோசித்தான். துப்பறிவது எல்லாம் இவனைப் பொறுத்தமட்டில் புத்தகங்களில் மட்டுமே படிக்கக் கூடியது.



இதுவரை செய்ததில்லை. வொய் காண்ட் வி டேக் அப் திஸ் கேஸ்... குட் ஆப்பர்சூனிட்டி.

''ஓ. கே... உங்க குடும்பத்துக்கும் இந்தக் கொலைக்கும் என்ன தொடர்பு? இதுல எந்த விஷயத்துல நீங்க பாதிக்கப் படறீங்க?''

''தாங்க்யூ...சுருக்கமாச் சொல்றேன். என் பெயர் அக்னி புத்ரன். எனக்குக் கோயம்புத்தூர்ல நாலு காட்டன் மில்ஸ் இருக்கு. இங்க சிட்டியில் எலக்ட்ரானிக்ஸ் ஸ்பேர் பார்ட்ஸ் பண்ற தொழிற்சாலை இருக்கு. ரெண்டு பொண்ணுங்க. பேப்பர் கட்டிங்கைப் படிச்சிருப்பீங்க! முனுசாமி அந்தக் கொலையைத் தான் செய்யல. கே. ஜி. ங்கற ஒரு ஆசாமிதான் செய்திருப்பான்னு சொல்றான் — என் மாப்பிள்ளை பேரு கிருஷ்ண கோபால் — கே. ஜி. ன்ற இன்ஷியல்லதான் எல்லோரும் அவனைக் கூப்பிடுவோம் — குறிப்பாகக் கொலை நடந்த அந்த நாள்லேந்து என் மாப்பிள்ளை வீட்டுக்கு வரல— கொலை நடந்து ஒரு வாரமாயிடுத்து — இன்னும் வீடு திரும்பல...''

அசோக் சுறுசுறுப்படைந்தான்.

''நாட்டுல ஆயிரம் பேர் கே. ஜி. ங்கற இன்ஷியல்ல இருப்பாங்க. நீங்க ஏன் உங்க மாப்பிள்ளையைச் சந்தேகப் படணும்? வீட்டுக்குச் சொல்லிக்காம கொள்ளாம அவர் ஊருக்கோ அல்லது வெளியிலோ சுத்தறது இதுதான் முதல் தடவையா...?''

''அப்படிச் சொல்ல முடியாது. என் மாப்பிள்ளை எலக்ட்ரானிக்ஸ் இஞ்ஜினீயர். என் பெண்ணைப் பணத்துக்காகக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணினான். ரொம்ப ரொம்ப அழகாயிருப்பான். ஆனா அழகுக்கேத்த குணம் கிடையாது. செத்துப் போன 'ஸல்மா'வை ஒரு நாளைக்கு என் பிஸினஸ் பார்ட்டிக்கு டான்ஸ் ஆடக் கூப்பிட்டிருந்தேன். அப்போலேந்து ஒரு வேளை கிருஷ்ண கோபாலுக்கும் அவளுக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கணும் — கிருஷ்ண கோபால் பொம்பளை

விவகாரங்களில் ரொம்ப ஈடுபாடுள்ளவன். என் பொண்ணு கிட்டேயிருந்து பணம் கறந்துண்டு ஊரெல்லாம் மேய்ஞ்சிண்டு இருந்தான். ராதர், இருக்கான். இந்தக் கேஸ்ல மாட்டின்ருப்பானுன்னு சந்தேகப்படறேன். என் பொண்ணும் அவன் கிட்ட சுகமாயில்லே. என் கிட்ட பொய் சொல்ருள். கிருஷ்ண கோபால் அவன் கிட்டே ப்ரியமாத்தான் இருக்கான்னு பொய் சொல்ருள். எனக்கு ஒரு பாயிண்ட் தெரிஞ்சாகணும். இவன் தான் கொலே பண்ணியிருக்கான்னு போலீஸ் கண்டு பிடிக்கறதுக்கு முன்னடி முதல்ல நீங்க கண்டு பிடிச்சுட்டால், விவாகரத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டு என் பொண்ணே ஸ்டேட்ஸுக்கு அனுப்பிச்சிடுவேன். என் பொண்ணுங்க பேரெல்லாம் பேப்பர்ல அடி படறதை நான் விரும்பல. எவ்வளவு செலவானலும் சரி..."

"ம்... இண்ட்ரஸ்டிங்...?"

"என்ன சொன்னீங்க?"

"நத்திங் ஸ்பெஷல்! இண்ட்ரஸ்டிங்னு சொன்னேன். சரியா கொலே நடந்த அன்னிலேந்து உங்க மாப்பிள்ளேயைக் காணும். இதுக்கு முன்னடி அவர் இது மாதிரி எப்பொழுதாவது செய்திருக்காரா...?"

"அடிக்கடி சொல்லிக்காமல் கொள்ளாமல் தொலேஞ்சிடுவான். ஆனு கரெக்டா போன் பண்ணி என் பொண்ணுகிட்ட வார்த்தையில் கஞ்சா தடவிப் பேசி மயக்கிடுவான். என் கம்பெனியை நிர்வகிக்கிற பொறுப்பை அவன் கிட்ட கொடுத்தேன். தேவையில்லாத உதாரணம் எல்லாம் சொல்லி தட்டிக் கழிச்சுட்டான். வெளியில எல்லார் கிட்டேயும் கன்ஸல்டண்ட் ஆக இருக்கிறதா சொல்ருன். இவன் சொல்றதை யெல்லாம் நம்பவும் முடியல. நம்பாம இருக்கவும் முடியல..."

"குட். கடைசியா கே.ஜி.யை நீங்க எப்பப் பார்த்தீங்க?"

"சரியா பத்து நாள் கழிஞ்சு, இன்னிக்குப் பதினென்னவது நாள்..."



"இந்தக் கேஸை எடுத்துக்கறதுக்கு முன்னடி ஒரு விவரத்தைத் தெரியப்படுத்திடறேன். நான் கண்டுபிடிக்கிற விவரங்களே உங்களுக்கு மாத்திரம் தெரிவிக்க மாட்டேன். உடனடியாகப் போலீஸுக்கும் இன்பார்ம் பண்ணிடுவென்—

மைனஸ் உங்க ஃபாமிலி விவகாரம் — இதுக்குச் சரின்னு எனக்கும் சரி."

அக்னிபுத்ரன் முகத்தில் சற்றே கலவரம் ஆரம்பித்துப் பின் மறைந்தது...

"வெல்... இட்ஸ் ஓ.கே... உங்க ஃபீஸ்..."

"வாசல்ல மிஸ் ஷீதல்னு செகரட்டரி இருப்பா. அவ கிட்ட கொடுத்துடுங்க. நான் உங்க வீட்டைப் பார்க்கணும். முக்கியமா உங்க மாப்பிள்ளே கிருஷ்ண கோபால் இருக்கிற இடத்தை. அப்புறம் உங்களோட மகள்கிட்டக் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு. எப்ப வரலாம்...?"

"எனி டைம்...? இப்ப வர்றீங்களா... சாயந்திரம் ஒரு நாலு மணி சுமாருக்கு வரேன்..."

"தாங்க்யூ."

அக்னிபுத்ரன் தன் விஸிட்டிங்கார்டை இவனுக்கு நீட்ட— வாங்கிக் கொண்ட பின், நிதானமாக எழுந்து வாசல் பக்கம் போனர்.

சின்னச் சதுரக் கண்ணடிக்கு அந்தப் பக்கம் ஷீதலுடன் பேசுவது தெரிந்தது. சத்தமில்லாமல் சட்டையைச் சரி செய்து கொண்டு கண்ணடிக்கு அருகில் நின்று கவனித்தான்.

அக்னிபுத்ரனின் நடையுடை பாவனைகளில் லேசாகப் பதற்றம் தெரிந்தது. ஷீதலிடமிருந்து அவர் விலகியதும் இவன் கதவை ஓசையிடாமல் திறந்து பேச முற்பட்ட ஷீதலைத் தவிர்த்து வராண்டாவின் கோடியில் பதித்திருக்கும் பிரும்மாண்ட ஜன்னலைப் பார்க்க விரைந்தான்.

இருபத்தைந்து அடிக்குக் கீழே தூய வெள்ளையில் மெர்ஸிடிஸ் பென்ஸ் ஊர்வது தெரிந்தது.

திருப்தியுற்றவனாக மறுபடி தன்னறைக்குத் திரும்பி சிகரெட் பொருத்திக் கொண்டான். ஷீதலைக் கூப்பிட்டான்.

''லிஸன் ஷீதல்! முதல் தடவையா டிடெக்டிவ் வேலை பண்ணப் போறேன், நீ என்ன பண்ற, இருபத்து நாலு மணி நேரமும் ஆஃபீஸிலேயே இருக்கே. எனக்கு வர்ற போன்களை அட்டெண்ட் பண்ற. சரியா ஆஃபீஸ் நேரம் முடிஞ்சதும் வாசல் கதவை மூடிட்டு என் ரூமுக்கு இருக்கிற பக்கக் கதவை யூஸ் பண்ற. வில் யூ...''

''வித் ப்ளெஷர் ஸார்.''

''தட்ஸ் குட். வீட்டுக்கு இன்பார்ம் பண்ணிடட்டுமா?''

''டஸன்ட் மேட்டர். நானே போன் பண்ணிச் சொல்லிடறேன்.''

''தட்ஸ் குட்.''

பதினைந்தே நிமிடங்களுக்குப் பின்...

விஸிட்டிங் கார்டைப் பார்த்துக் கொண்டே...

என். அக்னிபுத்ரன்,
35, லீவியூ ரோடு,
போயஸ் கார்டன்,
சென்னை......

வெள்ளை ஃபியட்டில் அமர்ந்தான். கார் மெதுவாகக் கறுப்புத் தார் ரோடைச் சாப்பிட்டுக் கொண்டு ரோட் ஓரம் நகரும் கலர்களை ரசித்துக் கொண்டு போயஸ் கார்டனைப் பார்க்க ஊர்ந்தது...

## 4

முப்பத்தைந்து, லீவியூ ரோடில்



'ஹாப்பி காட்டேஜ்' என்று பித்தளையில் ஒட்டிப் பெரிசாய்க் கதவு சாத்தியிருந்தார்கள். மூன்றாவது ஹாரனுக்குப் பிறகு கூர்க்கா வெளியே எட்டிப் பார்த்து இவனை விசாரித்தான். சற்றே தயக்கத்துடன் கதவு திறந்தபோது விஸ்தாரமான புது மாளிகை தெரிந்தது. இடது புறத்தில் பாத்தி கட்டிப் புல் வளர்த்திருந்தார்கள். நடுவில் குட்டி பவுண்டன். சரளமாய் வழியும் காண்க்ரிட் சாலையின் முனையில் நவீன கட்டடம்.

அனாவசியமாகப் பெரிய டிராயிங் ரூம். இவன் நுழைந்ததும் அட்டகாசமான தோற்றத்துடன் பட்லர் உடையுடன் ஒருவன் இவனருகில் வந்து, ''வெல்கம் மிஸ்டர் அசோக்!'' என்றான்.

''என் பெயர் உனக்கெப்படித் தெரியும்?''

பட்லரின் முகம் லேசாய்ச் சுருங்கிப் பின் சுதாரித்து— ''மிஸ்டர் அக்னிபுத்ரன் சொன்னாரு.''

''அக்னிபுத்ரன் உன்னை எப்படிப் பாத்திருக்க முடியும்? இப்பதான் அரை மணி முன்னாடி அவரைச் சந்திச்சேன். நிச்சயமா என்னைப் பார்த்துட்டு நேரா வீட்டுக்கு வந்திருக்க முடியாது. எதுக்கும் இருக்கட்டும்னு உள்ளார ஒரு வாட்டி பார்த்துட்டுதான் வரேன். கார் வேற இல்லை.''

இப்பொழுது பட்லரின் முகத்தில் சல்லிசாய் நகை அரும்பியது. 'ஐ திங்க்...' (இங்கிலிஷில் ஆரம்பித்து நிறுத்திக் கொண்டு தமிழில் தொடர்ந்தான்.) தப்பா கணக்குப் பண்றீங்க, போன்ல சொன்னாரு...''

''இங்க பட்லரா தானே இருக்கே. உன்கிட்ட எதுக்குச் சொல்றாரு? வீட்டில பெரியவங்க இல்ல?''

''யூ ஆர் ரைட். நான் சமையல்காரனாத்தான் இருக்கேன். அகஸ்மாத்தா போன் அடிச்சது. எடுத்தேன். அனிதா அம்மா இருக்காங்களான்னு கேட்டாரு. இல்லேன்னேன். சரி, வந்தாச் சொல்லுன்னு விஷயத்தைச் சொன்னாரு...'

''அனிதா கிட்டயா சொல்லச் சொன்னரு...?''

''ஐயாம் ஸாரி. மைத்ரேயி அம்மாட்ட சொல்லச் சொன்னரு. நீங்க கேள்வி கேட்கிற தோரணை என்னைக் கொஞ்சம் சந்தேகிச்சிடுத்து...''

''சரளமா இங்கிலீஷ் வரது. கான்வெண்ட்ல படிச்சியா; ஸாரி, படிச்சீங்களா...?''

''பரவாயில்ல. ஒருமையிலேயே கேக்கலாம். காட்டரிங் படிக்கல. ஆனா சமையல் தெரியும்...''

''ட்ரெஸ் போட்டிருக்கியே தவிர உன்னைப் பார்த்தா சமையற்காரன் மாதிரித் தெரியலயே...? ஹான்ட்ஸம்மா இருக்கே...''

''தாங்க்ஸ்...நான் பி. ஏ. இலக்கியம் படிச்சிருக்கேன். கவிதை எழுதறதுல இன்ட்ரஸ்ட். இந்த வேலைல நிறைய சாவகாசம் இருக்கு...அதனால...''

''போதும்... மிஸஸ் மைத்ரேயியைப் பார்க்கலாமா...?''

''ஸாரி. நிக்க வச்சிட்டே பேசறேன். வாங்க, உட்காருங்க. மேல அம்மா தூங்கிட்டு இருக்காங்க. சொல்லி அனுப்புறேன். என்ன சாப்பிடறீங்க, கூல்...ஆர்...ஹாட்...?''

''கூல்......''

நட்சத்திர முறைப்படி தலை குனிந்து நகர இருந்தவனைத் திரும்பக் கூப்பிட்டான்.

''உன் பெயர்...?''

''ஜானி—'' சொல்லிக் கொண்டே இவனின் பார்வையிலிருந்து மறைந்தான்.

அசோக் டிராயிங் ரூமைப் பார்வையில் மேய்ந்தான். இவனைச்சுற்றிப் பெரிய வட்டத்தில் குஷன்கள். மேலே ஸீலிங் முழுதும் ராட்ஷஸ சாண்ட்லியர்கள். மூலையில் கலர் வீடியோ செட்...ஓரத்தில் கண்ணாடி அலமாரியில் சிற்பங்கள்... இடது புறச் சுவரில் வண்ணங்களின் சிதறல்கள். பகீரதன் சிவபெருமானோடு பேசிக் கொண்டிருந்தார். இன்னும் பார்வையை அலைய விட்டான். அறையின் மூலையில் அலுமினியப் பிரேமுடன் மாடிப்படி தென்பட்டுக்கொஞ்ச தூரத்தில் மேல் நோக்கி எழும்பி நிலைத்தது.



கழுத்திற்குப் பின்னால் சுட்டது. யாரோ பார்க்கிறாற் போல அனிச்சை உணர்வு. சட்டென்று திரும்பினான்.

பிரமாதமான உயரத்தில் சல்வார் கம்மீஸில் பளாத்தின் நெடி உடம்பில் தெரிய வசீகரமாய் ஒருத்தி இவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இவன் திரும்பியதும் இவனைப் பார்த்து முறுவலித்தாள். நெருங்கினான்.

''வெல்கம் மிஸ்டர் அசோக்.''

அசோக் குழம்பினான். முன் பின் பார்த்திராத பட்லர் ஜானி தன் பெயர் சொல்கிறான். ஏறக்குறைய ஒளிந்திருந்து என்னை எடை போடும் இவள் என் பெயர் சொல்கிறாள். யாராக இருக்கும். மைத்ரேயி கிருஷ்ண கோபாலாகத்தான் இருக்க முடியும்.

கல்யாணமாகி நான்கு வருடங்களை எட்டியிருந்தாலும் இன்னும் இளமையாகவே இருக்கிறாள். இருபதுக்கு மேல் சொல்ல முடியாது. க்ளெவர் - இவனும் புன்னகையைத் தேக்கி சர்கஸ்டிக்காக, ''கொஞ்சம் வயசாகி யிருப்பீங்கன்னு நினைச்சேன்...பட் யு லுக் டு யங்...'' என்றான்.

''காம்ப்ளிமெண்ட்டா? தாங்க்ஸ்...உங்களைப் பத்தி நிறையக் கேள்விப்பட்டிருக்கேன். ஒரு தடவை டி. வி.யில கூட டிஸ்கஷன்ல கலந்துண்டீங்க இல்ல...?''

''நல்ல மெமரி பவர்...''

''தாங்க்யூ, அசெய்ன். முதல்ல என்ன சாப்பிடறீங்க...?''

''சாப்பிடறதை அப்புறம் கவனிக்கலாம். முதல்ல தொழில், கிருஷ்ண கோபாலைப் பத்தி என்ன நினைக்கிறீங்க...? அவர் கேரக்டர் ... பர்ஸனாலிட்டி...பழகற விதம் எல்லாம் கொஞ்சம் சொல்லுங்க...''

''நிறையவே சொல்றேன். ஆறடி இரண்டங்குலம் உயரம். குறைந்தது எண்பது கிலோ வெயிட். ரோடுல நடந்து போனா எந்தப் பொண்ணுயிருந்தாலும் ஒரு வாட்டி திரும்பிப் பார்த்துப் பொறுமைப் படற மாதிரி அழகு. எப்பவும் இங்கிலீஷ் கலந்து பேசற விதத்துல எல்லாரும் விழுந்துடுவாங்க—நிறைய கேர்ள் ஃப்ரெண்ட்ஸ் — ரொம்ப. நிறையப் பணம், அடிக்கடி வீட்டுக்கு ரெண்டு மூணு நாள் வர மாட்டாரு. பட், போன் பண்ணுவாரு. பிஸினெஸ் பீல்டுல மாட்டிண்டுட்டேன் ஸாரிம்மானுடுவாரு. இந்தத் தடவை ஐ திங்க் இதுதான் முதல் தடவை ஒரு வாரம் தொடர்ந்து காணாமல் போறது. போனும் காணோம். எதுவும் வரல...ம்! ஹௌ எபௌட் எ கூல் பியர்...?''

''குட். ஐ வெல்கம் இட். தொடர்ந்து விஷயத்துக்கு வரலாம். ஒரு வாரம் முன்னாடி, அதாவது பதினேழாம் தேதி—எத்தனை மணிக்கு இங்கேயிருந்து கிளம்பினார்? எங்க போகப் போறதாச் சொல்லிட்டுப் போனார்...? என்ன சட்டை என்ன பேண்ட் போட்டுண்டிருந்தார்...?''

''ஒரு நிமிஷம்...'' என்று சொல்லிவிட்டு இவனின் ஆமோதிப்பை எதிர்பார்க்காமல் உள் பக்கமாகப் பார்த்துக் கத்தினாள். ''ஜானி...ஜானி, எங்க தொலைஞ்சே? அப்பா ஃப்ரிஜ்லேருந்து பியர் கொண்டு வா. சீக்கிரம்...'' மறுபடி இவன் பக்கம் திரும்பி ஸ்நேகமாகச் சிரித்து—''என்ன கேட்டீங்க? பதினேழாம் தேதி காத்தால எங்கூடத்தான் டிபன் சாப்பிட்டார். வழக்கம் போல எங்க போறேன், எப்ப வருவேன் எதுவும் சொல்லலை...ப்ளே பாய் ஜோக் சொன்னாரு... சொல்லட்டுமா?''

''வேண்டாம், எங்கிட்டயே ஸ்டாக் நிறைய இருக்கு. விஷயத்துக்கு வாங்க...''

''மெருன் கலர் பாண்ட் போட்டிருந்தாரு. வெள்ளையில் சிவப்புக் கட்டம் போட்ட ஸ்போர்ட்ஸ் டி ஷர்ட் போட்டிருந்தாரு. உத்தேசமா ஏழரை மணிக்குக் கிளம்பினார். ஆமாம், அந்தப் பொண்ணு பேரென்ன? ஸல்மா. அவளை இவர்தான் கொலை பண்ணியிருப்பாருன்னு சந்தேகப் படறீங்களா?'' சற்று உரக்கவே கேட்டாள்.



''அனிதா, வில் யூ ஷட் அப்? உன் வேலையைப் பாத்துண்டு போக மாட்டே? ஏன் எல்லார் விஷயத்துலயும் மூக்கை நீட்டற...?''

அசோக் முதல் தடவையாக அதிர்ந்தான். இவ்வளவு நேரம் தான் பேசிக் கொண்டிருந்தது கிருஷ்ண கோபாலின் மனைவி மைத்ரேயியிடம் இல்லை. அவளின் தங்கை அனிதாவிடம்—தலையைச் சிலுப்பிக் கொண்டான். குரல் வந்த திக்கில் பார்வையைச் செலுத்தினான்.— இருபத்தைந்திலிருந்து இருபத்தெட்டிற்குள் — சற்றே மும்தாஜ் (நடிகை) சாயலில் கறுப்பு ஷிஃபானில் சிவப்பு உடல் காம்பினேஷனில் மாடிப் படிக்கட்டுகளில் இறங்கி மைத்ரேயி கிருஷ்ண கோபால் இவனை நோக்கி வந்தாள்.

இவன் கிருஷ்ண கோபாலிடம் மயங்கியிருக்க வேண்டுமென்றால் கிருஷ்ண கோபால் நிச்சயமாக அவுட் ஸ்டாண்டிங் பெர்ஸனாலிடியாகத்தான் இருந்திருக்க வேண்டும். தேவதையாய் மனைவியை வைத்துக் கொண்டு இவ்வளவு சொத்து சுகங்களை வைத்துக் கொண்டு கிருஷ்ண கோபால் ஏன் இப்படி ஆலாய்ப் பறந்திருக்கிறான்?

''நமஸ்தே...'' கை கூப்பினாள்.

இவனும் எழுந்து நின்று கைகூப்பினான்,

''ஸாரி – முதன் முதலா உங்களைப் பார்க்கும்போது சத்தம் போட்டுண்டே வந்துட்டேன். ஐயாம் வெரி ஸாரி. இவ யாராவது வீட்டுக்கு வந்தா குறுக்க பாய்ந்து அறுத்துத் தள்ளிடுவா. ஏதாவது பிளேபாய் ஜோக் சொல்லியிருப்பாளே...?''

''சேச்சே! ஷீ வாஸ் சீரியஸ்...'' சொல்லிக் கொண்டே அனிதாவைப் பார்த்தான். அவளின் பதில் முகப்பிரதிபலிப்பில் தாங்க்ஸ் இருந்தது.

''எக்ஸ்க்யூஸ் மி. சம்பிரதாயமா பேசி நேரத்தை வேஸ்ட் பண்ண வேணும்னு பார்க்கறேன். ப்ளீஸ் பீ ஃபார்மல். உங்கள் கணவர் மிஸ்டர் கிருஷ்ண கோபால் பத்தி உங்களோட சொந்த அபிப்ராயத்தைச் சொன்னீங்கன்னா உங்களுக்கு உதவி பண்றதுக்கு எனக்கு உதவியா இருக்கும்...''

''உங்களுடைய அணுகு முறை எனக்குப் பிடிச்சிருக்கு... டு பீ ஃப்ராங்க் வித் யூ... ஐ லவ் ஹிம்! நான் காதலிச்சுதான் கல்யாணம் பண்ணிண்டேன். அவர் என்னை ஏமாத்திட்டு என்னோட பணத்துக்காகத்தான் கல்யாணம் பண்ணிண்டாரு. அப்படீன்னு அப்பா உங்ககிட்ட சொல்லியிருப்பாரு. யு நோ, அவர் ரோடுல நடந்து போனா எந்தப் பொண்ணுக்கும் அவர் மேல சபலம் தட்டும். ஸோ, இயல்பா அவர் மூவ் பண்றது தப்புன்னு எனக்குப் படல. அதுல அப்பாவுக்கு என்கிட்ட கோபம். அப்பாவோட பிஸினசைப் பார்த்துக்கிற ஸ்ரீவத்ஸனை, நான் கல்யாணம் பண்ணிக்கணும்னு அப்பா நினைச்சார். ஸ்ரீவத்ஸன் எங்க அப்பா பிசினெஸெல்லாம் பொறுப்பா பார்த்துக்கிறான்.

''ஆனா எனக்கு இவரைத்தான் பிடிச்சது. இவர் நம்பற மாதிரி அழகாகப் பொய் சொல்லுவார். ஏமாத்தறார். பொண்ணுங்ககூடப் பழகறார். ஆனாலும் ஐ ஸ்டில் லைக் ஹிம் அண்ட் லவ் ஹிம். நான் எதேச்சையா நேத்திக்குதான் பேப்பர் பார்த்தேன். கொலை செஞ்சது கே. ஜி. ன்னு இனிஷியல் உள்ள ஆள்தான்னு அதுல போட்டிருந்ததைப் பார்த்தப்புறம் கொஞ்சம் ஆடிட்டோம். நான் நிறையவே ஆடிப் போயிட்டேன். ஏன்னா எல்லாரும் அவரை கே. ஜி... கே.ஜி...ன்னுதான் எங்க வீட்ல கூப்பிடுவோம்...''

பேசிக் கொண்டே இருந்தவள் கண்களில் யாரையோ வியப்புடன் வரவேற்பது தெரிந்தது. அசோக் திமிர்ந்து உட்கார்ந்தான்.

''ஹாய், ஹவ் ஆர் யு...? யாரது இந்த ஆளு...? என்ன எல்லாரும் இங்க மாநாடு போட்டிருக்கிறீங்க...?''



மைத்ரேயி பார்வையில் வந்தவனை அடக்கி இவன் பக்கம் திரும்பினாள். ''சொல்லிட்டிருந்தேனே — ஸ்ரீவத்ஸன்னு— அவர்தான் இவர்! எய், ஸ்ரீவத்ஸ், மீட் மிஸ்டர் அசோக்! பிரபல வக்கீல்.''

''கிளாட் டு மீட் யூ...'' உதட்டில் மட்டும் சிரிப்பை இழையவிட்டு மைத்ரேயியைப் பார்த்து சர்க்காஸ்டிக்காகப் பேசினான்.

''என்ன, உங்கப்பா ஏற்பாடா—கிருஷ்ண கோபாலைக் கண்டு பிடிக்கறதுக்கு...? அவனை எதுக்காகத் தேடணும்...? நீதான் மாஞ்சு மாஞ்சு அவனையே நினைச்சுண்டிருக்க. இத்தனை நேரம் எந்தப் பெண்ணையாவது உரிச்சுப் பார்த்துண்டிருப்பான். நான் நிறைய வாட்டி ப்ளு ஸ்டார், பீச் ரோட்டில் அவன் காரைப் பாத்திருக்கேன். அங்கேயே பர்மனன்டா அவனுக்கு ரூம் இருக்கறதும் தெரியும். பேசாம அவனை டிவோர்ஸ் பண்ணிடுன்னு சொன்னதையும் நீ காதுல வாங்கிக்கல... நான் சொன்னதை அப்பவே கேட்டிருந்தின்னா இப்ப நாம ரெண்டு பேரும் சந்தோஷமா குடும்பம் நடத்திண்டிருக்கலாம்...''

மைத்ரேயி எரிச்சலாய் அவனைப் பார்த்தாள். ''திஸ் இஸ் நன் ஆஃப் யுவர் பிஸினஸ்! நீ எங்க கம்பெனியில் வேலை பாக்கற ஆசாமி. அவ்வளவுதான். குடும்ப விஷயத்துல தலையிடறதெல்லாம் வெச்சுக்காத. உனக்கும் எங்கப்பாவுக்கும் ஆயிரம் சம்பந்தம் இருக்கலாம். பட் டெஃபனட்லி நமக்கு இல்லை... அண்டர்ஸ்டாண்ட்? இல்லேன்னா யு பெட்டர் அண்டர்ஸ்டாண்ட் நௌ...''

ஸ்ரீவத்ஸன் அடி பட்டுப் போனான். முகம் கருங்கி— சொல்லிக் கொள்ளாமல் வெளியே விரைந்தான். வாசலில் கார் கோபத்தோடு உறுமுவது கேட்டுப் பின் சன்னமாய் மறைந்தது.

அசோக்கிற்கு இந்த மாதிரியான சூழ்நிலையில் எந்த முக பாவத்தில் மைத்ரேயியைப் பார்ப்பது என்பதில் கொஞ்சம் குழப்பம் ஏற்பட்டு சற்றே சிரமம் கலந்து பார்த்தான்.

''அதுதான் எங்க ஃபாமிலியிலே சம்பந்தம் இல்லாத வங்க சம்மன் இல்லாம வந்து ஆஜராவாங்க. இவன் என் னமோ உலக மகா யோக்கியன் மாதிரி வந்து நடிக்கிறான். சரி, கூடவே வளர்ந்தவனேன்னு கொஞ்சம் பேசறதுக்கு இடம் கொடுத்தா, பிபின் ஆர் கிரேஸி. ஸாரி மிஸ்டர் அசோக். இன்னிக்குப்பார்த்து எல்லோரும் என் எரிச்சலைக் கிளப்பறாங்க. எனக்காக—தயவு செய்து—நீங்க கே. ஜி. எங்க யிருக்கார்னு கண்டு பிடிக்கணும். அவரோட போட்டோ, கார் நம்பர் எல் லாம் குடுத்திடறேன். தயவு செய்து எனக்குச் சாதகமாகக் காரியத்தை முடிச்சுக் குடுங்க. ஐ'வில் பே யூ எனிதிங் இன் தி வேர்ல்ட்...''

அசோக் நிதானித்தான்.

''ஃபார் யுவர் கைன்ட் இன்ஃபர்மேஷன்...பணத்துக் காக இந்தக் கேஸை எத்துக்கல்ல. சாதாரணமா எனக்கு கோர்ட்ல பேசறதுதான் பிடிக்கும். ஒரு மாறுதலுக்குத் துப் பறியலாம்னு வந்தேன். தட் டு வித் தட் ஆஃப் யுவர் ஃபாதர்'ஸ் இன்விடேஷன். டோன்ட் ஒர்ரி. ஐ வில் டிரை மை பெஸ்ட்.''

''தாங்க்ஸ்...'' மைத்ரேயி சொல்லி முடிப்பதற்கும் ஜானி பெரிய கோப்பையில் ஜில்லென்று நுரை பொங்க பியர் கொண்டு வந்து வைப்பதற்கும் சரியாக இருந்தது.

அசோக் ஜானியைச் சந்தேகத்தோடு பார்த்தான். ''பேரி னது அத்தனையும் கேட்டாச்சா...? திருப்தியா...? இல்லை, இன்னும் ஏதாவது இன்ஃபர்மேஷன் காதுல விழலன்னா நானே சொல்லிடறேன்...''

ஜானி இதற்குப் பதில் பேசவில்லை. அவனின் அழகான முகத்தில் வெறுப்பு ஏறிக் கிடந்தது. மைத்ரேயி இப்போது ஜானியை முறைத்தாள்.

ஒரே மூச்சில் கோப்பையைக் காலி செய்து கொடுத்து விட்டு—'தாங்க்யூ மிஸஸ் மைத்ரேயி... ஐ விஷ் யு ஆல் தி பெஸ்ட்!' சொல்லிவிட்டு—இவன் கொடுத்த போட்டோவை



வாங்கிப் பையில் பத்திரப்படுத்திக் கொண்டு காரைப் பார்க்க நகர்ந்தான்.

அப்பொழுதுதான் சட்டென்று உறைத்தது. அனிதா எங்கிருந்தாள் இவ்வளவு சமயமும்...? மைத்ரேயி அனிதா வைக் கடிந்து கொண்டதற்குப் பிறகு எப்படி என் பார்வை யிலிருந்து விலகினாள்...? யோசித்துக் கொண்டே நடந்தவ னுக்குப் பின்னால் பணிவாக ஜானி வந்து காரின் கதவைத் திறந்து விட்டான்.

''ஜானி! நீ எழுதின கவிதை ஏதாவது ஒண்ணு சொல்லு...?''

ஒரு விநாடி கூட யோசிக்காமல் உடனே சொன்னான் ஜானி.

''கையளவு காகிதமிருந்தால்
கவிதை எழுதலாம்
உன் பெயரில் எழுதினால் கவிதை
உன் பெயரையே எழுதினால் காவியம்...''

அசோக் சிலிர்த்துத் தோளில் தட்டிக் கொடுத்தான்.

''அனிதா எங்கப்பா?''

''மாடியில பியானோ வாசிக்கறாங்க.''

கார் வேகமாய் இவன் ஆபீஸைப் பார்க்க விரட்டப் பட்டது.

# 5

நூல் கட்டி தலையைச் சிரைத்துக் கொண்டு கஞ்சி போட்ட காக்கிச் சட்டை உடம்பை விட்டுக் கொஞ்சம் தள்ளி விரைப்பாக நிற்க அதற்கு ஈடு செய்து கையில் துப்பாக்கி யோடு உரத்து சலனமில்லாமல் நின்று கொண்டிருந்த போலீசைத் தாண்டி கமிஷனர் ராஜசேகரன் அறைக்குள் நுழைந்தான்.

ராஜசேகரன் இல்லை. அவர் சீட்டுக்குப் பின் பக்கம் பெரிதாக ''மேப்'' பொருத்தி சிவப்பாக ஆங்காங்கு குறியிட்டிருந்தார்கள். வழக்கம் போல் மேஜை மீது சின்ன — 'குளோப்' மாடல். இரண்டு டெலிபோன்கள், ஒரு ஸ்பெஷல் இண்டர்காம். மேஜைக் கண்ணாடிக்கடியில் சம்பந்தமில்லாமல் சாந்தமாக ஞானமாய் சிரித்துக்கொண்டு காஞ்சிப் பெரியவர் (ஜூனியர் இல்லை). ஓரத்தில் சட்டம் போட்டு பிரயோஜனமில்லாத ஆனால் பயமுறுத்தும் டபுள் பாரல் துப்பாக்கிகள். அதில் குண்டு திணித்துச் சுடுவதற்குள்ளாகக் குற்றவாளி சென்னை தாண்டி அரக்கோணத்துக்கு நடந்தே போய்விடுவான். சுவரின் மூலையில் சிரித்துக் கொண்டு மகாத்மா காந்தி, சிரிக்காமல் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். அவர்களுக்குக் கீழே சென்னை குற்றங்களைப் பற்றிய சார்ட்.

அசோக் நின்று கொண்டிருந்தான். எப்படியும் ராஜசேகரனைச் சந்தித்தாக வேண்டும். போலீஸ் தரப்பில் முனுசாமியின் வாக்கு மூலத்தை எந்த எந்த அளவுக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும் முடிந்தால் முனுசாமியைப் பார்க்க வேண்டும். இன்னும் இந்தக் கேஸின் ஆரம்ப நிலை அகப்படவில்லை. கதவைத் தட்டிவிட்டு ஃபைலுடன் உள்ளே நுழைந்த மஃப்டி போலீஸ்காரன் போலீஸ்தனமாக இவனைப் பார்த்து விட்டு டிரேயில் ஃபைலை வைத்துவிட்டுப் போனான்.

யாரோ சொல்லி ஒருவன் அழுக்கு டம்ளரில் காபி கொடுத்தான். உள்ளே காபியில் மைக்ராஸ்கோப் வைத்துப் பார்த்தால் குறைந்த பட்சம் அரை டஜன் ஜீவராசிகள் நெளிவது தெரியும். கண்ணை இறுக மூடிக் கொண்டு குடித்தான்.

கொண்டு வந்தவனிடம்,

''கமிஷனர் எங்க போயிருக்காரு?''

''கீழே சின்ன மீட்டிங். முடிஞ்சிடும்... நீங்க இங்கிருப்பதைப் பார்த்துட்டாரு. அவர் கொடுக்கச் சொல்லித்தான் காபி கொடுத்தேன். இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடுவாரு.''



பக்கத்தில் பத்திரிகைகளுக்காக இருந்த டிரேயில் ''தினச்சுடரை'' உருவினான். ஆல் இந்தியா ரேடியோ என்.டி.ஆருக்காக நேரம் ஒதுக்காததைப் பிரதம மந்திரி முதல் பக்கத்திலே எட்டுக் காலத்துக்குச் சாடியிருந்தார்.

அடுத்த பக்கத்தில் ஆந்திரப்பிரதேச என். ஜி. ஓ.க்களின் ஸ்டிரைக் நீடித்தது. இடை இடையே லாட்டரி சீட்டு விளம்பரங்கள் இடம் பிடித்திருந்தன. கடைசியாகப் பேப்பரைத் தூக்கிப் போட்டான். காத்துக் கொண்டு சும்மாயிருப்பது பிடிக்கவில்லை. அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்த போது கமிஷனர் உள்ளே நுழைந்தார்.

''என்னய்யா வக்கீலு? எப்படி இருக்கே? என்ன இந்தப் பக்க திக் விஜயம்?''

முகம் மலர்ந்து, ''ஹூம்! போரடிச்சுது. இந்த வாரம் கேஸ் எதுவும் இல்லை. ஸோ அப்படியே பேப்பரை மேஞ்சா முனுசாமி கேஸ் ஆப்டுது...சரி, நாமே அந்தக் கேஸை எடுத்துக்கலாம்னு இருந்தேன். அதுக்கு முன்னாடி உம்மகிட்ட கேட்டுட்டு விஷயம் வாங்கிக்கறதுக்காக வந்தேன்.''

''வாரே வாவ். இப்போதைக்கு முனுசாமிதான் சூப்பர் ஸ்டார்னு நினைக்கிறேன். காலம் ரொம்பக் கெட்டுப் போச்சு. ஒரு பிக் பாக்கெட் வழிப்பறிப் பேர்வழிக்குமார்க்கெட் பாருங்க. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் பிரபல லக்கீல் பராசரன் வாலண்டரியா அவன் கேஸை எடுத்துண்டிருக்காரு. திருவல்லிக்கேணி போலீஸ் ஸ்டேஷன்லேந்து பேசினார். முனுசாமி கிட்ட பேசறதுக்கு போன் பண்ணி என்கிட்ட பர்மிஷன் கேட்டாரு. நான் கொடுத்துட்டேன். சாதாரணமா போலீஸ் ரூல்ஸ் விடறதில்லை. எக்ஸெப்ஷனல் கேஸஸ்தான். இதுல முக்கியமான தடயங்கள் எல்லாம் மாட்டிடுத்து. நெம்பர் ஒன். தண்ணியில மூழ்கிச் செத்துப் போன ஸல்மா நீச்சல் உடையில் இருந்திருக்கா. கரையில் இருக்க வேண்டிய அவளின் மாற்றுத் துணிகள் என்னாச்சு? ரெண்டு. இது அமெரிக்காயில்லை. ராத்திரி அதுவும் பீச்சுல பெண்கள்

குளிக்கறது வழகத்துக்கு விரோதம்! மூனு. தண்ணியிலே மூழ்கிச் செத்துப் போன மாதிரி 'செட்டப்' பண்ணியிருக்காங்க. பின் மண்டையில சல்லிசா காயம் இருக்கு. அதுல இன்னும் இன்ட்ரஸ்டிங்கான விஷயம் என்னன்னு செத்துப் போன ஸல்மாவுக்கு வாட்டர் ஃபோபியா. தண்ணியைப் பாத்தாலே ஒரு மைலுக்கு ஏதோ! நாலு—ஸல்மாவோட ஸ்விம்மிங் சூட்... அதாவது நீச்சல் உடை—பிரத்யேகமாக அவளுக்குன்னு வாங்கினது கிடையாது. இது வேற யாரோட நீச்சல் உடையோ? ஸல்மாவைக் காதலிச்சு இருக்கான்—நம்ம ஹீரோ முனுசாமி! கண்ட இடத்துல மானவாரியாக அவளுக்குச் செலவழிச்சிருக்கான். குற்றம் நடந்த பதினேழாம் தேதி சாயங்காலம் ஹோட்டல் குப்தாவுக்கு இரண்டு பேரும் சாப்பிடப் போயிருக்காங்க. அங்க ஒரே தகராறு. அஞ்சு ... முனுசாமி கொலை நடந்திருக்கும் சமயம் டாக்டர்களால் சொல்லப்படுகிற நேரத்துக்கு எங்க இருந்தாங்கிற 'அலிபி' இல்ல! யாருமேயில்ல! சஹாராவுக்கா போயிட்டான்? யாராவது ஒருத்தர் ரெண்டு பேர் இருக்காது? இவனைப் பார்த்ததுக்குச் சாட்சியா இருக்கணுமில்லே. ஆறு கிடையாது. நோ அலிபி. ஆறு... செத்துப் போன பெண்ணோட காதுல இருந்த கம்மல் ஒன்னு, முனுசாமி தங்கியிருந்த இடத்துல கிடைச்சது! விவரம் இவ்வளவு போதுமா முனுசாமியை மேல அனுப்பறதுக்கு? பராசரன் இல்ல, அவங்கப்பா வந்தாலும் கேஸை அசைக்க முடியாது. அவ்வளவு கனமா இருக்கு! ஐயா என்ன பண்ணப் போறீரு?''

''ஐயா தீவிரமா இதுல இறங்கப் போறேரு... முனுசாமிக்காக நானும் வாதாடப் போறேன்.''

''நோ மேன். ஸம்திங் ஃபிஷ்ஷி இன் இட். ஏன் இப்படி அவனை மொய்க்கிறீங்க?''

''வேற கேஸ் கிடைக்கல...''

''பொய்..''

''நைனா, எனக்கு நிறைய வேலை இருக்குது. இந்த வீக் எண்ட்ல நாம உக்காந்து ஆற அமரப் பேசலாம். இப்போ



முனுசாமியைப் பார்க்கப் போறேன். கொஞ்சம் போன் பண்ணி ஸ்டேஷனுக்குச் சொல்லிடறயா?''

''வேணுண்டா கண்ணா! ம் ... ஓ. கே. ஐ வில் சாலஞ்ச். உன்னால ஒன்னும் பெயர்க்க முடியாது... எனி ஹவ் ஆல் தி பெஸ்ட்...''

''தாங்க்யூ...'' சொல்லிக் கொண்டே சத்தம் போடும் மாடிப் படிகளில் இறங்கினான் அசோக்.

மாலை நேரத்து வெயிலில் ஒவ்வொரு போலீஸ்காரனின் பின்னாலும் நாயாய் நாலைந்து பேர்கள் சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

கடல் காற்று கொஞ்சம் வேகமாகவே அடித்து இவனின் தலை மயிரை அப்படியே பின்னுக்குத் தள்ளியது.

சின்ன மேடு செய்து அதில் புல் வளர்த்து, கூழாங்கல் பதித்து போலீஸ்காரர்களுக்கு அவர்களே அறிவுரை கூறிக் கொண்டிருந்தார்கள்.

அசோக் மணிக்கட்டைத் திருப்பினான்... 4 08 51 பளிச்சிட்டது.

காரில் அமர்ந்து ஸ்டார்ட்டிங் போது கவனித்தான். கறுப்பு அம்பாசிடர் கண்ணில் தட்டுப்பட்டது. முதல் தடவையாக யாரோ தொடர்வது போல் ஒரு உணர்வு. காரை மெதுவாகச் செலுத்தி அம்பாசிடரை ஆராய்ந்தான். ஆட் களின் கண பரிமாணங்கள் சரியாய்த் தென்படவில்லை.

ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்தாவது நிமிடத்தில் திருவல்லிக்கேணி போலீஸ் ஸ்டேஷன் எழுத்தர் (ரைட்டர்) லாக்கப்பில் இருக்கும் முனுசாமியைப் பார்க்க அனுமதிக்கவில்லை. சப் இன்ஸ்பெக்டர் வெளியே போயிருந்தார்.

மறுபடி போலீஸ் வட்டாரத்தில் காத்திருப்பது பெரிய இம்சையாகப் பட்டது. ராஜசேகரனுக்குப் போன் செய்ய வேண்டும். எப்படிச் செய்வது? ஸ்டேஷனுக்குள்ளேயே போன் செய்ய எழுத்தர் விட மாட்டார். யோசித்துக் கொண் டிருக்கும்போது அழுக்கான டெலிபோன் சிணுங்கியது.

எழுத்தர் பேசினர். குரல் வாங்கிய பின் உடம்பிலே
மரியாதை தெளிவாகத் தெரிந்தது...

யெஸ் ஸார்!

யெஸ் ஸார்!

'யெஸ் ஸார்' சொல்லிவிட்டுப் போனை வைத்துவிட்டு
இவனை மரியாதையுடன் அனுகி வாசனையாயுள்ள (நெகடிவ்
அர்த்தம்) லாக்கப்பிற்கு அழைத்துச் சென்று முனுசாமியுடன்
பேச வசதி செய்து தந்தார்.

அசோக் தொண்டையைக் கனைத்துக் கொண்டு சிகரெட்
நீட்டினன். அறிமுகம் சொல்லிக் கொண்டபின் அவனுக்கும்
சேர்த்துத் 'தீ' வைத்துப் புகையை நெஞ்சு முட்ட இழுத்து
வெளியிட்டான்.

''சொல்லு முனுசாமி, ஏன் இந்தக் கொலையைப் பண்ண?
எதையும் மறைக்காம எங்கிட்ட உண்மையைச் சொல்லு.
உன்னை வெளில கொண்டு வரது என்பாடு.''

''சத்தியமா நான் கொலே செய்யலிங்க... அது பிராத்
தல் கேஸ்''ன்னு தெரிஞ்சும் நான் அவளைக் காதலிச்சேன்.
கல்யாணம் பண்ணிக்கறதுக்கு ரெடியாயிருந்தேன். அவதான்
தள்ளிப் போட்டுண்டே போனு. கொலே நடந்த அன்னிக்குச்
சாயங்காலம்கூட இதைப் பற்றித்தான் சண்டை வந்தது.
என்னமோ எனக்கு அவளைப் பிடிச்சுப் போச்சு. ஊரைச் சுத்
தறதை விட்டுட்டு கல்யாணம் பண்ணிக்கோ. நானும் புதுசா
எங்காவது வேலே செஞ்சு பிழைக்கறேன். வான்னேன்.
கொஞ்ச நாள் போகட்டும்னு...''

''முதல்ல பொய் சொல்றதை நிறுத்து. நிறுத்தலன்னு
உன் கழுத்துக்குக் கயிறு நிச்சயம். சரி, கொலே நடந்துருக்கி
றதா சந்தேகப்படற நேரம் எங்க இருந்த...?''

''நான் என் வீட்ல சாராயம் குடிச்சிண்டிருந்தங்க!''

''எங்க தங்கியிருக்க...?

''நொச்சிக்குப்பத்தில குடிசை மாற்று வாரியம் கட்டித்
தந்த வீட்ல வாடகைக்கு இருக்கேன்...''



''நொச்சிக் குப்பம் ஏரியாவுல நீ ஒன்பது இல்ல, பத்து
மணி சுமாருக்கு வீட்டுக்குள்ள நுழைஞ்சதைப் பார்த்தசா
ஆளே இல்ல, அப்படித்தானே? சூப்பர் மேனு நீ? சரி, எந்தச்
சாராயக் கடையில சாராயம் வாங்கின? வழக்கமா போற
கடையிலதான் வாங்கியிருப்பே? அங்க உனக்குத் தெரிஞ்ச
வங்க யாருமே அகப்படலயா? ராத்திரி பத்து மணிலேந்து
காத்தாலே ஆறு மணி வரைக்கும் யாருமே பார்க்காத இடத்
துல யார் கண்ணுலயும் படாமலே இருந்தியா? தவிர நீ ஒரு
புரொபசனல் கிரிமினல். ஏற்கனவே நிறையக் கேஸ்களைச்
சந்திச்சிருக்கே. எந்தக் காரியம் பண்றதும் அலிபி இல்
லாம பண்ணமாட்டே. இத்தனை நாளில் போலீஸ் ஸ்டேஷன்
விதிகள் அத்தனையும் உன் ரத்தத்துல ஊறியிருக்கணும்.
ஸல்மாவைக் கல்யாணம் பண்ணிக்கப்
போறா சொல்ற. அவள் மாட்டேன்னு யார் கூடவோ
சொல்லி கெஞ்சியிருக்கே. எரிச்சல்ல தீர்த்துக் கட்
தொடர்ந்து சுத்திண்டிருக்காங்கற
டிட்ட. மூர்மார்க்கெட்ல சுவிம்மிங் சூட் வாங்கிப் பொணத்
துக்குப் போட்டுட்டு, கடல்ல உருட்டி விட்டுட்ட. எப்படியோ
அவளோட கம்மல் உன் சட்டை இடையில மாட்டி உன் வீட்
டுல விழுந்திருக்கு. திட்டமிட்டுச் செய்யாம எதிர்பாராத
விதமா உணர்ச்சி வசப்பட்டு கொன்னுட்டதினுல் சரியா அலிபி
ரெடி பண்ணிக்கல. இல்ல, பொய்யாய்த் தயாரிக்கறதுக்குப்
பணமும் நேரமும் இருந்திருக்காது. ஆம் ஐ கரெக்ட்?''

''ஐயோ கடவுளே! உதவி செய்யறேன்னு வர்ற நீங்களே
புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்களே. கொஞ்ச நேரத்துக்கு
முன்னடி 'பராசரன்' ங்கற வக்கீல் வந்து என்கிட்ட காகிதத்
துல கையெழுத்தெல்லாம் வாங்கிட்டுப் போனரு. வேணு
அலருகிட்டே கேளுங்க. அவர்ட்டேயும் அதேதான் சொன்
னேன். எப்படி சார் நான் கொலே செய்யலேன்னு நிரூபிக்
கிறது? ஐயோ கடவுளே! எனக்கு ஒரு வழியும் புரியலேயே.''
அழுதான் முனுசாமி. தொடர்ந்து சொன்னுன். ''அந்தக்
கோபிதான் சார் பண்ணியிருக்கணும். அவன் பணக்காரன்னு
நினைக்கிறேன். இந்த நாலஞ்சு மாசமா அவன் கூட ஸல்மா

சுத்திண்டிருக்கா. நான் அவனை நேரடியாப் பார்த்ததில்லே. ஸல்மாவுக்கு அப்பப்போ நிறையப் பணம்கொடுத்திருக்கான். ஒரு தடவை அவ வீட்ல ஆம்பிளை சட்டை, ரொம்ப விலையிருக் கிற சட்டை இருந்தது. அதுல பார்த்தேன். கே. ஜி. ன்னு லாண்டரி மார்க் இருந்தது. அவ்வளவு தான் சார் தெரியும். இன்னொரு முக்கியமான விஷயம் பராசரன் சார்ட்ட சொல்ல மறந்து போச்சு. ஸல்மாவுக்குத் தண்ணியைக் கண்டா பயம்னு எனக்கும் அவ கூடத் தங்கியிருந்த 'மினி'க் கும்தான் தெரியும். எப்படி எங்க ரெண்டு பேரையும் தவிர மூன்றாவது ஆளுக்குத் தெரிஞ்சதுன்னு எனக்குச் சந்தேகமாக இருக்கு. திட்டம் போட்டுக் கொலை பண்ணியிருக்காங்க. என்னை மாட்டி விடணும்னு கம்பலே என் ரூம்ல போட்டு இருக்காங்க. என்னை நம்புங்க சார். ப்ளீஸ் என்னை நம்புங்க."

"ஸாரி, என்னால நம்ப முடியல. இன்னும் உனக்கு உதவி பண்ணணும்தான் இருக்கேன். யோசி. அலிபி ஏதாவது இருக்கும். கண்டுபிடி. நாளைக்குப் பார்க்கறேன். சரி; ஸல்மா எங்கயிருக்கா? கூட இருந்த பொண்ணு யார்? சொன லியே. பேர் என்ன? ஆங்... மினி. இப்பவும் அவ ரூம்லதான் இருக்காளா?"

"ஆமாங்க."

"அட்ரஸ்?"

சொன்னான். அசோக் தீவிரமானான்.

மறுபடி எழுத்தருக்கு நன்றி சொல்லிப் பத்து ரூபாயைக் கையில் திணித்துவிட்டுக் காரில் மவுண்ட் ரோடு பக்கமாக நகர்ந்தபொழுது கறுப்பு அம்பாசிடர் துரத்தியது.

பராசரனைப் பிடிக்க வேண்டும்.

"ஹலோ, அசோக் பேசறேன்! ஏதாவது இன்ஃபர் மேஷன் கிடைச்சுதா?"

"இல்லே."

"பராசரன் அட்ரஸை டைரிலேந்து பார்த்துச் சொல்லு." சொன்னான். வீதல். அசோக் பராசரனின் வீட்டைப் பார்க் கக் காரில் பறந்தான்.



நேரம் 5. 05. 41......

காரின் நெற்றியிலிருந்த சின்ன ரியர் வியூ மிரரில் கறுப்பு அம்பாஸிடர் பின்னால் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. சந்தேகமில்லாமல் யாரோ பின் தொடர்கிறார்கள். எதேச்சை யாக நிகழவில்லை.

நான் அக்னி புத்ரனுக்காகச் செல்வது யாருக்கோ பிடிக்கவில்லை. யாருக்காயிருக்கும்?

பட்லர் ஜானி! கொஞ்சம் யோசனைக்குப் பிறகு...இருக்க லாம். சமையற்காரன். களையில்லை அவன் முகத்தில்!

டெபுடி மேனேஜிங் டைரக்டர் ஸ்ரீவத்ஸன்? இருக்க முடி யாது. நல்லதோ கெட்டதோ மனசில் படுவது யோசிக்கா, மல் வெளிவருகிறது.

மைத்ரேயி கிருஷ்ணகோபால்?

அனிதா அக்னிபுத்ரன்?

இருக்காது.

முனுசாமி? நோ சான்ஸ் ஆனால், ஏதோ மறைக்கிறான், சத்தியமாய் அவனுக்குச் சாட்சிகள் இருக்கிறது. யாருடைய தூண்டுதல் காரணமாகவோ மறைக்கிறான்.

கிருஷ்ண கோபால்? காணாமல் போனதாகச் சொல்லப் படும் ஆசாமி - இருக்கலாம். முனுசாமி சொல்றப் போல அவனே ஸல்மாவைக் கொலை செய்திருக்கலாம்.

பராசரன் பிரபல கிரிமினல் வக்கீல். இவ்வளவு கீழாக இறங்க மாட்டான். ஆனால் இந்தக் கேஸில் நகையைக் காட்டுவது யாருடைய தூண்டுதலின் பேரிலாவது இருக்கும்.

குறிப்பாய் அக்னிபுத்ரன் நிறையப் பணம் கொடுத்து அமுக்கியிருக்கலாம். என்னைத் துப்பறியச் சொல்லி, முனு சாமிக்கு ஆஜராகிறாற்போல நடித்து ஏமாந்து வசமாய் முனு சாமியின் வெற்றிடம் பார்த்துக் காயை நகர்த்தினால் தூக்கு மேடை முனுசாமிக்கு உறுதி. கணிசமாய்ப் பணம் சம்பாதிக் கலாம். அக்னி புத்ரனின் மாப்பிள்ளை கிருஷ்ண கோபாலைத்

நகருதிலிருந்து மீட்கலாம். அவனே கொலையாளியாக இருக்கும் பட்சத்தில்தான் அக்னிபுத்ரன் குடும்ப மானம் காக்கக் காசு செலவிடுவார். பராசரன் என்னை ஒதுக்குவதற்கு ஆள் அனுப்ப அவசியம் இல்லை.

அக்னிபுத்ரன்? இருக்காது. என்னைத் துப்பறியச் சொல்லிக் காசு கொடுத்தவர். யார் ஏவியிருப்பார்கள்?

டாஷ் போர்டைத் திறந்து உள்ளே உறங்கிக் கொண்டிருந்த 32 மாக்னட் பிஸ்டலை இடுப்பில்செருகிக் கொண்டான். சட்டையைப் பாண்ட்டின் பிடியிலிருந்து இறக்கிப் புடைத்திருக்கும் இடுப்புப் பகுதியை மூடிக் கொண்டான். இன்னும் கறுப்புக் கார் தொடர்ந்து கொண்டிருந்தது.

சாலையில் ஒரு பப்ளிக் டெலிபோன் பூத்தில் காசு கொடுத்து நம்பர் சொல்லி, சின்னக் கேபினுக்குள் பதுங்கிப் பேசினான். ''மிஸ்டர் பராசரன் ப்ளீஸ்''

''ஹியர்.''

''க்ளாட்...மீட் யூ. ஐயம் அசோக்...''

''க்ளாட்... உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கேன்! வாட் கேன் ஐ டு ஃபார் யூ?''

''நான் உங்களைப் பார்த்துப் பேசணும். பின்னால என்னை கார்ல யாரோ நண்பர்கள் ஃபாலோ பண்றாங்க. உங்க வீட்டை அவங்களுக்குக் காட்டிக் கொடுக்க இஷ்டப்படல! ஹோட்டல் ஹர்ஷாவுக்கு வர்றீங்களா?''

''அங்க கொஞ்சம் போலாம்...''

''ஹெவன் ஸேக்! இப்பத்தான் ஒரு அப்பாயிண்ட் மெண்ட் கான்ஸல் ஆச்சு. நேரா ஹோட்டல் ஹர்ஷா ஸ்விம்மிங் பூல் கிட்ட போயிப் பார்த்தீங்கன்னு பாருக்குப் பின்னாடி பக்கக் கதவு இருக்கும். என் ஃப்ரெண்ட்டுன்னு சொன்னீங்கன்னு உள்ள விடுவான். அப்படியே பாருக்கு உள்ளார போயிடுங்க. ஃபாலோ பண்றவங்க நாம பேசறதைக் கேக்க முடியாது. இன்னும் பத்து நிமிஷத்துல அங்க வரேன்.''



திருப்தியாய் நகர்ந்தான். கார் தொடர்ந்தது.

ஹோட்டல் ஹர்ஷாவை ஒரு சுற்றுச் சுற்றி பின் வளைந்து ஓட்டிறாற் போலுள்ள தெருவைப் பிடித்தான். தொடர்ந்தவர்கள் டிராஃபிக் நடுவில் வந்து சுற்றிப் பிடிப்பதற்குள் மறுபடி சின்னச் சந்தில் திரும்பிச் சுற்றிப் புறப்பட்ட இடத்திற்கே வந்தான். கறுப்பு அம்பாஸிடர் கண்ணில் படவில்லை. கொஞ்சம் ரிலாக்ஸ்ஸாய் காரை மறைவான இடமாகத் தேடி நிறுத்தி ஹோட்டலுக்குப் பின் பக்கமாய் நுழைந்தான்.

டைம் ஆபீஸ் வாசலில் இவன் ஹோட்டலில் வேலை செய்கிறவன் என்று நினைத்து 'பஞ்ச் கார்ட்' கேட்டார்கள். சமாளித்து நழுவிச் சமையல் அறையில் புகுந்து, பாருக்குள் நுழைந்து உட்காரவும் பராசரன் வரவும் நேரம் சரியாக இருந்தது.

பரஸ்பர அறிமுகம்...

லாஸ் ரீகல் இரண்டு லார்ஜ் ஆர்டருக்குப் பிறகு பராசரன் முழங்கைகளை டேபிளில் ஊன்றிக் காஷுவலாகக் கேட்டான்.

''க்ளாட் மிஸ்டர் அசோக்! என்கிட்டேயிருந்து என்ன உதவியை எதிர்பார்க்கிறீங்க...?''

''நீங்க முனுசாமி கேஸை எடுத்துண்டிருக்கீங்கன்னு கேள்விப்பட்டேன்.''

''வாட்ஸ் தி ரீஸன் ஃப்ரெண்ட் தட்...''

''ட்ரூலி ப்ரொஃபஷனலில் நான் அதிகமாக ரேட் வாங்கறேன்னு உங்களுக்குத் தெரியும். பொது மக்கள் இன்வால்வ் ஆகியிருக்கிற பப்ளிக் இன்ட்ரஸ்ட் இருக்கிற டெலிகேட்டான கேஸை எடுத்து நடத்தினா என் பாப்புலாரிட்டி ஜாஸ்தியாகும். என் ரேட்டும் உயரும். அதுக்காகத்தான். பழைய பேப்பரெல்லாம் எடுத்துப் படிச்சிப் பார்த்தேன். இந்தக் கேஸ் எனக்குப் பிடிச்சுது. நமக்குன்னு ஜாப் ஸாட்டிஸ்ஃபாக்ஷனும் இருக்கே. வாட் யூ ஸே?''

''ஐயாம் கன்வின்ஸ்ட்.'' பேச்சுக்குச் சொன்னான், அசோக்கிற்கு அவன் பதிலில் திருப்தியில்லை. வேறு ஏதோ கூட்டத்திற்காக இவன் வேலை செய்கிறான். உச்சகட்டத்தில் தொழில் சுகமாய் நடந்து கொண்டிருக்கும் போது எந்தக் கிறுக்கனும் வலியக் காசு இல்லாம ஒரு கொலைக் கேஸை இழுத்துப் போட்டுக் கொள்ள மாட்டான். இந்தக் கேஸுக்காகச் செலவழிக்கின்ற நேரத்தில் ஏதோ காசு பார்ப்பான். எதற்கும் விட்டுப் பிடிக்கலாம்.

''பை தி பை எனக்குக் கூட இதிலே நிறைய இன்ட்ரஸ்ட்! முனுசாமியைப் பார்த்தேன். உங்க பெயரைச் சொன்னான். நான் எடுத்துக்கலாம்னு பார்த்தேன். பட் நீங்க முந்திகிட்டீங்க. உடைச்சிடுவீங்களா?''

''இன்னும் அது பத்தி தீவிரமாச் சிந்திக்கல. சிமாண்ட் முடிஞ்சு போலீஸ் ரிகார்டு தயார் பண்ணி கோர்ட்டுக்குப் போகும்போது பார்த்துக்கலாம்னு இருக்கேன்.''

சிவப்பு யூனிஃபார்மில் விடலை ஆங்கிலோ இந்தியப் பையன் பணிவாக ஐஸ் துண்டம் போட்ட விஸ்கி கோப்பைகளை வைத்தான். அசோக் சிகரெட்டை உதட்டில் தடவிய போது தயாராய் நெருப்புக் குச்சி கிழித்து அதன் தலையில் வைத்தான்.

அசோக்கிற்கு இந்தப் பணப் பாசம் பிடிக்காமல் போயிற்று. பராசரன் சியர்ஸ் சொல்லி ஒரு கல்ப்.

''மிஸ்டர் அசோக்! அது தவிர கேஸ்ல ஓட்டை இருக்கு. நீங்க முனுசாமி கிட்ட பேசினபோது கண்டு பிடிச்சிருப்பீங்க. செத்துப் போன ஸல்மாவைக் கொலை செய்யற அளவுக்கு, ஆத்திரப்பட்டு உணர்ச்சி பிழக்கிற அளவுக்கு, மோட்டிவ் சரியில்லை. முனுசாமி சுத்தமா ஸல்மா காலு கேர்ள்னு தெரிஞ்சுதான் லவ் பண்ணினான். அவளை அட்ராக்ட் பண்ணத் தான் நிறையச் செலவழிச்சிருக்கான். இவன் அவ கூட இருக்கிற நேரம் தவிர மத்த நேரம் அவ யார் கூடவாவது



படுத்துண்டிருப்பாளும் தெரியும். திடீர்னு வெறி பிடிக்கக் கொலை பண்ற அளவுக்கு மோட்டிவ் ஸ்ட்ராங்கா இல்லை.''

அசோக் பொறுமையாய்க் கேட்டுக் கொண்டிருந்தான். இவன் சில விநாடிகளில் புரிந்து கொண்ட விஷயத்தை விலாவரியாகச் சொல்கிறான்.

''ஐயாம் இன் கேர் ஆஃப்ப எ மேட்டர். பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் இந்த வாதத்தை ஆரம்பிக்கிற நாலே நிமிஷத்துல உடைச்சுடுவான்.''

பராசரன் இன்னொரு 'கல்ப்' அடித்துவிட்டுத் தொடர்ந்தான்.

''அப்புறம் வீட்ல கம்மல் கிடந்ததுன்னு போலீஸ் சொல்றதெல்லாம் இந்தக் கேஸுக்கு ஏத்துப் போகாது. முனுசாமிக்கு வேண்டாதவங்க இந்தக் கொலையைப் பண்ணிட்டு முனுசாமி அவ கூட பப்ளிக்கா பழகினதைக் காரணம் கற்பிச்சண்டு அவன் வீட்டில் கம்மலைப் போட்டிருக்கலாம். அது இல்லான்னாலும்கூட சாயங்காலம் ரொம்ப ஆக்ரோஷமாக ஸல்மாவும் முனுசாமியும் பேசின்டபோது கம்மல் கழண்டு கம்மலோட கிளிப் சட்டையில் கிட்டையில் செருகி வீட்ல விழுந்திருக்கிறதுக்கு சான்ஸ் இருக்கு. அதை ஒரு பெரிய எவிடன்ஸா எடுத்துக்க முடியாது. ஐ விட்னஸ் கண்ணால் பார்த்த சாட்சி இருக்கா? போலீஸ்காரங்க பண்றது அத்தனையும் ஊழல்கள். அந்தப் பொண்ணுக்கு வாட்டர் ஃபோபியா. தண்ணியைக் கண்டா பயம். அதனால் அவ குளிச்சிருக்க முடியாது. மெட்ராஸ் பொண்ணுங்க எல்லாம் பீச்சில் குளிக்கறதில்லன்னு சொல்ற வாதம் எடுபடாது. எலியட்ஸ் பீச்சில் போய்ப் பாருங்க. எவ்வளவு பொண்ணுங்க பீச்சில ஸ்விம் பண்றாங்க. இதுல உதைக்கிற பாயின்ட் எங்கன்னா பத்து மணியிலேந்து ராத்திரி எழு மணி வரைக்கும் முனுசாமி எங்க இருந்தான். அவன் இருந்ததைப் பார்த்ததுக்குச் சாட்சி இருக்கா? இதையும் சரி செஞ்சுடுவேன். எப்படின்னு மட்டும் கேக்காதீங்க. புரொபஷனல் சீக்ரெட்...''

அசோக் சிவாஸ் ரிகலை ரசித்தான்.

"சரி. ஐ பிலீவ் யூ! முனுசாமியை நீங்க வெளில கொண்டு வந்திடுவீங்க. கொலை பண்ணது யாருன்னு கேள்வி வருதுல்ல? நீங்க இவ்வளவு நேரம் பேசினதிலே கே. ஜி. பற்றின விவரம் எதுவும் தெரியல..."

"யாய் ஒன் மோர் லார்ஜ்...ஷல் எபௌட் டூ..."

"ம்." "சார், நான் இந்தக் கேஸை எடுத்துண்ட நோக்கமே முனுசாமியைத் தப்பவைச்சுப் பேர் சம்பாதிக்கறதுக்குத்தான். கொலை யார் பண்ணான்னு துப்பறியறதுக்கு இல்ல. அது போலீஸ் பாத்துக்கும். கே. ஜி. இந்தக் கொலையைப் பண்ணியிருக்கலாம்கறது முனுசாமியோட ஊகம். அதுக்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாது. செஷன்ஸ்லேயே போலீஸ்காரங்க முடிச்சுப் போடுவாங்க. நான் ஏன் அதைப்பத்தி ஒர்ரி பண்ணிக்கணும்."

இரண்டாவது லார்ஜை உள்ளே தள்ளிக் கொண்டே அசோக் உதட்டில் பாராட்டினான். "யூ ஆர் கிரேட் சார்! தாங்க்யூ. என்கிட்ட இவ்வளவு தாராளமா மூவ் பண்ணதுக்காக. சின்ன ஹெல்ப் பண்ணணும். நம்ம நட்பு நீடிக்கறதுக்காக என்னோட காம்ப்ளிமென்ட்டா நான் பில் பே பண்றேன். யு ஷூண்ட் டேக் இட் அதர்வைஸ்..."

"கமான் மேன்! நான் ஃபார்மல் ஆசாமி! இவ்வளவு முன்னெச்சரிக்கையோடெல்லாம் பேசின ஐ வில் கெட் டிஸ்டர்ப்ட். இன்னிக்கு நீங்க பே பண்ணுங்க. என்னிக்கும் நான் பே பண்றேன். ஷால் வி ரிடையர்?" எழுந்து கொண்டார்கள்.

அசோக், பராசரனை வழியனுப்பிவிட்டு, ரிஸப்ஷனில் போன் வாங்கிப் பேசினான்.

"இளிட் மாதர பெண்கள் விடுதி?"

"ஆமாம், நீங்க யார் பேசறது?"

"அசோக். அங்க 'மினி'ங்கிறவங்க இருக்காங்களா?"



"கொஞ்சம் லைன்ல இருங்க. பார்த்துச் சொல்றேன்."

"ஹலோ! யார் பேசறது?"

"நான்தான் அசோக் பேசறேன். மினிங்கிறவங்க இருக்காங்களா?"

"மினிதான் பேசறேன்."

"என் பேரு அசோக். முனுசாமியோட ஃப்ரெண்ட். உங்களைப் பாக்கணும்..."

"பாஸ்டர்ட்! அக்கா தங்கச்சிங்க கூடப் பொறக்கல நீ? ஏன்டா தொந்தரவு பண்றீங்க..."

தொடர்பு துண்டிக்கப்பட்டது. அசோக்கிற்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. என்ன இது? ஏன் இவள் இப்படிப் பேசுகிறாள்? தப்பாக எடுத்துக்கொண்டு விட்டாளா?

சிவாஸ் மெதுவாக உள்ளிறங்கி உடலை ஏற்கனவே உசுப்பியிருந்தது. சட்டென்று எதுவும் பிடிபடவில்லை. ஆரம்பத்திலிருந்து ஒன்றிலிருந்து ஒன்றாய் இந்தக் கேஸை எடுத்துக் கொண்டதிலிருந்து குழம்புகிறது. ஆற அமர யோசிக்க வேண்டும். மிகக் கனமான சதுரங்க ஆட்டம் இது. தெரிஞ்சோ தெரியாமலோ ஒரு த்ரில் கருநி இதில் இறங்கியாகி விட்டது. இனிமேல் நகர்த்தும் ஒவ்வொரு காயையும் யோசித்து நிதானமாய் நகர்த்த வேண்டும். தவறும் ஒவ்வொரு கணமும் ஒதுக்கப்படுவோம்.

வாஷ்பேசினில் முகம் கழுவிக் கொண்டான். மெதுவாக நகர்ந்து வெளியே வந்தான். நன்றாக இருட்டியிருந்தது. எதிரேயிருந்த பெரிய டவர் க்ளாக் மணி ஏழரை என்றது. மங்கலாய் ஃப்ளோரஸண்ட் வெளிச்சத்தில் சுறுசுறுப்பாய்க் கோடம்பாக்கம் ஹைரோடு ரிப்ளெக்ஸில் கார் யோசித்துக் கொண்டே தன்னிச்சையாகப் போய்க் கொண்டிருந்தது. கன வேகமாக ஆட்டோவும் லாரியும் கார்களும் கிழித்துக் கொண்டிருந்தன. தங்க மஞ்சள் ஒளியில் கார் நகரும்போது வள்ளுவர் கோட்டக் கல் தேர் நகர்வது போலப் பிரமையேற்பட்டது.

காரை வளைத்து லேக் வியூ ரோடில் திருப்பினான். ஒன்று இரண்டாவது சந்து — ஜன நடமாட்டமில்லை.

காரை நிறுத்தி வெளியே வந்து கவரோரமாக ஒதுங்கிய போதுதான் அகஸ்மாத்தாகக் கவனித்தான்.

கறுப்பு அம்பாஸிடர் இவனருகில் வந்து உரசிக் கொண்டு நின்றது. அடுத்து என்ன செய்வது என்று யோசிப்பதற்குள்ளாக அது நிகழ்ந்தது. பின் தலையில் பலமான அடி.

சட்டென்று கீழே விழப் போனவன் சமாளித்து அடுத்துத் தாக்குதல் வரும் திசையை உத்தேசமாகப் பார்த்து நகர்ந்து இடது கை முஷ்டியால் ஓங்கி அடித்தான். கை காற்றில் ஆவேசத்தோடு சக்தியை வெளிப்படுத்தித் தோள் பட்டை எலும்பில் உயிர் போகுமளவு வலித்தது. உடலை விரைத்துக் கொண்டு திரும்பினான்.

மூன்று பேர்கள் நின்றிருந்தார்கள். இவன் சமாளித்துச் சரியாக நிற்பான் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. மெதுவாய் நெருங்கினார்கள். அசோக்கிற்கு நிலைமை புரிந்து அவர்கள் பாய்வதற்குச் சந்தர்ப்பம் கொடுத்துக் குனிந்து அவர்களின் முழு வேகத்தையும் தலையிலும் தோள் பட்டையிலும் தாங்கி நிமிர்ந்து வீசினான். அவர்கள் தலைகுப்புறப் பின்னால் விழுந்தார்கள்.

அடுத்து மூன்றாவதாக வந்தவனின் அடி வயிற்றில் இருபத்தைந்து கிலோ வேகத்தில் காலால் உதைத்தான். அவன் சமாளிக்குமுன்பு முகத்தில் இவனது கையைப் பாய்ச்சியதில் மூக்கெலும்பு உடைந்து முகம் ரத்தக் காடாகியது.

விழுந்தவர்களில் ஒருவன் எழுந்திருந்து இவனை நோக்கி வருவதற்குள் எதிர்கொண்டு வயிற்றில் ஒரு பஞ்ச், சட்டென்று இடுப்பில் பிஸ்டல் இருப்பது ஞாபகத்துக்கு வர உருவினான்.



அந்தச் செயல் மட்டும் ஞாபகத்தில் இருந்தது. பின் தலையில் மறுபடி வன்மையாக அடி. காதில் ஸ்டேஷன் கிடைக்காத டிரான்சிஸ்டரின் சத்தம். நெற்றியில் நட்சத்திரங்கள் தோன்றிப் பொலிந்தபோது மெதுவாய் இருட்டில் மூழ்கினான்.

ஓடு.

நிற்காதே.

ஓடு.

ஓடினான்.

பின்னால் கண்மூடித்தனமான வெறியுடன் மூன்று பேர்கள் ஓடி வந்தார்கள். கையில் பயங்கரமான பெரிய பிச்சுவா வைத்திருந்தார்கள்.

ஓடினான். மூச்சிரைத்தது. கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது. தரையில் சரளைக் கற்களில் பாதம் உராய்ந்து உராய்ந்து மேல் கால் கழன்று ரத்தம் கசியலாயிற்று. உடலின் சக்தியத்தனையும் வியர்வையில் வெளியாகிச் சட்டையும் பேண்டும் உடம்புடன் ஒட்டிக் கொண்டு ஓடுவதைத் தடை செய்தது. பின்னால் வருபவர்களின் சத்தம் இன்னும் நெருங்க நெருங்க ஓடினான். இறுக மூடிய கைக்குள் உயிரைப் பத்திரப்படுத்திக் கொண்டு ஓடினான்.

கட்டுக் கடங்காத வேகத்தில் துள்ளி வரும் ரத்தத்தைச் சமாளிக்க முடியாமல் இதயத்தின் ஆர்ட்டிரியம் வென்ட்ரிக்கிள் முயற்சித்துத் தோற்றுப் போன சமயம் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு நின்றான்.

பின் முதுகில் சூடாய் ஏதோ செருக, அந்த இடத்திலிருந்து ரத்தம் கசிந்து வலி முதுகெலும்பு வழியாக மூளையை எட்டுவதற்குள் இன்னொரு குத்து. வயிற்றில் கத்தியின் வேகமான ஊடுருவலில் சிகப்பும் மஞ்சளும் கலந்து கிழிந்து போன துணி மாதிரிப் பிசிறு பிசிறாய் நாளங்கள் சுழன்று துடிக்கக் குடல் தொப்பென்று வெளியே வர எத்தனிக்க, கடைசி முயற்சியாய் அதை அருவருப்பில்லாமல் கையிலெடுத்து வயிற்றில்

திணிக்க முயற்சி செய்யப் பிரவாகமான ரத்தத்தில் கிழிபட்ட இடம் தெரியாமல் சிவப்பு மறைக்கத் தடுமாறிச் சமாளிப்பதற்குள், முன் நெற்றியில சின்னதாய் மின்னல் வெட்ட அப்படியே சாய்ந்தான்.

இருட்டு...

இருட்டு.

மணிக்கட்டில் மெதுவாய் ஊசி வழியாக இடி இறங்கிற்று... இடது கை துழாவி வலித்த இடத்தைத் தட்டிய போது...

அசோக் விழித்தான்.

சொப்பனம்.

அத்தனையும் சொப்பனம்.

இல்லை, நிஜம். நிஜம். சல்லிசாய் இருட்டு இருந்தது. கண்களின் மேல் யாரோ கனம் வைத்திருந்தார்கள். பிரிக்க முயற்சித்தான். முடிந்தது. மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தான்.

கொசு.

இன்னமும் இருட்டு...

பின் மண்டையில் வலி நிஜமாய் இருந்தது.

சொப்பனம்தான். தான் ஓடியது. துரத்தப்பட்ட, குத்தப்பட்டது, அத்தனையும் சொப்பனம். பின் நான் எங்கு இருக்கிறேன்? புறங்கையால் தடவிப் பார்த்தான். குஷன். என்ன ஆயிற்று எனக்கு? எங்கு அடிபட்டேன்? எப்படி அடிபட்டது? யோசித்தான்.

லேக் வியூ ரோடில் மூன்று பேர்களாகச் சேர்ந்து தாக்கியது ஞாபகம் வந்தது.

ஒருக்களித்துத் திரும்பிப் படுத்துப் பார்த்தான். வெளியே பேச்சுக் குரல் கேட்டது. கதவுக்குக் கீழே நிலவு ஒளி சின்னக் கோடாய்த் தெரிந்தது.



பேச்சுச் சத்தத்தைக் கவனிக்க முடியவில்லை. எந்த இடம்—எங்கு அடைத்திருக்கிறார்கள்? உட்கார்ந்தான். இருட்டில் கண்களால் துழாவினான். யாரும் இருக்கிறாற் போல உணர்வுக்குப் படவில்லை. தொடைக்குக் கீழ் கால் மரத்துப் போயிருந்தது. கைகளால் பிடித்து விட்டுக் கொண்டான். இன்னும் தலையின் பின் பக்கம் மெல்லிய பாரம் இருந்தது.

இதே சூழ்நிலை.

இருட்டு

இருட்டு

பழக்கமான இருட்டு. இன்னும் கண்கள் இருட்டுக்குப் பழக்கப்பட்டுப் போய் அறையின் ரேகைகள் மெது மெதுவாகப் புலப்பட ஆரம்பித்தது. கட்டிலுக்கு இடது புறம் காலில் பதித்த லாட்சோல், கால்மாட்டுக்கு நேர் எதிரில் கண்ணில் புலப்படுகிற மாதிரிப் புழுதி கிளப்பிக் கொண்டு வேகக் குதிரைகளில் ப்ளோ அப் போஸ்டர். எங்கோ அடிக்கடி பார்த்திருக்கிறோம். எங்கு...? எங்கு...? இன்னும் சற்றுத் தள்ளி வலது புறத்தில் விஸ்தாரமான மேஜை. பூனைக்குட்டியாய் வெள்ளை டெலிபோன். மங்கலாய்ப் புஸ்தகங்கள். சீலிங்கிலிருந்து தொங்கவிடப்பட்ட சிக்கனமாய் வெளிச்சம் தரும் குட்டிச் சாண்ட்லியர், ரிவால்விங் சேர், சற்றுத் தள்ளி சின்னப் பால்கனிக்கு முன்பாக இரண்டு டைப்ரட்டர்கள், கனமில்லாத மிகச் சின்ன ஈஸிசேர், தலையைத் திருப்பினான். கண்ணாடி அலமாரி. அதற்குள்ளாக நிறையப் புஸ்தகங்கள். அடிக்கடி இந்த அறையைச் சந்தித்திருக்கிறோம். எங்கு?

துப்புரவாய் இங்கு ஆசாமிகளில்லை. கை கால்கள் கட்டப்பட்டிருக்கவில்லை. இப்போது கதவுக்கு அந்தப்புறம் பேச்சுச் சத்தம்கூட இல்லை.

அசோக் எழுந்து சுத்தமாய் நின்று சோம்பல் முறித்தான். கைகளைக் காற்றில் அழுத்தத்தோடு வீசித் தோள் பட்டையைச் சரி செய்து கொண்டான். சுவரில் உத்தேசமாக சுவிட்ச் போர்ட் இருக்குமிடம் சென்று தட்டினான்.

பனிச்,

நீல நிறக் குழல் உயிர் பெற்றது. கண்களை நம்ப முடியவில்லை. இவனுடைய அறை. இவனின் அபார்ட்மெண்ட். தலையைச் சிலுப்பிக் கொண்டான். எதற்காக அடித்தார்கள்? புரியவில்லை. வாசற்கதவுக் கைப்பிடியை அவசரமாகத் திறந்து பார்த்தான். யாருமில்லை. மறுபடி தாழிட்டு டேபிளைப் பார்த்தான். இவனின் துப்பாக்கியிருந்தது. அதன் வயிற்றில் கை வைத்துக் குதிரையை அகற்றிப் பார்த்தான். ஆறு ரவைகளும் பத்திரமாக இருந்தன. பின் எதற்கு அடித்தார்கள்?

தலை வலித்தது. தலை முழுதும் கலைந்து மண் ஒட்டிக் கொண்டிருந்தது. முகத்தில் காயம் எதும் இல்லை. பின் தலையில் சின்னதாய் முடிச்சு தென்பட்டது. இன்னொரு முறை முகத்தைப் பார்த்துக் கொண்டான்.

அப்பொழுதுதான் கண்ணில் பட்டது. சட்டையில் ஏதோ பேப்பர் ஒட்டியிருந்தார்கள். தடவிப் பார்த்தான். ஒட்டவில்லை. ஸ்டாப்லர் பின்னில் பதித்திருந்தார்கள். குனிந்து பார்த்தான்.

''இந்த வழக்கில் தலையிட வேண்டாம்! இந்த முறை கட்டிலில் இருந்தாய் உயிரோடு! இனிமேல் தலையிட்டால் கடலில் இருப்பாய் பிணமாக! கடைசி எச்சரிக்கை!"

அசோக்குக்குச் சந்தோஷமாக இருந்தது. சரியான இடத்தில்தான் மோதியிருக்கிறோம். என் தலையீடு யாருக்கோ பிடிக்கவில்லை. எச்சரித்து அனுப்பியிருக்கிறார்கள். நல்ல நண்பர்கள். அதிகமாக உடம்பைச் சேதப்படுத்தவில்லை. திருடவில்லை. பத்திரமாக என்னுடைய அறையிலேயே என்னை விட்டுச் சென்றிருக்கிறார்கள். கமிஷனர் ராஜசேகரனுக்குச் சொல்ல வேண்டும்.

அவசரமாய் மணி பார்த்தான், விடியற்காலை நான்கு நாற்பத்தைந்து.



ஏறக்குறைய ஆறு மணி நேரம் சுய நினைவில்லாமல் இருந்திருக்கிறேன். ராஜசேகரனை இப்பொழுது தொந்தரவு செய்ய வேண்டாம். என்ன செய்யலாம்? விரல்கள் தானும் வீதலுக்குப் போனில் சுழன்றது.

ஐந்து நிமிட சாவகாசத்திற்குப் பிறகு வீதல் 'எஸ்' என்றான்.

''ஐ யாம் அசோக்..."

''ம் சார்... உங்களுக்குப் போன் பண்ணினேன். நீங்க எடுக்கவேயில்லையே. இப்பத்தான் வந்தீங்களா?"

''ஆமாம்! எனிதிங் இம்பார்ட்டென்ட்?"

''யா... கமிஷனர் போன் பண்ணி உங்களை ரொம்ப அவசரமா பார்க்கணும்னாரு. எனக்குக் கடைசியா எட்டு மணிக்குப் போன் பண்ணிங்க. அப்புறம் நீங்க பண்ணல. உங்க ரூமுக்குப் போன் பண்ணினேன். நோ ரெஸ்பான்ஸ். அப்புறம் மறுபடி ஒரு மணிக்குப் போன் பண்ணிப் பார்த்தேன். ரெஸ்பான்ஸ் இல்ல... இன்பிட்வீன் கமிஷனர் போன் பண்ணி இனிமே இந்த நேரத்தில் உங்களை டிஸ்டர்ப்பண்ண வேணும். காத்தால பார்த்துக்கறேன்னாரு. ஐ ஜஸ்ட் கெப்ட் மம்..."

''காத்தால ஏழுமணி வரைக்கும் ரூம்லதான் இருப்பேன். கமிஷனர் வீட்டு டெலிபோன் நம்பர் இருக்கா?"

''நோ ஸார்... டிரை பண்ணிக் கொடுக்கட்டுமா?"

''வேண்டாம். நாலு மணியாறது. மனுஷன் நல்லா அசந்து தூங்கிட்டிருப்பாரு. டோண்ட் டிஸ்டர்ப் [illegible] தாங்க்ஸ். குட்நைட்..."

''குட் மார்னிங். பை..."

அசோக் தெளிந்திருந்தான். அலமாரியைத் திறந்து கறுப்பு வீரன் விஸ்கியை டம்ளரில் நிரப்பிக் கொண்டான். ஈஸிசேரில் சாய்ந்து கொண்டு கல்ப்பினான். நிதானமாய்ப் புகை விட்டான்.

முனுசாமியையும் பராசரனையும் அக்னிபுத்திரனையும் தவிர்த்தோ இல்லை சேர்த்தோ ஒரு கும்பல் இயங்குகிறது.

கொலைக்கும் இவர்களுக்கும் சம்பந்தம் இருக்கிறது. யதாவாத பொறுக்கொண்டிருக்கும் போக்கு தவிர என்னுடைய நுழைவு சம்பந்தப்பட்ட இவர்களுக்குப் பிடிக்கவில்லை. என்னைக் கொல்வது கூட அவர்களுக்கு நோக்கமில்லை. என்னை இந்தக் கேஸிலிருந்து அப்புறப்படுத்துவதுதான் முக்கிய நோக்கம். எதற்காக இருக்கும்? அசோக், யோசி. நிதானமாக யோசி! கணக்காய் அடுத்த வேலையை ஆரம்பிக்க இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறது. தூங்கப் போறேன்.

சுறுசுறுப்பாய்ச் சூரியன் இவனைச் சுட்டெரிக்க முயற்சித்த போது எழுந்தான். பரபரப்பாய் மணி பார்த்தான். எட்டைத் தாண்டி அரை மணி நேரம் ஆகியிருந்தது. அடுத்து என்ன செய்யலாம் என்று குளித்துக் கொண்டே யோசித்தான். ப்ரிஜ்ஜைத் திறந்து ஸாண்ட்விச்சை முழுங்கிக் கொண்டே நடைபயின்றபொழுது ப்ரிய தர்ஸினி சிணுங்கியது.

''ஹலோ!''

''ராஜசேகரன் ஹியர்.''

''ஹாய்! மார்னிங். ஏன் நேத்திக்குத் தேடினீங்களாம்... எனிதிங் ஸ்பெஷல்? இன்ட்ரஸ்டிங்கா?''

''சொல்றேன்... அதுக்கு முன்னாடி சின்ன விஷயம் வேணும். நேத்திக்கு வக்கீல் பராசரன் கிட்ட பேசிக்கிட்டிருந்தப்போ அவர் என்ன மூடுல இருந்தார்?''

''வாட் யூ மீன்?''

''என் கிட்ட சதாய்க்காதே! நேத்திக்கு நீயும் அவரும் திருட்டுத்தனமா ஹோட்டல்ல சந்திச்சுப் பேசினீங்கறது எனக்குத் தெரியும். அப்போதான் அவர் என்ன மூடுல இருந்தார்?''

''எப்படித் தெரியும் உங்களுக்கு?''

''சொல்லும் பொன்னான! பர்ட்டிகுலரா இன்னிக்கு செக்ஸ் ப்ரிஷியஸ். நேரடியா பதில் சொல்லு. ஏன் எதுக்குன்னு கேக்காதே! என்ன மூடுல இருந்தார்?''



''நல்ல மூடுலதான் இருந்தார்? செஷன்ஸ்லேயே எப்படி உங்களை உடைக்கப் போறார்னு சொன்னார்?''

''தாங்க்ஸ்! தட்ஸ் இனஃப்! அப்புறம் உன் முயற்சிகள் எப்படி இருக்கு?''

''காலங்கார்த்தால வேற விஷயம் பேசலாம்.''

''எனக்காக ஒரு உதவி பண்ணனும். மறைமுகமாக யாருக்காகவோ நீ இந்த கேஸ்ல தலைய நீட்டுறன்னு எனக்கு தெரியும். இப்போ உன்னோட நிலைமையைப் பத்தி நல்லா விசாரிச்சாச்சு. அடுத்த வாரத்லேந்து சுத்தமா மூணு மாசத்துக்கு உனக்குப் பெண்டிங் கேஸ்களே நிறைய இருக்கு. சும்மாயிருக்கிற நேரத்துக்கு காசு பண்ணலாம்னுதான் இதுல நுழைஞ்சிருக்கே. இந்தக் கேஸை பெர்ஸனலா துப்பறியறே! தட்ஸ் யுவர் பிஸினஸ். அதை விட்டுடு! எனக்காக நீ என்னவெல்லாம் கண்டு பிடிச்சேன்னு ஒரு ரிப்போர்ட் எழுதிக் குடுத்துடு. எனக்காகன்னு எனக்காக இல்லை. ஃபார் தி ஸேக் ஆஃப் ஜஸ்டிஸ்! வில் யூ?''

''கிரேட். கமிஷனரா ஆகிறதுக்கு முழுத் தகுதியும் இருக்கு. உன் புத்திக் கூர்மைக்கு என் பாராட்டுதல்கள் டிராக் மாத்திப் போடாதே. பராசரனுக்கு என்ன ஆச்சு?''

''காலங்கார்த்தால சொல்ல வேணும்னு பார்த்தேன். ஐயாம் ஸாரி! பராசரன் இஸ் டெட். ராதர் கமிட்டட் சூசைட்!''

''தற்கொலையா? என்னால நம்ப முடியல. நோ. இருக்காது. பராசரன் மாதிரி ஆசாமிங்க சத்தியமாகத் தற்கொலை பண்ணிக்க மாட்டாங்க. இந்தக் கேஸ்லயே உங்களை எப்படி செஷன்ஸோட மூட்டை கட்றதுன்னு அழகாச் சொன்னார். நோ. நோ இட் காண்ட் பீ. ஐ சஸ்பெக்ட்! ஃபார்யுவர் கைண்ட் இன்ஃபர்மேஷன் நேத்திக்கு நானே டிக்கெட் வாங்கியிருப்பேன். எப்படியோ தப்பிச்சுட்டேன்.''

''ஐ குட்ன்'ட் கெட் யூ.''

"நேத்திக்கு மத்யானத்லேந்தே என்னைச் சில நண்பர்கள் ஃபாலோ பண்ணிண்டு வந்தாங்க. ராத்திரி வள்ளுவர் கோட்டம் பக்கத்துல யூரின் பாஸ் பண்றதுக்காக ஒதுங்கினேன். மூணு பேர் அட்டாக் பண்ணுங்க. இரண்டு பேரைச் சமாளிக்க மூக்கைப் பேத்துட்டேன். மூணாவது ஆள் தலையில் தட்டிட்டான். அப்புறம் என்ன ஆச்சுன்னு ஒன்றும் ஞாபகமில்லே. விடியற் காலை நாலு மணிக்கு முழிப்பு வந்தது. எழுந்து பார்த்தா என் ரூமுல பத்திரமா இருக்கேன். நிச்சயமா வழிப்பறி கேஸ் இல்ல. என் பணம் கடிகாரம் எல்லாம் பத்திரமா இருக்கு. சட்டையில எழுதி ஒட்டியிருக்காங்க. இனிமே இந்த ஸெல்மா கேஸுல தலையை நீட்டினே உயிரோட இருக்கமாட்டேன்னு!"

"ஆர் யூ ஷ்யூர்? இப்ப எப்படி இருக்கே?"

"ஐயாம் ஆல்ரைட் நௌ. ஸோ உங்க தாப்பு ஊகம் அடிபட்டுப் போயிடுத்து. முனுசாமி நிச்சயமா இந்தக் கொலையைப் பண்ணியிருக்க முடியாது. நான் இந்தக் கேஸ்லேந்து விலகறதுனால் யாருக்கோ நல்லது சம்பவிக்கிறது. ஆனா அதுல லாபம் அடைபவர் நான் நிச்சயமா முனுசாமியில்லே. முனுசாமிக்காக ஆஜராக முயற்சித்த பராசரன் தற்கொலை பண்ணிண்டு...

"நோ, ராஜசேகரன், பராசரன் இந்த டைப் இல்லே! தற்கொலை பண்ணிக்கிற ஆசாமியில்லே."

"நானும் அதைத்தான் ஃபீல் பண்றேன். ஆனா எந்தத் தடயமும் இல்லே. தற்கொலைதான் பண்ணிண்டிருக்கார்ங்கற மாதிரி அட்டகாசமான செட்டப் இருக்கு. கதவு உள் பக்கம் தாப்பா போட்டிருக்கு. கைப்பட எழுதின லெட்டர் இருக்கு. சைலன்ஸர் பொருத்தப்பட்ட துப்பாக்கி இடது கையில இருக்கு. நோ சான்ஸ். இது தற்கொலை இல்லே, கொலைன்னு ப்ரூவ் பண்றது கஷ்டம். அடுத்தது இதை உனக்கு நேர்ந்த சம்பவத்தை வச்சு முடிச்சுப் போட முடியாது. பட் ஐ வில் திங்க் ஓவர் இன் ஸம் அதர் லைன். அடிச்சவங்க பேர்ல ரிப்போர்ட் ஏதாவது கொடுத்திருக்கியா?"



"இல்ல. கொடுக்கப் போறதில்லே. நான் சொன்னதை எதுக்கும் நோட் பண்ணி வச்சுக்குங்க. அப்புறமா கான்டாக்ட் பண்றேன். ஸீ யூ தென். அல்ரெடி இட்ஸ் லேட்!"

"பை."

அசோக் சுத்தமாய் வெளிறிப் போயிருந்தான். கார் என்னவாகியிருக்கும்? வள்ளுவர் கோட்டத்தில் உதை வாங்கிய போது கார் இருந்தது. இன்னும் அங்குதான் இருக்கும். எப்படி என்னைச் சாமர்த்தியமாக இங்கு எடுத்து வந்திருப்பார்கள்? லிஃப்ட் இயக்குபவனையும் சேர்த்துப் பத்துப் பேர்கள் இங்கு இருபத்து நான்கு மணி நேரமும் வேலைக்குத் தயாராக இருக்கின்றபோது எப்படி வந்து போனார்கள்?

யோசித்துக் கொண்டே படிகளைக் கடந்த பொழுது வாட்ச் மேன் மஜூம்தார் எதிர்ப்பட்டான். "கை சா ஹை சாஹிப்?" என்றான்.

"பஹுத் அச்சா ஹை."

"இல்ல. பொய் சொல்றீங்க. எங்க தம்பி குடிச்சாலும் இப்படியா கண்மண் தெரியாம குடிக்கறது? பெரிய வீட்டுப் பிள்ளை, நான் அட்வைஸ் பண்றது தப்பு! இருந்தாலும் தகப்பன் ஸ்தானத்திலிருந்து சொல்றேன். இதை விட்டுடுங்க. நேத்திக்குக் குடிச்சுட்டு வள்ளுவர் கோட்டம் பக்கத்துல கார்ல நிதானமே இல்லாமே இருந்திங்களாம். உங்க ப்ரெண்ட்ஸ் நல்ல வேளையா பாத்துட்டுப் பத்திரமா உங்களைக் கொண்டு வந்து ரூம்ல விட்டுட்டாங்க. நான்தான் அவங்களுக்கு உங்க ரூமைக் காண்பிச்சு உங்களைப் படுக்க வச்சேன். காரை ஷெட்ல விட்டுட்டாங்க. இந்தாங்க சாவி. என்னைத் தப்பா நினைக்காதீங்க. என் பிள்ளை மாதிரி நினைச்சுதான் சொன்னேன்." ஹிந்தியில் புலம்பினான்.

அசோக் தன்னைத் தாக்கியவர்களின் சமயோசிதத்தை மனதிற்குள் மெச்சினான். மூன்றாவது ஆளுக்குத் தெரியும விஷயம், சந்தேகத்திற்கு இடமில்லாமல் செய்திருக்கிறார்கள். வாழ்க!

மஜும்தாரைச் சமாளித்துக் காரை இயக்கினான். அடுத்ததாக என்ன மூவ்?

மினி.

ஸல்மாவின் தோழி—ஸல்மாவின் அறையில் அவளோடு சேர்ந்து இருப்பவள்—நேற்று பாஸ்டர்ட் என்று போனில் திட்டியவள்—ஸல்மாவுக்கு வாட்டர் ஃபோபியா என்று ஸல்மா, முனுசாமி தவிரத் தெரிந்த மூன்றாவது ஆசாமி.

மினி.

## 7

சிக்கலான சந்தின் நடுவில் விசாலமான பெரிய பழைய காலத்துக் கட்டடம். நிறையப் பெண்கள் முகத்துக்குப் பவுடர் அடித்துக் கொண்டு நவ நாகரிகமாக டம்பப் பை சகிதம் கிறீச்சிடும் கதவைத் திறந்து கொண்டு தரையில் கால் படாமல் சரியான இடைவெளிவிட்டு வெளியே போய்க் கொண்டிருந்தார்கள்.

அசோக் கொஞ்சம் நிதானித்து உள்ளே நுழைந்தான். வராண்டாவின் மூலையில் தினத்தந்தியில் மூழ்கியிருந்த பெரியவர் ஆண் வாசனைபட்டு நிமிர்ந்து இவனைப் பார்த்துச் சந்தேகமாய், "என்ன வேணும்?" என்றார்.

"இதுதானே மாதா பெண்கள் விடுதி?"

"ஆமாம்."

"மினிங்கறவங்களைப் பார்க்கணும்."

"நீங்க யாரு?"

"ப்ரெண்ட்."

"வாசல்ல நில்லுங்க. இருக்காங்களான்னு பார்த்துட்டுச் சொல்றேன்."

"வாசல்ல நிக்கறதுக்கு ஒரு மாதிரியிருக்கு. என் காரிலே தான் உக்காந்துட்டு இருக்கேன். வந்து சொல்லுங்க. என் பேர் அசோக். சரியா?"



'ம்.' சொல்லிவிட்டு நகர்ந்தார் பெரியவர். காருக்குள் நன்றாகச் சாய்ந்து கொண்டு போனியம்மை அலற விட்டான். சூழ்நிலையே துப்புரவாகப் பிடிக்கவில்லை. ஆனாலும் தொழில். அக்னிபுத்ரனிடம் காசு வாங்கியிருக்கிறோம். இந்தக் கேஸின் முக்கியமான முடிச்சு இவளிடம் இருக்கக் கூடும். சகித்துக் கொள் அசோக்! சகித்துக் கொள்! கொண்டான்.

சரியாய் ஐந்து நிமிடம் கழித்து 'மினி' காருக்கு வெளியே ஆஜரானாள். "யார் நீங்க? என்ன வேணும்?"

"என் பெயர் அசோக்! வக்கீல். முனுசாமிக்காக ஆஜராகறேன். உங்ககிட்டே பேசணும். உங்க ரூமைப் பார்க்கணும். இன்னும் ஸல்மாவோட இருந்த ரூம்லதானே இருக்கீங்க?"

"ம். நீங்கதான் நேத்தி போன் பண்ணதா?"

ஸ்மார்ட்! சரிந்து அவளைப் பார்த்தான். கேரளத்துக்குப் பக்கத்திலிருந்து வந்திருக்க வேண்டும். ஐந்தடி எட்டங்குல உயரத்தில் வசீகரமாய் இருந்தாள். அடர்த்தியாய் பஃப் வென்று பின்னால் பாயும் கூந்தல். சின்ன நெற்றி. நீளக் கண்கள். சற்றே மொண்ணையான ஜெ மூக்கு. அதில் தனியாய் கவர்ச்சி விட்டிருந்தது. லேசாய்க் கறுத்துப் போன உதடுகள். கன்னத்து எலும்பு சற்று மேடிட்டு அவளின் ஆகிருதிக்கு முகத்தை உயர்த்திக் கொடுத்தது. காதோரத்தில் தங்கம் கலந்த பூனை மயிர்ப் பாதை. மெலிசாய் செயின் அணிந்திருந்தாள். நடக்கும் போது பேசும்போது எல்லாம் ஒவ்வொரு அசைவிலும் எதிரொலியின் இதயத்தை வேகமாகக் கடத்த ஸஸ்பெண்டர் பிராவில் எக்கச்சக்கமாக மார்புப் பகுதி முயற்சித்தது. ஸ்லீவ் லெஸ் மாக்ஸி அணிந்திருந்தாள். பணம் தாராளமாய்ப் புழங்குவது உடம்பின்மினுமினுப்பில் தெரிந்தது. கே ஜி. இவளைப் பார்க்கவில்லை போலிருக்கிறது பார்த்திருந்தால் இவளையும் வளைத்துப் போட்டிருப்பான்.

"ஸ்மார்ட். போன்ல எதுக்கு எங்கம்மாவைத் திட்டினே?"

"ஸாரி. இப்ப எனக்கு வர்ற கால்ஸ்ல பாதி என் கூடப் படுத்துக்கறதுக்காகத்தான் இருக்கும். வேற வழியில்லாம

சில சமயங்கள்ல நான் ஒத்துக்கிட்டாகூட பொதுவாப் பிடிக்கறதில்லே. அதுதான். ஸாரி."

''உள்ள போய்ப் பேசலாமா? முதல்ல உங்க ரூமைப் பார்க்கணும்."

''சாதாரணமா ஆண்களை அனுமதிக்கறதில்லே. நான் எதுக்கும் பர்மிஷன் வாங்கிட்டு வந்துடறேன். அப்புறம் தொந்தரவு. இங்கதான் தொடர்ந்து இரண்டு வருஷம் சண்டையில்லாம இருக்கேன்! இங்கேயும் தகராறு வந்தா எனக்கு வேற போக்கிடமே கிடையாது. கொஞ்சம் வெயிட் பண்ணுங்க..." துள்ளிக் கொண்டு ஓடினாள்.

இதுவரை பார்த்து வந்தவர்களிடையே இவள் வித்யாசமாக அசோக்கிற்குப் பட்டாள்... இவளின் பேச்சில் செயலில் பாவப் பிரதிபலிப்பில் தேவைக்கு அதிகமான நடிப்பு இருந்தது. பொய் சொல்லாமல் இருப்பதாக மற்றவர்களுக்கு காஷுவலாகப் பிரகடனப்படுத்தும் முயற்சி தெரிந்தது. வியாபார சாமர்த்தியம் இருந்தது. இவள் மூலமாகத்தான் வாட்டர் ஃபோபியா விவகாரம் கமிஷனர் ராஜசேகரனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். மனுஷன் சுத்தமாக அமுக்கி விட்டான். சாதாரணமாக நைச்சியமாகப் பேசி இவளிடமிருந்து உண்மையைக் கறப்பது லேசுப்பட்ட காரியமில்லே. நடிக்க வேண்டும். புதியதாய்ச் சம்பவங்கள் கோர்த்துக் கதை சொல்லி அதில் இவளைத் திணிக்க வேண்டும்.

எப்படிக் கதையை உருவகப்படுத்தலாம்? நான் இதில் விசாரிப்பது போலீஸ் விதிகளுக்கு மாறுனது. ஒரு கொலை பற்றிய விசாரணை நடந்து கொண்டிருக்கும் பொழுது அதிலும் குறிப்பாய் போலீஸ் கோர்ட்டுக்குத் தங்கள் தரப்புச் சாட்சியங்களை வைப்பதற்கு முன்னால் பாரலல் இன்வெஸ்டிகேஷன் நடத்துவது இந்தியப் போலீஸ் சட்டத்தின்படி இந்தியக் கிரிமினல் புரொஸிஜர் ஆணைப்படி தவறு. தகராறு வந்தால் சமாளித்துக் கொள்ளலாம்.



''வாங்க—'' மினி கூப்பிட்டாள்.

வயிற்றின் ஒரு ஓரத்தில் பசித்தது. சிகரெட் பிடித்தான். மினியின் எதிர்ப்பிற்கு முற்றிலும் விரோதமாய் ரூம் அழகாய் இருந்தது. சுவர்கள் வால் பேப்பர் டிஸைனில் தன்னின் நிர்வாணப் பொத்தல்களை மறைத்துக் கொண்டிருந்தன. சின்ன ரூமுக்கு இரண்டு பக்கத்திலும் 'ஸல்மா' அழகாய்ச் சிரித்துக் கொண்டிருந்தாள். மூலையில் சின்ன இருள் மானிட்டருடன் வீடியோ இருந்தது.

வீடியோ.

தரமான ப்ளாஸ்டிக்கில் மொழுகிய இரண்டு சின்ன அலுமினிய நாற்காலிகள், ரீடிங் டேபிள். சுவரில் இருந்து சமர்த்தாய்த் தலையை நீட்டிக் காற்று விடும் 'அல்மோர்னட்'டின் விசிறி. நட்ட நடுவில் செக்கச் செவ்வகமாய்க் குட்டிக் கம்பள விரிப்பு. மூலையில் குஷன் போட்ட இரண்டு படுக்கை அலமாரியின் தன்மை மாதி அலங்காரச் சாதனங்கள் ரொம்பி கள்! வழிந்தது. சாம்பிளுக்கு இண்டிமேட் செண்ட். எலக்ட்ரிக் ட்ரையர். மூலையில் ஸ்பெஷலாய் வாஷ்பேஸின். அசோக்கின் மூளை அவனிடம் பர்மிஷன் கேட்காமல் தானாகச் செயல்பட ஆரம்பித்தது.

''மினி! ஸல்மா கூட எவ்வளவு நாளா தங்கியிருக் கிங்க...?" புகையை மெலிதாய் வெளிவிட்டுக் கொண்டே ஆஷ்டிரேயைப் பார்த்தான்.

''எவ்வளவு நாள்னு கேக்கறிங்க? ரெண்டு வருஷம்!"

''ரெண்டு வருஷம் ரொம்பதாங்க ஒருத்தரைப் புரிஞ்சிக் கறதுக்கு. ஸல்மா பத்தி உங்களுக்குத் தெரிஞ்சது புரிஞ்சது எல்லாத்தையும் சொல்லுங்க."

''ஸல்மா நல்ல பொண்ணு. காசுக்காக நிறைய தப்பு பண்ணும். அதெல்லாம் உண்மையான தப்புதான்னு சொல்ல முடியாது. விதி."

''சபாஷ்! கலப்பில்லாம நடிக்கறிங்க. கம் ஒவர் டு த பாயிண்ட்! ஸல்மாவுக்குத் தண்ணியைக் கண்டா பயம். வெரிச்

சம்மா பீச்சுல குளிச்சிருக்க மாட்டா! இது கொலை. விபத்து கிடையாது. இந்தக் கொலையை முனுசாமிதான் செஞ்சிருக்கணும்னு போலீஸ்ல சொன்னது நீதானே?"

மினி முதல் தடவை வியர்த்தாள். லேசாய் உடல் அதிர்வது தெரிந்தது.

கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு மினியின் கண்களைச் சந்தித்தான்.

பதிலில்லை.

"ஸல்மா கே. ஜி. கூட சுத்திட்டிருந்தது உனக்குத் தெரியும். ஏன், கே. ஜி.யைக் கூட உனக்கு நல்லா பெர்ஸனலாத் தெரியும். கே. ஜி. யை ஸல்மா கூட்டிண்டு ஊரட்டி அடிக்கறது உனக்குப் பிடிக்கல்ல. சரியான ப்ளான் பண்ணி ஸல்மாவைத் தீர்த்துக் கட்டிட்டு அவளோட கம்மலை முனுசாமியோட வீட்ல போட்டுட்டு புத்திசாலித்தனமா போலீஸ் உன்கிட்ட வரவரைக்கும் காத்திட்டு இருந்தே. உனக்கு முன்னாலேயே முனுசாமி ஸல்மாவை நச்சரிக்கிறான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு, சொல்லிண்டு திரியறான். அடிக்கடி இது சம்பந்தமா ரெண்டு பேரும் பப்ளிக்கா சண்டை போட்டுக்கிறாங்க. அப்படி இப்படின்னு நிறைய விஷயங்களைச் சேகரிச்சு வச்சிருக்கே. சுலபமா முனுசாமியை இந்தக் கேஸிலே மாட்டி விட்டுட்டே. நீ புத்திசாலியான பொண்ணாயிருந்தா என்கிட்ட உண்மையைச் சொல்லிடு. முனுசாமியோட சேர்த்து உன்னையும் காப்பாத்தறேன். இல்லை...?"

வார்த்தைகளை அப்படியே முழுங்கினான்.

மினி மொத்தமாய் அடிபட்டுப் போவதைத் திருப்தியாய் அசோக் பார்த்தான். இந்தச் சிக்கலின் நுனி இவளிடம்தான் இருக்கிறது. யூகம் தவறவில்லை. அவள் கண்களில் லேசாய் நீர் கோர்த்துக் கொண்டதை உணர முடிந்தது.

"சார்! தயவு செய்து என்னைச் சந்தேகப்படாதீங்க. எனக்குச் சத்தியமா கே.ஜி. யைத் தெரியாது. இரண்டு



மூணு வாட்டி ஸல்மாவுக்கு கே. ஜி. போன் பண்ணபோது ஸல்மா இல்லை. நான் பேசினேன். அவ்வளவுதான். தண்ணியைக் கண்டா அவளுக்குப் பயம்னு நான்தான் போலீஸ்ல சொன்னேன். எனக்கு அவ பேர்ல பொறாமையில்லை. எங்களை மாதிரி பொண்ணுங்க நிச்சயமா கல்யாணம் அது இதுன்னு நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது. உங்களுக்காகச் சொல்றேன். போலீஸ்ல கூட இதப் பத்தி சொல்லல. வெளில பேருக்கு நடிகைன்னு சொல்லிட்டு இருக்கேனே தவிர நான் நிறைய ஹோட்டல்ல காபரே டான்ஸ்ஆடறேன். பணக்காரங்களுக்கு கம்பெனி கொடுக்கறேன். எனக்கு முனுசாமியைத் தெரியும். அவன் ஸல்மாவைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொல்லிண்டு திரிஞ்சது எனக்குத் தெரியும். போலீஸ்ல கேட்டபோது முனுசாமியை வேணும்னு இதே வாட்டர் ஃபோபியா பத்திக் கேட்டுப் பாருங்கன்னு சொன்னேன். அவ்வளவுதான். என்னை விட்டுடுங்க."

இன்னொரு 555 சிகரெட்டிற்கு உயிர் வந்தது.

"நீ சொன்ன மாதிரி எல்லாம் விதி. விதியை மாத்த முடியாது. பொய் சொல்லறே. உன்னைப் பலாத்காரப்படுத்தி உண்மையை வரவழைக்க எனக்கு இஷ்டம் இல்லை. கோர்ட்ல உன்னை நீயே காப்பாத்திக்க. ஆமா, கடைசியா கே. ஜி. யோட போனை எப்போ ரிஸீவ் பண்ணே — ஸல்மா இல்லாத போது?"

"குழப்பத்துல சரியா எனக்கு ஞாபகமில்லை. கொலை நடந்த அன்னிக்குப் பதினேழாம் தேதின்னு நினைக்கிறேன். மத்தியானம் சுமார் ரெண்டு ரெண்டரை மணி இருக்கும்."

"ஸல்மா அப்போ எங்கே இருந்தா? இல்லை, எங்கே போயிருந்தா?

"ஸல்மா பாத்ரூம்ல குளிச்சிட்டு இருந்தா. என்னைப் போய் போனை அட்டெண்ட் பண்ணச் சொன்னா."

"கேட்டிருப்பியே கே. ஜி. எங்கேயிருந்து போன் பண்றார்னு?"

''கேட்டேன்! ஸல்மாவுக்குத் தெரியும்னு போனை வச்சுட்டார்.''

''பொய்! சரி, எங்கேயிருந்து போன் பண்றார்னு ஊகிச்சிருப்பியே? தெரிஞ்சிருக்கணுமே. அவ்வளவு நாள் ஸல்மா கூட இருந்ததுல அகஸ்மாத்தா கூட ஸல்மா சொல்லலையா — கே. ஜி. எங்கேயிருந்து போன் பண்ணுவார்னு?''

சத்தமாய் அழுதாள் மினி.

''சார்! சத்தியமாகச் சொல்றேன். எனக்கும் இதுக்கும் சம்பந்தமில்லே. இந்த மாதிரி பெர்ஸனல் விவகாரத்தையெல்லாம் நானும் கேக்க மாட்டேன். அவளாவும் சொல்ல மாட்டா. ஏன்னா எங்க தொழில் அசிங்கமான தொழில்னு எங்களுக்கே தெரியும். விவகாரங்களில் டைப்பா போனா இரண்டு பேருமா அன் ஈஸியா ஆயிடுவோம்னு ரெண்டு பேருக்கும் தெரியும். ஸோ...''

''அன் ஈஸியா ஃபீல்! இங்கிலீஷ்...?''

''பத்தாவது வரைக்கும் கான்வென்ட் எஜுகேஷன்.''

''குட்... அப்போ உங்களுக்கு கே. ஜி. எங்கேயிருந்து போன் பண்றாருன்னு சத்தியமாத் தெரியாது!''

''தெரியாது! ஆனல்...''

''ஆனல்...''

''ஒருவேளை ஸீ வியூ பீச் ரிஸார்ட்லேருந்து இருக்கலாம். போன மாசம் ஒருத்தருக்கு ரெண்டு நாள் முழுக்கக் கம்பெனி குடுத்தேன். அப்போ ஸல்மாவை அங்க பார்த்தேன். நாங்க ரெண்டு பேரும் எதிரெதிரே பார்த்தும் கூட பேசிக்கலே. அந்த இடம் பணக்காரங்க இருக்கற இடம். ஸல்மாவுக்கு இப்போ ஒரு ஆறு மாசமா இருக்கற ஒரே பணக்காரத் தொடர்பு கே. ஜி. யாத்தான் இருக்கணும்கறது என் ஊகம். இது முழுக்க முழுக்க என்னோட அபிப்ராயந்தான். ஒரு வேளை என்னோட கணிப்பு தப்பா கூட இருக்கலாம்...''



''கிரேட்! அழகா பொய் சொல்றே. இந்தா பாரும்மா, முனுசாமியைக் காப்பாத்தணும். அதுதான் என்னோட ஒரே நோக்கம். இதுல ஒரு வேளை நீ மாட்டிக்க நேரிடலாம். ஐ கான்ட் ஹெல்ப்! உண்மையா நீ இந்தக் கொலையைச் செய்யலே. உனக்கு இதுல சம்பந்தம் இல்லன்னு கடவுளாப் பார்த்து உன்னை விட்டுடுவார். எதுக்கும் என் கூட மனசு விட்டுப் பேசி பிரச்சினையிலிருந்து வெளிச்சம் வரும்னு உனக்கு எண்ணம் இருந்தா, நாளைக்கு நான் போன் பண்ணறேன். ரெஸிப்ரோக்கலா இரு. தட்ஸ் ஆல்...''

எழுந்து அறையை விட்டு வெளியே வந்து காரை எழுப்பியபோது நிம்மதியாக இருந்தது. மினி பொய் சொல்லவில்லை. ஆனல் எதோ ஒன்றை மறைக்கிறள். என்ன அது! நல்ல பெண். பாவம். அவள் மறைப்பது எது?

ஸ்ரீ வத்ஸன் சொன்ன ஸீ வியூ பீச் ரிசார்ட்டில் ஒரு வேளை விடை இருக்கலாம்......

மஹாபலிபுரத்திற்குத் திரும்புவதற்குள் அவசரப்பட்டுக் கொண்டு கடற்குதிரை தலையைப் பெரிசாய்—பிரமாண்டமாய் நீட்டிக் கொண்டு உள்ளே வந்துதான் பாரேன் என்றது.

உள்ளே நுழைந்ததும் பித்தளையில் எழுத்துக்கள் செய்து தென்னை மரத்தில் ஒட்டியிருந்தார்கள்.

ஸீ வியூ பீச் ரிசார்ட்.

செயற்கை அருவியில் தெலுங்குப் பாட்டுக்கு உடம்பில் இரண்டே இரண்டு கர்சீஃப் மட்டும் மாட்டிக் கொண்டு கறுப்பு அழகி வெயிலில் மகிழ்ச்சியாய் உதட்டசைக்க ஏரிஃப்ளெக்ஸ் காமிரா விவஸ்தையில்லாமல் அவளின் அசைவுகளை விழுங்கிக் கொண்டிருந்தது. ஷூட்டிங்கிற்காக நாற்பது பேர்கள், வேடிக்கை பார்க்க நாற்பது பேர்கள்.

அசோக் தவிர்த்து ரிஸப்ஷனைப் பார்க்க நகர்ந்தான். பீச் மணலில் கூரைக் கொட்டகைகளை நேர்த்தியுடன் கட்டி ஏ.ஸி. வைத்து 'காட்டேஜ்' என்று பெயர் சூட்டி இருநூற்றைம்பது

ரூபாய்க்கு இருபத்திரண்டு மணி நேரங்களுக்கு வாடகைக்கு விட்டிருந்தார்கள். வரவேற்பறைப் பெண் இவனைப் பார்த்து, ''வாட் கேன் ஐ டு ஃபார் யூ?'' என்றாள்.

அசோக்கிற்கு அவளிடம் விளையாட வேண்டும் போலிருந்தது. ப்ளேபாய் ஜோக் சொல்ல வேண்டும் போல் இருந்தது.

தவிர்த்தான்.

''என் பேர் அசோக். என் பிரண்ட் கே. ஜி. வொய்ஃப் போட இங்க தங்கியிருக்கான்னு கேள்விப்பட்டேன். ஐயாம் ஃப்ரம் பாங்களூர்...''

''யா... கேசவ் கோவிந்தன்னு ஒருத்தர் காட்டேஜ் நம்பர் 46-ல் இருக்கார். இப்ப இருக்காரான்னு தெரியாது. ஏன்னா, காட்டேஜ் கீயை அவரே வெச்சிண்டிருக்கார்.''

''குட்.''

கே. ஜி... கிருஷ்ண கோபால் பெயரை மாற்றிக் கொண்டிருக்கக்கூடும். சாதாரணமாக கே. ஜி. என்ற இனிஷியலில் பழக்கப்பட்டுப் போன பெயர் எக்குத்தப்பாக யாராவது எதிர்ப்பட்டாலும் சந்தேகத்திற்கு இடம் இருக்காது. சமாளித்துக் கொள்ளலாம் என்று யோசித்திருக்கிறான். ஒரு வேளை வேறு ஆளாகவும் இருக்கலாம். எதற்கும் போட்டோ கையில் இருக்கிறது... சரி பார்த்துக் கொள்ளலாம்.

''எக்ஸ்கியூஸ் மீ, நீங்க வேற யாரையாவது சொல்லப் போறீங்க! இந்தப் போட்டோவில் இருக்கிற ஆள்தானு பாருங்க...''

பார்த்தாள்.

''யெஸ்! இவரேதான்! பயப்படாம போய் கதவைத் தட்டுங்க. ஆமாம், இஃப் யூ டோண்ட் மைண்ட்...ம்...'' தயங்கினாள். அசோக் சுறுசுறுப்பானான். ஏதோ சஸ்பென்ஸ் இருக்கிறது.



''என்ன சொல்றீங்க... நான் கேன் கிளியர் யுவர் டவுட்...''

''தப்பா நினைச்சுக்காதீங்க. உன்கூடயிருப்பது அவங்க ஒய்ஃபா? அவருக்கும் இவங்களுக்கும் பொருத்தமே இல்லே. லுக்ஸ் லைக் எ கண்ட்ரி பிட்ச். ஸாரி...''

''டலேண்ட் மேட்டர்! கே. ஜி பத்தி ஏதாவது கமெண்ட் அடிச்சாத்தான் எனக்குக் கோபம் வரும். பை தென் தாங்க்யூ!''

நகர்ந்தான். காட்டேஜ் நம்பர் நாற்பத்தாறு பூட்டியிருந்தது.

ரிஸார்ட்டின் மூலையிலிருந்தது... மெயின் ரோடு வழியாக உள்ளே வரத் தேவையில்லை. பக்கவாட்டில் சின்ன வழி இருக்கிறது. கார் மறைவாக வந்து ஒளிந்து கொள்வதற்குக் கம்பி வேலிக்கு நடுவே சின்னக் கம்பிக் கதவு. வேலிக்கும் கதவுக்கும் வித்தியாசம் தெரியாது.

தாண்டினால் அடர்த்தியாக சவுக்குத் தோப்பிற்குப் பிறகு நேரடியாக பீச். கே. ஜி. அட்டகாசமாக இடம் தேர்வு செய்திருக்கிறான். இவனின் நடவடிக்கைகள் விளையாட்டுக்கள் ஹோட்டலுக்கு உள்ளேயே கூடத் தெரிவதற்கு வாய்ப்புகள் இல்லை. மொத்தமாக ஒரு மாசத்திற்கு வாடகை அட்வான்ஸாகக் கொடுத்திருப்பான். இப்பொழுது இல்லை. வெளியே எங்காவது சென்றிருக்க வேண்டும். விசாரிக்காமல் வந்து விட்டோம்.

அதுவும் நல்லது. இரவு தனியாக உள்ளே நுழைந்து பார்க்கலாம். ஏடாகூடமாக ஏதாவது நடந்து விட்டால் கூடத் தப்பிப்பதற்கு வழி இருக்கிறது. சுற்றிலும் பார்வையை ஒரு முறை சுழலவிட்டு நடை பயின்று யோசித்தான். ஆட்டை அடித்து மாட்டைக் கடித்துக் கடைசியாய் கே. ஜி. இருக்குமிடத்தைக் கண்டுபிடித்தாகி விட்டது. அக்னிபுத்ரனிடம் ஒப்புக்கொண்டது கொலைக்கும் இவனுக்கும் சம்பந்தம் இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிவதுதான்—கிருஷ்ண கோபால் இப்பொழுது எங்கு இருக்கிறான் என்கிற இரண்டு கேள்விகளுக்குப் பதில் கண்டுபிடிக்க.

முதல் கேள்வியான கொலைக்கும் இவனுக்கும் சம்பந்தம் இருக்கிறதா என்கிற கேள்விக்குப் பதில் தெரியாது. அலிபி கிடைக்காதவரைக்கும் முனுசாமியின் இரண்டாவது கேள்விக்குப் பதில் இன்றிரவு தெரிந்துவிடும். கிருஷ்ணகோபால் இந்தக் காட்டேஜில்தான் இருக்கிறான். பகலில் எங்கு சுற்றினாலும் இரவில் இங்கு வரத்தான் வேண்டும். அக்னிபுத்ரன் வீட்டுக்குக் கடந்த ஒரு வாரமாகச் செல்லவில்லை. ரகஸ்யமான இடமாக இது ஒன்றுதான் இருக்க முடியும். எதற்கு வெளிவர — வெளியே உலவப் பயப்படுகிறான்? ஸெல்மாவின் கொலையில் தன்னைச் சிக்க வைத்து விடுவார்களோ என்கிற பயமா? இருக்க முடியாது. என்ன காரணம்?

அசோக் யோசித்துக் கொண்டே காரைச் செலுத்தினான். எதேச்சையாகக் கண்ணாடியைப் பார்த்தான். கறுப்பு அம்பாஸிடர் தெரிந்தது. இப்பொழுது சண்டை கூடாது. எதற்கு என்னைத் தீர்த்துக் கட்ட ஒரு கும்பல் திரிகிறது?

ஆக்ஸிலேட்டரில் காலை வைத்து வேகத்தை அதிகரிப்பதற்குள்ளாக கறுப்பு அம்பாஸிடர் முந்திக் கொண்டு இவனின் காரை இடது பக்கத்தில் முழு வேகத்தோடு இடிக்க சமாளிப்பதற்குள் இவனைக் கேட்காமலேயே இவன் கார் ரோடிலிருந்து இறங்கி, மடமடவென நகர்ந்து. மழைத் தண்ணீர் ரோட்டைக் கடக்கப் போடப்பட்ட குட்டிப் பாலத்தின் மேட்டில் இடித்து நின்றது. காரை ரிவர்ஸில் எடுத்துத்தான் ரோட்டைப் பிடிக்க முடியும். தயங்கினான்.

பின்னால் கார் உறுமி நிற்கும் ஒலியும் கதவு அடிக்கும் சப்தமும் கேட்டது.

பரபரப்படாமல் இவனும் கதவைத் திறந்து சரிவுப் பாதையில் கால் வழுக்க மெதுவாய் நகர்ந்து காரின் முன் பக்கம் குனிந்து வந்தான்... இன்னும் சற்று நகர்ந்து இடது காலைத் தரையில் ஸ்திரமாக ஊன்றிக் கொண்டு வலது காலைக் காற்றில் அலைய விட்டு உடல் முழுவதையும் இறுக்கிக் கொண்டு முதலில் எதிர்ப்படும் ஆசாமியைத் தாக்கத்தயாராக நின்ற



பொழுது எதிர்பாராத விதமாக இருட்டில் பலமாக யாரோ குத்த சட்டென்று இடம் பெயர்ந்து சரிவான மணல் தரையில் விழுந்தான். நிமிர்வதற்குள் அவுட்ஆஃப் போகஸிலிருந்து போகஸிற்குக் கால் சென்று பெரிதாக விழுவது தெரிந்தது.

முழுவதுமாக ஆள் பாதையிலிருந்து விலகி அடி வயிற்றில் பலம் முழுக்கச் சேர்த்து உதைத்தான். காற்றில் காலத்தை உணர்ந்து அனிச்சையாய்ப் பின்னால் திரும்பி எதிர்ப்பட்டவனின் முகத்தில் கையை வீசினான். நேற்றைய அடியில் நசுங்கிப் புதிதாய் பிளாஸ்டர் ஒட்டிக் கொண்டிருந்த மூக்கு இன்னொரு முறை உடைந்து ரத்தம் பீசிறியடித்தது. மூன்றாவது ஆள் நெருங்கு முன் இவன் எதிர்த்து அவனிருகையையும் தன் சக்தியத்தனையும் பிரயோகித்துப் பின் புறமாக இடுப்பில் உதைக்க இடுப்பில் ஏதோ எலும்பு முறியும் சின்னச் சப்தம் கேட்டது.

அசோக் திருப்தியாய் இன்னொரு முறை பார்வையைச் சுழல விட்டுக் கைகளை இழுத்து வைத்துக் கொண்டிருந்தான். இரண்டு பேர்கள் சுருண்டிருந்தார்கள். மயக்கமாய் இருக்கும் மூன்றாவது ஆசாமி மூக்கைப் பிடித்துக் கொண்டு ஓடினான். கண நேரம் தயங்கி பின் இவனும் துரத்திக் கொண்டு போய்ச் சட்டையைப் பிடித்து இழுத்துப் போட்ட பின் மல்லாந்து விழுந்தவன் எழுந்திருக்கு முன்பாக முழங்கால் மடக்கி நெஞ்சில் திணித்துக் கொண்டு அவனின் தலை மயிரைக் கொத்தாகப் பிடித்துக் கொண்டு இழுத்துக் கேட்டான்.

"பாஸ்டர்ட்! எதுக்குடா என்னைத் துரத்தறே? யார் உன்னை ஏவினது?"

பற்களை இறுகக் கடித்துக் கொண்டு இவன் கீழ் இருந்தவன் இவன் பார்வையைத் தவிர்த்தான்.

'ஒச்—' இவனது வலது முஷ்டி நைந்து போயிருந்த அவனது மூக்கை இன்னொரு முறை பதம் பார்த்தது.

நெளிந்தான்.

"பதில் சொல்லலேலே தீர்த்துக் கட்டிடுவேன். உன் பேரென்ன?"

''லோ...லோக்கு...''

''லோக்கு... கீழ கிடக்கறாங்களே ரெண்டு பேர்—அவங்க பேரென்ன?''

மறுபடி இரண்டு உபசரிப்புகள். இப்பொழுது மெதுவாய் அவன் முகத்திலிருந்து ரத்தம் சொத சொதத்து பாண்ட்டை நனைக்க முயற்சி செய்திருந்தது.

''ரவி...தன்ராஜ்.''

''எதுக்கு என்னை வெறி நாயாட்டம் துரத்தினீங்க? யார் அனுப்பிச்சது என்னைத் தீர்த்துக் கட்ட?''

பதில் சொல்லவில்லை. புறங்கையால் நெற்றியில் அறைந்தான். தொண்டையை விரலால் நீவி அழுத்தினான்.

''சொல்லு...''

''ஐயோ! ஐயய்யோ! கொல்றாங்களே! கொல்றாங்களே!''

முழங்கையை மடித்து மறுபடி நெற்றியில் சக்தியாய் இடித்தான். ''கத்தாதே! சொல்லு! யார் உன்னை ஏவினது?''

''சொல்றேன். அடிக்காதீங்க! நாங்க முனுசாமி எல்லாம் சேர்ந்து பதினேழாம் தேதி ராத்திரி கர்நாடகா பாங்கைக் கொள்ளையடிச்சோம். அதுல முனுசாமி இந்தக் கொலைக் கேஸில மாட்டிக்கிட்டான். அவன் இந்தக் கொலைக் கேஸிலேயிருந்து தப்பிக்கணும்னு கொலை நடந்த நேரம் எங்ககூடத் தான் இருந்தான்னு சொல்லணும்... அப்படிச் சொன்னா அவனை வெளியில வந்தப்புறம் தீர்த்துக் கட்டிடுவோம்னு சொன்னோம். ஆனால் அவன் சொல்லல, கோழை. எங்க கிட்ட மாட்டிக்கறதுக்குப் பதிலா தூக்கிலே தொங்கலாம்னு அப்படியே மறைச்சுட்டான்...''

''ம் சொல்லு...இன்னொரு பஞ்ச்.''

''அடிக்காதீங்க! சொல்றேன்! இப்போ நீங்க பூந்து இதைப் பத்தியெல்லாம் விசாரிச்சா நாங்க மாட்டிக்குவோம். அதனாலதான்...''

''கொள்ளையடிச்ச பணத்தை எங்க வச்சிருக்கீங்க?''

''உங்களிட்ட எதுக்குச் சொல்லணும்?''



அசோக் அவனின் வயிற்றைத் தடவி முழங்கையால் பலமாகத் தாக்க... ''என்னை விட்டுடுங்க! என்னை விட்டுடுங்க! கொல்லாதீங்க! கொல்லாதீங்க!''

தலை துவண்டது. மூர்ச்சையானான்.

அசோக் மணிக்கட்டைத் திருப்பி மணி பார்த்தான்.

7 10 15...

ஒவ்வொருத்தராக வாரிக் காரில் போட்டுக் கொண்டு ரிவர்ஸில் எடுத்துப் போட்டுக் கொண்டு திருவான்மியூர் போலீஸ் ஸ்டேஷனில் அவர்களை ஒப்படைத்து விட்டு கமிஷனர் ராஜசேகரனுடன் போனில் பேசினான் அசோக்.

''ஸல்மாவை யார் கொலை பண்ணதுன்னு கண்டு பிடிச்சேனோ இல்லையோ கர்நாடகா பாங்க் கொள்ளைக்காரங்களைப் பிடிக்க உள்ள தன்னியார்ச... ஃபார்மாலிட்டீஸெல்லாம் நீங்க பாத்துக்குங்க. முனுசாமியோட 'அலிபி' இவங்கதான். ரெஃபர் இட் லேட்டர். கொஞ்சம் அதிகமாக அடிச்சுட்டேன், பரவாயில்லையா?''

''வாரே வாவ்! முனுசாமியைச் சொன்ன மாதிரி தப்ப வச்சுட்டீங்க! எனி ஹௌ, தாங்க்ஸ்! இந்த வீக் எண்ட் என் செலவுல ட்ரீட் தரேன். திருவான்மியூர் லாக்கப்லே நண்பர்களை விட்டிருக்கீங்க! மத்ததை நான் பார்த்துக்கறேன். தாங்க்யூ ஸோ மச்...''

அசோக் மறுபடியும் ஸீ வியூ ரோட்டுக்குத் திருப்பிய போது மணி எட்டு முப்பத்தைந்து.

ஏறக்குறைய ஹோட்டல் மூடியிருந்தது. பின் பக்கப் பாதையில் கே. ஜி. யின் காட்டேஜை நெருங்கினான். காரை மறைவாய் நிறுத்திவிட்டு காட்டேஜின் வாசலில் நின்றான். பெயர் தெரியாத சாதாரணப் பூட்டு தொங்கியது. திறக்கலாமா? வேண்டாமா?

ட்ரெஸ்பாஸிங் இஸ் பனிஷபிள்.

வேறு வழியில்லை.

திறந்து தன்னிடமிருந்த சாவியெல்லாம் ஒவ்வொன்றாகப் போட்டு உருப்பினான். க்ளிக். பூட்டு மசிந்தது.

உள் நுழைந்து கதவை மறுபடி சாத்திக் கொண்டான். ஸ்விட்ச் போர்ட் தேடி அழுத்தினன். மென்மையாய் நில ஒளி.

சீக்கிரமாகக் காரியத்தை முடிக்க வேண்டும். எந்தச் சமயத்திலும் கே. ஜி. வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

இரண்டு பேப்பர்கள் இருந்தன. தினத்தந்தி. ஹிந்து. தேதி 18-6-83. கொலை நடந்ததைப் பற்றிய விவரம் அடங்கிய பேப்பர்கள். வேஸ்ட் பேப்பர் பாக்சில் கலரில் கிழிக்கப்பட்ட போன் நம்பர்கள். ஒன்று இவனுக்குத் தெரியும். அக்னிபுத்ரன் வீட்டு நம்பர். இன்னொன்று ஸெல்மா—மினி ஹாஸ்டல் நம்பர். எதற்காக எழுதியிருக்கிறன்?

காலி டம்ளர். பாதி குறைந்த பாட்டில். ஆக—குடித்திருக்கிறன். சகஜம். அடுத்ததாகச் சின்ன ஹால் மாதிரியான பெட்ரூம். டபுள் காட். அப்புறம் சின்ன பாத்ரூம். இருநூற்றைம்பது ரூபாய் வாடகை அதிகம். பாத்ரூமில் இரண்டு டூத் பிரஷ்கள். ஸேஃப்டி பின்கள், கொண்டை வலை. ஸானிடரி நாப்கின்னின் டப்பா. ஐந்தாறு தலை வாரும் சீப்புகள். பியர்ஸ் சோப் டப்பா. டி. டி. கே. கொஸ்மெர் பாக்கெட்.

மற்றப்படி போனால் போகிறதென்று லாபரெட்டரி மூலையில் எரிந்து போன சிகரெட் துண்டு. எடுத்துப் பார்த்தான். 555.

விசேஷமாய்த் துப்பு எதும் கிடைக்கவில்லை. என்ன செய்யலாம்? கடைசியாய் கே. ஜி. இங்கே எப்ப வந்தான் என்று தெரிய வேண்டும். மறுபடி பெட்ரூமிற்கு வந்தான். சுத்தமான படுக்கை. படுக்கை விரிப்பு கூடக் கலையாமல் இருந்தது. தேவைக்கதிகமாய் இண்டிமேட் செண்ட்டின் வாசனை. ஹாங்கரில் சட்டைகள்—பாண்ட்ஸ். ஒரே ஒரு ஓவர் கோட்.

மூலையில் கட்டிலின் தலைமாட்டில் பெரிய அரிஸ்டோகிராட் சூட்கேஸ். அதில் என்ன இருக்கும்... திறக்கலாமா? யோசித்துப் பின் கட்டிலில் முழங்கால் வைத்து சூட்கேஸை எடுக்க முயற்சிக்க இரண்டு கட்டிலும் இணைந்திருந்த நடுப்பாகம் அசைந்து பெரிதாய்ச் சத்தம் போட்டு மடங்கியது.

அசோக் சட்டெனப் பயந்து பின் வாங்கினான். இரண்டு கட்டிலும் இணைந்து போடப்பட்டிருக்கும் பொழுது எப்படி நொறுங்கும் சப்தம் வரும்? இடையே உள்ள கட்டிலின் தாங்கி எங்கு போயிற்று? யோசித்துக் கொண்டே சூட்கேஸ் முயற்சியை கைவிட்டுவிட்டுத் தரையில் குனிந்து போர்வையை விலக்கிப் பார்த்தான். இரண்டு ஷூ கால்கள் முகத்தில் அடிக்க அலறிப் பின் பக்கமாகச் சாய்ந்தான்.

அசோக்கிற்கு ஆயுளில் முதல் தடவையாக நெர்வசாகக் கை கால்கள் ஆடியது.

போர்வையை முழுதும் விலக்கி விலக்கி, அப்படியே உறைந்து போனான்.

மெரூன் கலர் பாண்ட், ஸ்போர்ட்ஸ் டீ ஷர்ட்டில் முகத்தில் ஒரு நமட்டுத்தனமான சிரிப்பு அப்படியே உலவ விழிகள் எங்கோ சுவாரஸ்யமாக அப்படியே பார்த்துக் கொண்டிருக்க அட்டகாசமாகக் கிருஷ்ணகோபால், கே.ஜி. இருந்தான்.

நேர்த்தியாய் அவனைச் சின்ன இருக்கையில் திணித்து இரண்டு கட்டில்களுக்கும் இடையே மெழுகு வைத்துப் பூசி, இண்டிமேட் செண்டை அள்ளித் தெளித்திருந்தார்கள். அசோக் அப்படியே பார்த்துக் கொண்டேயிருந்தான். மூக்கின் அடிவாரத்தில் சன்னமாக ரத்தம் ஊறிக் காய்ந்திருந்தது.

கே. ஜி. யும் இறந்து விட்டான், யாரோ கொலை செய்திருக்கிறார்கள். யார்?

மூளை மரத்துப் போயிருந்தது. வெளியே வந்து கதவைக் கூடச் சாத்தாமல் 555 சிகரெட்டை மாய்ந்து மாய்ந்து ஊதிக் கொண்டே ரிஸப்ஷனில் விசாரித்தான்.

"கே. ஜி வந்தாச்சா?"

"அவர் ரூம்ல போய்ப் பாருங்க! நீங்க யாரு?"

"அசோக்! வக்கீல்! ஹோட்டல் மானேஜரா நீங்க?"

"ஆமாம்...என்?"

"ஒன்றுமில்லை. கே. ஜியைக் கடைசியாய் என்னிக்குப் பாத்திங்க?"

''பதினேழாம் தேதி சாயங்காலம். என் கூடப் பேசிட்டிருந்தார். அட்வான்ஸ் பணம் முழுதும் சரியாயிடுத்துன்னு சொன்னேன். சரின்னு சொல்லி இந்த மாசத்துக்கும் சேர்த்துக் கொடுத்திட்டார்...''

''ரூம் சர்வீஸ் இருக்கா ...இந்த ஹோட்டல்ல...''

''இருக்கு! ஆனா கே. ஜி. அதெல்லாம் வேணும். நானே க்ளீன் பண்ணிக்கறேன்னு சொல்லிவிட்டார்! ரெகுலர் கஸ்டமர். அவர் வாக்கு எங்களுக்கு வேத வாக்கு...''

''டயலாக் போதும்! கடைசியா ஏதாவது போன் பண்ணுனரு? பண்ணியிருந்தார்னு என்னிக்குப் போன் பண்ணுனர் எந்த நம்பருக்குப் போன் பண்ணுனர்?''

''ரீட்டா, இவருக்கு டிடெய்ல்ஸ் கொடு! எக்ஸ்கியூஸ் மி. நீங்க எதுக்கு இந்த இன்ஃபர்மேஷன்லாம் கேக்கறீங்க? சப்போஸ் நான் கொடுக்க முடியாதுன்னு சொன்னா?''

''கொஞ்ச நேரத்துல போலீஸ்காரங்க அன்பா ஸ்டேஷன்ல கூட்டிட்டுப் போய்க் கேட்பாங்க. அப்ப சொல்லுங்க...''

''ஸாரி. ஐ வில் பெக் யுவர் பார்டன்! எனிதிங் சீரியஸ்...''

''முதல்ல டிடெய்ல்ஸ் கொடுங்க...''

''ரீட்டா...''

''யெஸ் சார். 18 ஆம் தேதி மத்தியானம் மூனு நம்பருக்கு லைன் கேட்டாரு. நான்தான் கொடுத்தேன். ஒரு நம்பர் எனக்கே தெரியும். திருவான்மியூர்ல இருக்கற பிரபு வொயின் ஷாப். அவருக்கு அங்க ஹோம் டெலிவரி உண்டு. அடுத்த இரண்டு நம்பரும்......''சொன்னாள்.

இவனுக்குத் தெரிந்தது ஒன்று. அக்னி புத்ரன் நம்பர். இரண்டாவது ஸல்மா — மினி ஹாஸ்டல் நம்பர். ஸல்மா 17 ஆம் தேதி இரவு செத்துப் போயிருக்கிறாள். கிருஷ்ண கோபாலுக்கு அது தெரியாது... 18 ஆம் தேதி ஸல்மாவைத் தேடிப் போன் செய்திருக்கிறான்.

ஆக—கிருஷ்ண கோபால் இந்தக் கொலையைச் செய்யவில்லை.

முனுசாமி செய்யவில்லை.

மினி செய்யவில்லை. பின் யார்?

ரீட்டா — வரவேற்பறைப் பெண் — இவனைப் பார்த்துப் பரபரப்படைந்து கேட்டாள்.

''எக்ஸ்கியூஸ் மீ... என்ன ஆச்சு?...''

''ஒன்றும் ஆகல. கே. ஜி. இஸ் டெட். உங்க ஹோட்டல்ல யாரோ கொலை பண்ணியிருக்காங்க!''

மானேஜர் மூர்த்தி அதிர்ந்து இவன் பக்கம் திரும்பினார்.

இவன் கமிஷனர் ராஜசேகரனுக்கு நம்பரைச் சுழற்றினான்.

பேசினான்.

பின் ஷீதலுக்கு.

''ஈஸ் தேர் எனி போன் ஷீதல் ஃபார் மீ?''

''யா! ஃப்ரம் அக்னிபுத்ரன்......''

''நீயே அக்னிபுத்ரனுக்குப் போன் பண்ணிச் சொல்லு. என் வேலை முடிஞ்சு போச்சு. அவரோட மாப்பிள்ளை மிஸ்டர் கிருஷ்ண கோபால் ஸீ வியூ பீச் ரிசார்ட்ல செத்துக் கிடக்கிறார்னு சொல்லு. போலீஸ்லேயிருந்து இன்ஃபர்மேஷன் அவங்களுக்குக் கிடைச்ச உடனே வரலாம்னு சொல்லு. நடுவுல என் பெயர் அடிபட வேண்டாம்னு சொல்லு. என்னோட கமிட்மெண்ட் முடிஞ்சிடுத்துனும் சொல்லு. தட்ஸ் ஆல்!''

''ஸார்! ஸம்திங் ஸ்ட்ரேஞ் இன் யுவர் வாய்ஸ்! என்ன ஆச்சு? உங்களுக்கு என்ன ஆச்சு?'' இத்தனை நேரப் பரபரப்பும் ஆரவாரமும், அதிர்ச்சியும், சோர்வும் ஒரே நேரத்தில் தாக்க அசோக்கிற்குக் கண்கள் இருண்டன. காலையிலிருந்து சரியாக உபசரிக்காமல் போன வயிறு கூடச் சேர்ந்து சதி செய்ய மெதுவாய்ச் சரிந்தான்.

தூரத்தில் போலீஸ் பூட்ஸ்களின் சத்தம் கேட்டது. சிரிப்பது கேட்டது. இவனுக்கு மிகவும் பரிச்சயமான குரல்கள் அதில் எழுந்தன. யாரோ, ''அசோக்! அசோக்!'' என்றார்கள்.

அசோக் மெது மெதுவாக அப்படியே அமிழ்ந்து போனான்.

# விக்கிரமாதித்தனும் வேதாளமும்

"ஹேய் விக்கிரமா! ஸல்மாவைக் கொலை செய்தது யார்? கே. ஜி. என்கிற கிருஷ்ண கோபால் செத்தது எப்படி? இந்தப் புதிருக்கு விடை என்ன? தெரிந்திருந்தும் மௌனம் சாதித்தால் உன் தலை சுக்கு நூறாகச் சிதறிப் போகும்......" விக்கிரமாதித்தன் தன் தீர்க்கமான கண்களால் இருளைத் துழாவி முகமெல்லாம் பல்லாகக் காடே எதிரொலிக்க—கசங்கிய முகத்துடன் சிரித்துக் கொண்டிருந்த வேதாளத்தைப் பார்த்தான்.

அது தவறு செய்கிறது. என்னைவிட இன்னும் ஆயிரம் ஆண்டுகள் தாண்டிக் கலி யுகத்தில் நிகழப் போகிற கதையைச் சொல்லிப் புதிர் போடுகிறது.

எனக்கு அவகாசம் வேண்டும். வீடியோ, கார், டெலிபோன், பிஸ்டல் இன்னும் பார்த்தேயிராத கேட்டேயிராத விஷயங்களை வைத்து அவற்றின் தன்மைகூடத் தெரியாமல் எப்படிப் பதில் சொல்வது?

ஆனாலும் இதற்குப் பதில் இருக்கிறது.

என்ன அது?

சட்டென்று மின்னல் வெட்டியது. காடு முழுக்க எக்காளித்துப் படபடக்க நிகழ்ந்த பெரிய விபரீதத்தில் எதற்கும் மனந்தளராத விக்கிரமாதித்தன் சின்னச் சத்தத்தோடு ரத்தம் சிதறடிக்க இருட்டில் ரத்தத்தின் நிறம் கரைந்து வந்தது......

MARA PUBLIC LI